வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு வார மலர்
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 12.12.2021 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 07 பக்கங்கள் : 20





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.





08 பசில் ராஜபக்ஷ வின் இந்திய விஜயமும் இலங்கை - இந்திய உறவும்





09 இந்த வால்நட்சத்திரத்தை உங்கள் வாழ்நாளில் ஒருமுறைதான் பார்க்கலாம்





10 ஈரானில் இறங்கிய விமானத்தில் ஆள்மாறாட்டம் செய்த 'மொசாட்'





13 சரிந்தது கோலி இராச்சியம் நிமிர்ந்தது ரோஹித் இராச்சியம்


# சங்கமன்கண்டி தமிழர் பகுதியில் இருட்டோடு வந்தமர்ந்த புத்தர்!

## பிரதேச மக்களின் எதிர்ப்பால் பதற்றம்

அம்பாறை, டிசெம்பர் 12

அம்பாறை மாவட்டம், பொத்துவில் பிரதேச சங்கமன்கண்டி படிமலையடி வாரத்தில் அதிகாலை வேளையில் இருட்டோடு இருட்டாக பௌத்த பிக்குகளினால் சட்டவிரோதமாக புத்தர் சிலை வைக்கப்பட்டதால், பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அந்த பகுதியில் தமிழ் மக்கள் கூடி எதிர்ப்பு தெரிவித்ததால் பெரும் கொந்தளிப்பான நிலைமையேற்பட்டது. 19



## கொரோனாவால் நாட்டில் மேலும் 22 பேர் உயிரிழப்பு

நாட்டில் நேற்றுமுன்தினம் கொரோனா தொற்றால் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,595 ஆக அதிகரித்துள்ளது. (அ)

## யாழ்.செயலகம் முதலிடம்!



யாழ்ப்பாணம், டிசெ 12

அரச துறை நிறுவனங்களுக்கான வினைத்திறனான சேவையை மதிப்பிடும் பொருட்டு தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தால் நடத்தப்பட்ட 2020ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டித் தொடரில் தேசிய ரீதியில் 19

## தமிழ் பேசும் கட்சிகள் இன்று கொழும்பில் முக்கிய சந்திப்பு

### அரசியல் தீர்வுக்காக ஓரணியில் சங்கம்

கொழும்பு, டிசெ. 12

தமிழ் பேசும் கட்சிகளின் முக்கியத்துவமிக்க கலந்துரையாடல் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் 19

## ஒமைக்ரோனில் இருந்து பூஸ்டர் 75 வீதம் பாதுகாப்பு அளிக்கிறது!

### இங்கிலாந்து விஞ்ஞானிகள் தகவல்

லண்டன், டிசெ. 12

மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி ஒமைக்ரோன் தொற்று நோயாளிகள் சுமார் 75 வீதம் பேருக்கு எந்த கோவிட் அறிகுறிகளும் வராமல் தடுக் 19

## அரசுக்குள் இருந்து மூன்று பேர் சூழ்ச்சி

### அவர்களை விரட்டியடிக்க வேண்டும் என்கிறார் இராஜாங்க அமைச்சர் ரொஷான்

கொழும்பு, டிசெ. 12

"அரசுக்குள் இருக்கும் மூவரே அரசின் பயணத்தை திட்டமிட்ட அடிப்படையில் குழப்புகின்றனர். அவர்களை விரட்டியடிக்க வேண்டும்." 19

## மீண்டும் மின் தடை!

கொழும்பு, டிசெ. 12

நாட்டில் மீண்டும் மின்சாரத் தடை அமுலாகவுள்ளது.

நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தில் உள்ள ஒரு மின்பிறப்பாக்கி பழுதடைந்த நிலையில், அது தேசிய மின் கட்டமைப் 19

## தபால் திணைக்கள ஊழியர்கள் போராட்டத்தில் இறங்க தீர்மானம்

கொழும்பு, டிசெ. 12

இலங்கை தபால் திணைக்களத்தின் அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து நாளை திங்கட்கிழமை முதல் 32 மணித்தியால அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளன.

பல்வேறு 19

## முகமாலையில் மனித எச்சங்கள் விடுதலைப்புலிகளுடையவையா?

கிளிநொச்சி, டிசெ. 12

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையின்போது தமிழீழ விடுதலைப்புலிகளுடையவை என நம்பப்படும் மனித எலும்புக்கூட்டு எச் 19

### இலங்கையில் போர்க்குற்றங்களில் ஈடுபட்ட

## 2 இராணுவ அதிகாரிகளுக்கு தடை விதித்தது அமெரிக்கா!

கொழும்பு, டிசெ. 12

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் மேலும் இரண்டு இலங்கை 19

### கரன்னகொடவின் நியமனம்:

## உள்நாட்டு, சர்வதேச மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கடும் அதிருப்தி!

கொழும்பு, டிசெ. 12

வடமேல் மாகாண ஆளுநராக முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட நியமிக்கப்பட்டமை தொடர்பாக உள்நாட்டு மற்றும் சர்வதேச செயற்பாட்டாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். 19



வீட்டிற்கும் வேலைக்கும் வாசற்படியில்
Door to Door delivery
Any time Including Curfew
தங்கும் அறைகள், உணவகம்/Rooms & Restaurant
இறைச்சி கோழி
Virónthu @ Yarl Pardy
49-51 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். Amman Road, Nallur, Jaffna.
அறுசுவை உணவுகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்
077 734 0026
021 222 6868

## 2 இராணுவ...

இராணுவ அதிகாரிகளுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான தடைகளை அமெரிக்க வெளியுறவுத்துறை மேலும் விரிவுபடுத்தியுள்ளது.

அமெரிக்காவின் விரிவுபடுத்தப்பட்ட தடைப் பட்டியலில் கொழும்பில் 2008 / 09 காலப்பகுதியில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முக்கிய சந்தேக நபராக குறிப்பிடப்படும், சிறிலங்கா கடற்படையின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான நேவி சம்பத் என அழைக்கப்படும், லெப்.கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெற்றியாராச்சி மற்றும் யாழ்ப்பாணம் - மிருசுவில் பகுதியில் சிறுவர்கள் உட்பட எட்டு தமிழர்களை கொலை செய்த குற்றச்சாட்டின் கீழ் மரண தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்ட முன்னாள் இராணுவ சார்ஜன்ட் ஆர்.எம்.சுனில் ரத்நாயக்க ஆகியோரே உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தடைப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அவர்களது குடும்பத்தினரும் அமெரிக்காவிற்குள் நுழைய தடை அமுலில் இருக்கும்.

போர்க்குற்றங்களில் ஈடுபட்டதற்காக அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்ட இலங்கைப் படைத் தரப்பைச் சேர்ந்த இரண்டாவது மற்றும் மூன்றாவது அதிகாரிகள் இவர்கள் ஆவர்.

2020 ஆம் ஆண்டில், இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அமெரிக்காவிற்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டது, அவரது கட்டளைப் பொறுப்பின் மூலம், மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டது பற்றிய நம்பகமான தகவல்கள் காரணமாக எங்கள் வெளியுறவுக் கொள்கையின் மையத்தில் மனித உரிமைகளை வைப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் எங்கு நடந்தாலும் அவற்றின் மீது கவனத்தை ஈர்க்கவும் பொறுப்புக்கூறலை மேம்படுத்தவும் பொருத்தமான கருவிகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த உறுதிப்பாட்டை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம் எனவும் அமெரிக்கா கூறியுள்ளது.

கொழும்பில் 2008 / 09 காலப்பகுதியில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முக்கிய சந்தேக நபராக குறிப்பிடப்படும், இலங்கை கடற்படையின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான நேவி சம்பத் என அழைக்கப்படும், லெப்.கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெற்றியாராச்சி கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அமெரிக்காவில் விரிவுபடுத்தப்பட்ட தடைப் பட்டியலில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த இருவர் உட்பட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 15 பேர் மற்றும் 10 நிறுவனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## மீண்டும்...

பில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

இதனால் எதிர்வரும் தினங்களில் நாளாந்தம் மாலை 6.30 தொடக்கம் 9.30 மணி வரையான காலப்பகுதியில் 30 நிமிடமின் தடை நாட்டின் சில இடங்களில் பதிவாகும் என்று சக்தி வலு அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

## முகமாலையில்...

சங்கள், ஆயுதத் தளபாடங்கள் உட்பட்ட வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்தப் பொருட்கள் தொடர்பில் பளைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில் பளை பொலிஸாரால் கிளிநொச்சி நீதிமன்றின் கவனத்துக்கு குறித்த விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நீதிமன்றத்தின் அனுமதியுடன் இன்று அகழ்வு நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆர்.பி.ஜி உந்துகணை செலுத்தி உட்பட்ட வெடிபொருள்களும் விடுதலைப் புலிகளின் வரிச் சீருடை எச்சங்களும் மனித எலும்புக்கூட்டு எச்சங்களும் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவற்றின் அடிப்படையில் குறித்த பொருள்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுடையவையாக இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

பல மாதங்களுக்கு முன்னர் இதே பகுதியில் விடுதலைப்புலிகளின் பெண் போராளிகளுடையவை என நம்பப்படும் அடையாள எச்சங்களும் சீருடைகளும் மீட்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## தமிழ் பேசும்...

பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் தமிழ்த் தேசியக் கட்சியின் என்.ஸ்ரீகாந்தா உள்ளிட்டவர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர்.

அதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இந்தச் சந்திப்பில் பங்கேற்பார் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

தமிழ் பேசும் சமூகத்தின் அரசியல் உரிமைகளுக்காகத் தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் ஏற்பாட்டில் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ)

## ஒமைக்ரோனில்...

கிறது என இங்கிலாந்து விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஒமைக்ரோன் திரிபுக்கு எதிரான நோயெதிர்ப்பு ஆற்றலை மேம்படுத்த இரண்டு தடுப்பூசிகள் போதாது என இது குறித்த ஆய்வு முடிவில் இங்கிலாந்து விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

ஒமைக்ரோன் மற்றும் டெல்டா வைரஸ் திரிபுகளுக்கு எதிரான தடுப்பூசிகள் குறைந்தளவு செயல்திறனை வெளிப்படுத்துவதாக ஆரம்பப் பகுப்பாய்வு முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

ஆனால் மூன்றாவது பூஸ்டர் சுமார் 75 வீதம் பேருக்கு எந்த கோவிட் அறிகுறிகளும் வராமல் தடுக்கிறது என இங்கிலாந்து விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (அ)

## தபால் திணைக்கள...

கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் 32 மணி நேர வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதன்படி 13ஆம் திகதி திங்கள் மாலை 4 மணி முதல் 14 ஆம் திகதி செவ்வாய் நள்ளிரவு 12 மணி வரை வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் சாந்தகுமார மீகம தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கல்வி கூட்டுறவு பொது ஊழியர் சங்கம் தமக்கான 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குமாறு கோரி ஆரம்பிக்கப்பட்டுள்ள பணிப்புறக்கணிப்பு போராட்டம் எதிர்காலத்தில் மேலும் தீவிரப்படுத்தப்படும் எனக் கல்வி கூட்டுறவு பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் நந்தன ஹேவகே தெரிவித்துள்ளார். (இ)

## சங்கமன்கண்டி...

அம்பாறை மாவட்ட பொத்துவில் பிரதேச செயலாளரின் நிர்வாக எல்லைக்குட்பட்ட தாண்டியடி சங்கமன்கண்டி படிமலை அடிவாரத்தில் நேற்று அதிகாலை 4 மணியளவில் பௌத்த பிக்குகளினால் சட்டவிரோதமாக புத்தர் சிலையொன்று கொண்டு வந்து வைக்கப்பட்டது.

இந்த பகுதியில் ஏற்கனவே இரண்டு முறை புத்தர் சிலைகளை வைக்கும் முயற்சியில் பிக்குகள் ஈடுபட்டபோதும், அவர்களின் கைங்கரியம் முறியடிக்கப்பட்டிருந்தது. பிக்குகள் புத்தர்சிலையுடன் வந்தபோது மக்கள் ஒன்றுகூடி விரட்டியடித்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று அதிகாலை இருட்டோடு இருட்டாக புத்தர் சிலை வைக்கப்பட்டது.

பொத்துவில் மூகுது மஹா விகாராதிபதி தலைமையில் சுமார் 10 பிக்குகள், சிங்கள பொதுமக்கள் கொண்ட குழுவினர் புத்தர் சிலையை வைத்தனர்.

விடிந்ததும் தகவலறிந்த தாண்டியடி மற்றும் சங்கமன்கண்டி கிராம தமிழ் மக்கள் அணி திரண்டு புத்தர் சிலை வைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் புத்தர் சிலையை உடனடியாக அங்கிருந்து அகற்றக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

காரைதீவு, பொத்துவில், திருக்கோவில் பிரதேசசபைகளின் தவிசாளர்களும் சம்பவ இடத்துக்கு வந்தனர்.

மக்கள் பிரதிநிதிகள் பிக்குகளிடம் புத்தர் சிலையை அகற்றுமாறு கலந்துரையாடல்களில் ஈடுபட்டபோதும் பௌத்த பிக்கு அதற்கு உடன்படவில்லை.

இதனையடுத்து காரைதீவு தவிசாளர் கே.ஜெயசிறீல், திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் இ.வி.கமலராஜன் மற்றும் பொத்துவில் தவிசாளர் ஏ.ரஹீம், உதவி தவிசாளர் பார்த்தீபன் உட்பட பல பிரமுகர்களும் மற்றும் கிராம மக்களும் வீதியில் அமர்ந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

'இன்று (நேற்று) அதிகாலை 4 மணியளவில் புத்தர் சிலை வைக்கப்பட்டது. அங்குள்ள மயானத்துக்கு அருகில் ஏற்கனவே இரண்டு முறை புத்தர் சிலை வைக்க முயற்சிக்கப்பட்டு, முறியடிக்கப்பட்டது. பொத்துவில் பிரதேச செயலாளர், அம்பாறை உதவி அரசாங்க அதிபருக்கு தொலைபேசி வழியாக நான் தகவல் வழங்கினேன்.

பிரதேச செயலாளர் வந்து பௌத்த பிக்குகளுடன் ஒரு கலந்துரையாடல் நடத்தினார். பிக்குகளை அங்கிருந்து வெளியேறும்படி பிரதேச செயலாளர் அறிவுறுத்தியதையடுத்து, பிக்குகள் வெளியேறினர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களையும் கலைந்து செல்லுமாறு கூறிய பிரதேச செயலாளர், 2 நாட்களில் இதற்கான முடிவை அறிவிப்பதாக தெரிவித்தார்.

தற்போது, புத்தர் சிலைக்கு பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.

பொலிஸாரும் பிக்குகளுக்கு சாதகமாக செயற்பட்டனர். மத குருமாருக்கு எதிராக தம்மால் செயற்பட முடியாதென அவர்கள் தெரிவித்தனர். சைவ மதகுரு ஒருவர் பிள்ளையார் சிலையுடன் சென்று, சிங்கள பகுதியில் நிறுவினால் என்ன செய்வீர்கள் என கேட்டேன்-என்றார். (அ)

## உள்நாட்டு,...

11 இளைஞர்கள் கடத்தப்பட்ட விவகாரத்தில் வசந்த கரன்னகொட சிறையில் இருக்கவேண்டும் என்றும் இதற்கு மாறாக உயர் அதிகாரங்களை வழங்கும் பதவிகளுக்கு அவரை நியமிப்பது தவறு என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலையிலான அரசாங்கம் காண்பித்துவரும் அலட்சியப் போக்கை இந்த நியமனம் தெளிவாக வெளிப்படுத்தி இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனவே ஒட்டுமொத்த சர்வதேச சமூகமும் இனப் படுகொலை, மனி உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக தடைகளை விதிக்கவேண்டிய தருணம் இது என கனேடியத் தமிழர் தேசிய அவை கேட்டுள்ளது.

தண்டனைகளில் இருந்து தப்பிக்கும் போக்கு இலங்கையில் விரிவடைந்து வருவதாகவும் போர்க் குற்றச்சாட்டு உள்ளவர்கள் நாட்டின் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதன்மூலம் படுகொலை தொடர்பான குற்றச்சாட்டுக்களை மூடிமறைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் கனேடிய தமிழர் தேசிய அவை சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பிராந்திய ஆய்வாளர் த்யாகி ருவன் பத்திரண அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்

11 கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட வழக்கில் தொடர்புபட்டிருக்கக்கூடிய வசந்த கரன்னகொட அதற்காக சிறையில் இருக்கவேண்டுமே தவிர, உயர் அதிகாரத்தை வழங்கும் பதவிகளுக்கு நியமிக்கப்படக்கூடாது என்று அவர் அப்பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வருட சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் இலங்கையைப் பொறுத்தமட்டில் குற்றவாளிகள் சட்டத்திலிருந்து தப்பிப்பது மாத்திரமன்றி, அவர்களுக்கு முக்கியமான உயர்பதவிகளும் வழங்கப்படும் என்ற விடயம் நினைவுறுத்தப்பட்டுள்ளது என சட்டத்தரணியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான பவானி பொன்சேகா குறிப்பிட்டார்.

அதுமாத்திரமன்றி இந்த நியமனம் தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்கு மற்றும் அதிகரித்த இராணுவமயமாக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்தியிருப்பதுடன் அரசியல் ரீதியான பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் கோட்டாபய அரசாங்கம் காண்பித்துவரும் அலட்சியப்போக்கு குறித்த தெளிவான செய்தியையும் வழங்கியிருக்கிறது என்றும் அவர் கூறினார். (அ)

## அரசுக்குள்...

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது: -

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவிக்கு நிமல் சிறிபால டி சில்வாவே தெரிவாகியிருக்க வேண்டும். எனினும், அப்பம் சாப்பிட்டுவிட்டு, கட்சி தாவிச் சென்றவர் மீண்டும் வந்து, அந்தப் பதவியைப் பெற்றுக்கொண்டார். தற்போது விளம்பர அரசியலை அவர் முன்னெடுத்து வருகின்றார்.

அரசிலுள்ள மூவரே பயணத்தைக் குழப்புகின்றனர். அவர்களின் பெயர் விபரம் விரைவில் வெளியிடப்பட வேண்டும். அவ்வாறானவர்களை அரசிலிருந்து விரட்டியடிக்க வேண்டும்" - என்றார். (இ)

## யாழ்.செயலகம்...

யாழ்.மாவட்ட செயலகம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

அரச துறையில் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான போட்டித் தொடரில் பங்குகொண்ட யாழ் மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களும் வெற்றி பெற்றுள்ளன.

தெல்லிப்பளை பிரதேச செயலகம் முதலாம் இடத்தையும் யாழ்ப்பாணம், தென்மராட்சி, பருத்தித்துறை பிரதேச செயலகங்கள் இரண்டாம் இடத்தையும் சண்டிலிப்பாய், கோப்பாய், கரவெட்டி மற்றும் மருதங்கேணி பிரதேச செயலகங்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

மேலும்,உடுவில், காரைநகர், சங்கானை, ஊர்காவற்றுறை மற்றும் வேலணை பிரதேச செயலகங்கள் சிறப்பு மெச்சுரை விருதையும் நெடுந்தீவு பிரதேச செயலகம் மெச்சுரை விருதினையும் பெற்றுள்ளது.

அந்தவகையில் யாழ் மாவட்ட செயலகம் தேசிய ரீதியாக மாவட்ட தரப்படுத்தலில் முதலிடம் பெற்றிருப்பதுடன் பங்குபற்றிய 14 பிரதேச செயலகங்களும் பொதுமக்கள் சேவை வழங்கலில் சிறந்த அங்கீகாரத்துக்கான அடையாளத்தை வெளிப்படுத்தியுள்ளதாக தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், இவ்வெற்றியானது யாழ் மாவட்டம் முழுவதுமான நிர்வாக ரீதியாக கிடைத்த சிறந்த அங்கீகாரம் ஆகும் என தெரிவித்துள்ளார். (அ-03)

## இப்படியும் நடக்கிறது!

புதிதாக பாடசாலைக்கு வந்த ஆசிரியை ஒருவர் வகுப்பறையில் பாடம் எடுக்க நுழைந்தார். மாணவர்களிடம் கலகலப்பாக பழக வேண்டும் என்ற காரணத்திற்காக,

“இந்த வகுப்பில் யார் யாரெல்லாம் முட்டாள்களோ அவர்கள் எழுந்து நிற்கலாம். நான் ஒன்றும் கோபித்துக் கொள்ள மாட்டேன்” என்றார்.

மாணவர்கள் மௌனமாக அமர்ந்திருந்தனர்.

அப்போது குறும்புக்கார மாணவன் ஒருவன், நாற்காலியின் மீது ஏறி நின்றான். ஆசிரியரும் “பரவாயில்லையே தைரியமாக எழுந்து நிற்கிறாயே” என்றார். அதற்கு அந்த மாணவன்,

“இல்லை டீச்சர் நீங்கள் மட்டும் தனியாக நின்று கொண்டிருக்கிறீர்கள். எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அதனால் தான் துணைக்கு நானும் நிற்கிறேன்” என்றான்.

அண்மையில் கனடா சென்றிருந்த மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கிய ராகுல், அங்கு பல்வேறு வைபவங்களில் கலந்துகொண்டார். அப்போது அவர் தான் சொல்லவேண்டியவை எல்லாவற்றையும் சொல்லி முடித்துவிட்டு, பேச்சை நிறுத்தும்போது, இதற்குமேலும் பேச விரும்பவில்லை. தமிழரசுக்கட்சியில் சில தலைவர்கள் இருக்கிறார்கள் மணிக்கணக்காக பேசுவார்கள். அவர்களைப் போல நான் உங்கள் நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை என்று கூறி முடிப்பார். யாரை கிண்டல் செய்தார் என்பது தெரியவில்லை. ஆனால் அவர் தனது கட்சியில் உள்ள ஒருவரையே கிண்டல் செய்தார் என்பது தெரிந்ததே.

நேற்றைய பத்தியில் அவரது பெயர் குறித்து எழுதியிருந்தேன். நண்பர் ஒருவர் தொலைபேசியில் அழைத்து “அப்படியெனில் அவரது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் இனம் என்பது இலங்கைத் தமிழ் என்றுதான் இருக்கிறதா” என்று கேட்டார். அதற்கு என்னிடம் பதில் இருக்கவில்லை. அதை நான் பாக்காதவரை சொல்லமுடியாது தானே. அவர் கூடவே ஒரு கேள்வியையும் கேட்டார். அப்போ நமது சுமந்திரனின் பெயர் என்ன என்று?

அவரது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் முழுப்பெயர் ஆபிரகாம் சுமந்திரன் என்றுதான் இருக்கவேண்டும். அதனால் தான் கடந்த தேர்தலில் அவருக்கு முதலாவது இலக்கம் வழங்கப்பட்டது.

அவரது தந்தை பெயர் மதியாபரணன். நாம் தமிழர்கள் பெயர்களை எழுதுவதென்றால் ம. ஆபிரகாம் சுமந்திரன் என்றுதான் எழுதுவோம். நாம் நமது பெயரையே சுருக்கி ம.ஆ. சுமந்திரன் என்று எழுதுவது வழக்கத்தில் இல்லை. ஆனால் அவர் எழுதுவது தவறும் இல்லைத்தானே என்றேன். காத்தமுத்து சிவானந்தன் காசி ஆனந்தன் ஆகியது போல.

கனடாவில் நமது சாணக்கிய, கலந்துகொண்ட ஊடக பேட்டியொன்றில், அவர் முதலில் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அவரது கட்சியில் இணைந்து அரசியல் செய்தது குறித்து ஊடகவியலாளர் கேட்டபோது, அவர் சொன்னார்,

எனது இருபத்தியோராவது வயதில் அறியா வயதில் செய்த தவறு அது என்று.

அவர் இதன் மூலம் சொல்ல வருவது ஒன்றும் இரகசியமானதல்ல.

தமது பதின்ம வயதில் சாவையும் ஏற்றுக்கொண்டு போராடப்புறப்பட்டு, பின்னர் தமது உயிர்களை ஈழப்போராட்டத்திற்காக ஆகுதி ஆக்கியவர்கள் எல்லாம் அறியாப் பருவத்தில் செய்த தவறுதான் என்பதைத்தான் அவர் அப்படிச் சொல்லியிருக்கிறார்.

பேட்டி முடிந்ததும், அந்த ஊடகவியலாளர் ஒரு கேள்வியை தனிப்பட்ட முறையில் கேட்டிருக்கிறார். அந்த அமெரிக்க பயணம் குறித்து ஏன் முன்கூட்டியே பங்காளிக்கட்சிகளுக்கு கூறவில்லை என்று.

அதற்கு அவர் சொன்னாராம், பங்காளிக் கட்சி தலைவர்களும் கலந்துகொண்ட ஒரு சந்திப்பில் வைத்துதான் அமெரிக்க தூதுவர் இதற்கான அழைப்பை விடுத்தார். ஆனால் அவர் ஆங்கிலத்தில் அழைப்பு விடுத்தது அவர்களுக்கு புரிந்திருக்காது என்று.

செல்வத்திற்கு புரியாமல் இருக்கலாம் என்பது சரி, தர்மலிங்கத்தின் மகன் சித்தார்த்தனுக்கும் ஆங்கிலம் புரியாதோ? அவர் லண்டனில் வாழந்தவர்தானே என்று அந்த ஊடகர் திரும்பிக் கேட்டிருக்கிறார், அதற்கும் அவர், அமெரிக்க அக்ஷன் அவருக்கும் புரியயில்லைப்போல என்றாராம்.

அந்த ஊடகரும் ஒரு முன்னாள் புளொட் போராளி என்பது சாணக்கியவுக்கு தெரிந்திருக்காது. அவரது இந்த பதிலைக் கேட்டு சிரிப்பதைத் தவிர அவருக்கு வேறு மார்க்கம் இருக்கவில்லை.

அது சரி, செல்வத்திற்கு புரிந்திருக்காது என்பது தலைவர் சம்பந்தனுக்கும் தெரிந்ததுதானே, அப்படியெனில் ஒரு தலைவராக அவர் என்ன செய்திருக்கவேண்டும்? அங்கிருந்தவர்களுக்கு அமெரிக்கத் தூதுவர் இப்படிக் கேட்கிறார். நாம் போவதைவிட நமது சட்டவியலாளர்களை அனுப்புவோம் என்று கேட்டிருக்க வேண்டாமா? இதுதானே கூட்டணித் தர்மம்.

மொழி அறிவு பற்றிய இந்த விசயத்தைப் பற்றி எழுதும் போது இன்னுமொரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகின்றது.

அதுபற்றி நாளை பேசுவோம்.

**- ஊர்க்குருவி**

## பேராசிரியர் கைலாசபதி நினைவுக் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், டிசெ 12,

பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் 39 ஆவது ஆண்டு நினைவுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில் இல. 62, கே.கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கூட்டத்தில் தொடக்கவுரையினை ஆசிரியர் த.ஸ்ரீபிரகாஸ் அவர்களும் விசேட உரைகளை இ.சத்தியமலர், ச.சஸீலன், இ.கார்த்திகாஜினி, கா.சிந்துஜா, ச.கோபிகா, சி.தனுராஜ், சு.விஸ்ணுசாந்தினி, பா.கஜீபா, வ.கிந்துஜா, நா.கபிலன் ஆகியோரும் நிறைவுரையினைத் ‘தாயகம்’ சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவருமான க.தணிகாசலம் அவர்களும் ஆற்றவுள்ளனர்.

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் தெரிவித்துள்ளனர்.

## இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 12

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் ன் 58 ஆவது கதையாடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.00 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளர் சந்திரிக்கா தர்மரட்ணம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நாடகம் என்னும் விடயப் பொருளில் கதையாடவுள்ளார் .

நிறைவுரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்கள்.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 8261, கடவுச்சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## ‘குந்தவையின் சிறுகதைகள்’ கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 12

இலக்கியவெளி நடத்தும் இணைய வழி கலந்துரையாடல் நிகழ்வாக “குந்தவையின் சிறுகதைகள்” குறித்த கலந்துரையாடல் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது.

இந்திய நேரம் - மாலை 7.00
இலங்கை நேரம் - மாலை 7.00
கனடா நேரம் - காலை 8.30
லண்டன் நேரம் - பி.ப. 1:30
Join Zoom Meeting:
Meeting ID: 389 072 9245
Passcode: 12345

## கல்வி tv CHANNEL-1

**12.12.2021 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி tv CHANNEL - 2

**12.12.2021 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
12.12.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# இராணுவ அதிகாரிகள் மீதான அமெரிக்க தடை?

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மேலும் இரண்டு சிறீலங்கா இராணுவ அதிகாரிகள் மீது தடைவித்திருக்கின்றது. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே மேற்படி தடைவிதிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை -11 என்று அழைக்கப்படும் - திருகோணமலை படுகொலையுடன் தொடர்புடையவராக கருதப்படும், கடற்படை புலனாய்வு அதிகாரி - சந்தன ஹெட்டியாராச்சி மற்றும் 2000ஆம் ஆண்டில், 8 தமிழ் கிராமவாசிகளின் படுகொலையுடன் தொர்புடைய இராணுவ அதிகாரி, சுனில் ரத்நாயக்க ஆகியோர் மீதே மேற்படி தடை விதிக்கப்பட்டுள்ளது. இவர்களும், இவர்களது குடும்ப உறுப்பினர்களும் அமெரிக்காவிற்குள் நுழைய முடியாதவாறு குறித்த தடை விதிக்கப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவர்கள் மீது, அமெரிக்க சட்டத்தின் கீழ், இராஜாங்கத் திணைக்களம் தடைகளை விதிப்பதுண்டு. அந்த அடிப்படையிலேயே குறித்த இரண்டு சிறிலங்கா படையதிகாரிகள் மீதான தடையை அமெரிக்கா அறிவித்துள்ளது.

2020இல், இலங்கையின் இராணுவத் தளபதி, சவேந்திர சில்வா மீது, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இவ்வாறானதொரு தடையை விதித்திருந்தது. இன்று வரையில் அந்த தடை தொடர்கின்றது. இலங்கையின் பொறுப்பு கூறல் விடயத்தில் அமெரிக்காவின் ஒத்துழைப்பானது, மேற்படி தடையுடன் மட்டுப்பட்ட ஒன்றல்ல - என்றும் இராஜாங்கத் திணைக்கள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பைடன் நிர்வாகம் மீளவும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து பணியாற்றவுள்ள நிலையில்தான், அதன் முதல் படியாக, மேற்படி தடைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. பைடன் நிர்வாகம், இலங்கை தொடர்பில் எவ்வாறான நகர்வுகளை மேற்கொள்ளக் கூடுமென்பது தொடர்பில், 'ஈழநாடு' ஏற்கனவே தெளிவான கணிப்பை மேற்கொண்டிருந்தது.

மனித உரிமைகளை பாதுகாத்தல் என்பது, அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையின் அடிப்படைகளில் ஒன்றாகும். அமெரிக்காவில் எவர் ஆட்சியிலிருந்தாலும் - மனித உரிமைகள் சார்ந்த அமெரிக்க அணுகுமுறைகளில் மாற்றங்கள் இருப்பதில்லை. இலங்கையின் இராணுவ தளபதியின் மீதான தடைவிதிக்கப்பட்ட போது, அமெரிக்கா, டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான குடியரசு கட்சியின் நிர்வாகத்தின் கீழிருந்தது. இப்போது, பைடன் நிர்வாகத்தில் மேலும் இரண்டு இராணுவ அதிகாரிகள் மீது தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. இவற்றை மேலோட்டமாக பார்த்தால், ஒரு சிலரின் மீதான தடைபோன்று தெரியலாம் - ஆனால், அடிப்படையில் இது தற்போதைய ஆட்சியாளர்கள் மீதான மேற்குலக அதிருப்தியின் வெளிப்பாடாகும்.

உலக ஒழுங்கோடு ஒத்துப்போக மறுக்கும் ஆட்சியாளர்களை வழிக்கு கொண்டுவரும், ஓர் உக்தியாகவே மேற்படி தடைகள் விதிக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் பைடன் நிர்வாகம் ஐ.நா - மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து செயற்படவுள்ள சூழலில், நாம் ஏற்கனவே கணித்தது போன்று, மனித உரிமைகள் சார்ந்து சில கூடுதல் அழுத்தங்கள் ஏற்படலாம். நாம் தொடர்ந்து கூறிவருவது போல், இவ்வாறான அழுத்தங்களின் இலக்கு மேற்குலகுடன் முரண்டு பிடிக்கும் - முக்கியமாக, சீனாவுடன் நெருங்கிச் செல்ல முற்படும் ஆட்சியாளர்களை வழிக்கு கொண்டுவரும் ஓர் உபாயம் மட்டுமே! - ஆனால், இவற்றால் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு சாத்தியப்படுமென்று எதிர்பார்த்தால் அது தவறானது.

இவ்வாறான அழுத்தங்களின் இறுதி இலக்கு ஒன்றுதான் - அதாவது, ஒன்றில் முரண்டு பிடிக்கும் ஆட்சியாளர்களை வழிக்கு கொண்டுவருவது - அல்லது, ஆட்சியாளர்களை மாற்றுவது. 2012இலிருந்து கொடுக்கப்பட்ட மேற்குலக அழுத்தங்களின் இறுதி விளைவாக வந்ததே 2015 ஆட்சி மாற்றம். இப்போதும் முன்னரைப் போன்றதோர் அரசியல் சூழலே காணப்படுகின்றது. ஒரு வேளை கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியாளர்கள் கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொண்டு, அதனடிப்படையில் புத்திசாலித்தனமான முடிவுகளை எடுப்பார்களாயின், நிலைமைகள் சுமுகமாகவும் முடிவுறலாம். இல்லாவிட்டால், மீளவும் ஆட்சி மாற்றத்தில் முடிவுறலாம். ஆனால் எது நடந்தாலும் - அவற்றால் தமிழ் மக்களுக்கு நன்மை வருவதும் - வராமல் விடுவதும் - தமிழ் மக்களின் தலைமைகள் என்போரின், ஆற்றலில்தான் தங்கியிருக்கின்றது. வாய்ப்புக்களை தவறவிட்டுவிட்டு - மற்றவர்கள் எங்களை ஏமாற்றிவிட்டார்கள் என்று ஒப்பாரி வைப்பதில் எவ்வித பயனுமில்லை. இதுவரை இதுதான் நடந்திருக்கின்றது.

# மோடியின் அழைப்பும் வெற்றியின் நகர்வும்

- மாலி -

*'பிரச்னைகளில் காலத்தைக் கடத்தினால் பிரச்னைகள் தாமாகவே தீர்ந்து போகும்' - ஜே. ஆர். ஜயவர்த்தன ஆட்சிக் காலத்தில், அவர் பின்பற்றிய - அவரின் அறிவுரையான ஒரு கொள்கை இது. இலங்கையில் இனப் பிரச்னையின் ஆரம்பம் தொடக்கமே ஜே. ஆர். ஜயவர்த்தனவும் அதனுடன் முக்கியமான ஒருவராக தொடர்ந்தவர். ஆக, இது சிங்கள இராஜதந்திர கொள்கை ஒன்றாகவே இருந்துவருகிறது.*

*ஜயவர்த்தன ஆட்சிக் காலத்தில், 'நல்லவர் செய்யாததை நாள்கள் செய்யும்' என்றொரு வாசகத்தை அமிர்தலிங்கம் கூறிவந்தார். அந்த 'நாள்கள்' எப்போதோ ஆனால், சுதந்திர நாளிலிருந்து இன்றுவரை, 'தாமாகவே தீர்ந்து போகும்' என்ற சிங்கள இராஜதந்திரம் ஈட்டும் வெற்றியை நோக்குவதற்கு, கண்ணாடி வேண்டியதில்லை. கவனித்தால் அது நன்றாகவே தெரிந்துவிடும்.*

*இலங்கை சுதந்திரம் பெற்ற சோல்பரி அரசியலமைப்புக்கு பின்னர், இரண்டு புதிய அரசியலமைப்புக்கள் வந்தன. இவ்விரு புது அரசியலமைப்புக்களும் தமிழ் மக்களின் பங்குபற்றுதலின்றியே வரையப்பட்டு, இரண்டுமே தமிழ் மக்களினால் ஏற்றுக்கொள்ளப் படாவிட்டாலும், தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் அவை சிலவற்றை உள்ளடக்கியிருந்தன. இலங்கையில் தாங்கள் ஒரு தனித்த மொழி, மத, கலாசாரத்துடன் தனி பாரம்பரிய பிரதேசத்தையும் கொண்ட தேசிய இனம் என்பது, இலங்கையில் தமிழர்களுடைய அரசியல் நிலைப்பாடு. இந்த அடிப்படை உரிமைகளுடனான வாழ்வை நோக்கியதாக அவர்களின் அரசியல் உரிமைப் போராட்டம் இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் தொடர்கிறது.*

*முப்பது ஆண்டுகள் தொடர்ந்த சாத்வீக வழி போராட்டத்தில், பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தமும், டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தமும் ஏற்பட்டன. இலங்கையில் சமஷ்டி ஆட்சி முறையைக் கோரிய இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாய கம், இலங்கையில் ஆட்சி அமைத்த இரு பிரதமர்களுடன் செய்த இரு ஒப்பந்தங்களும் அதிகார பரவலாக்கலில் முறையே பிரதேச சபைகளையும், மாவட்ட சபைகளையும் அமைப்பதான உடன்பாட்டுடன் கைச்சாத்தானவை. ஆனால், இலங்கையின் அரசியல் வரலாற்றில் இனப் பிரச்னை தொடர்பில் இடம்பெற்ற ஒரு நடவடிக்கையாக மட்டுமே இவ்வொப்பந்தங்கள் இரண்டும் நிலைபெறு கின்றன.*

*சமஷ்டி கோரிக்கையைக் கைவிட்டு தனிநாடு கோரிக்கையை எஸ். ஜே. வி. செல்வநாயகம் முன்வைத்தவேளையில், ஜே. ஆர். ஜயவர்த்தன மாவட்ட அபிவிருத்தி சபைகளைக் கொணர்ந்தார். இக் காலப்பகுதி, இலங்கைத் தமிழரின் அரசியல், சாத்வீக வழியிலிருந்து ஆயுத வழிக்கு மாறும் காலமாகவிருந்தது.*

*ஆயுத போராட்டம் தீவிரமடைய தொடங்கிய காலத்தில் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர் ஜயவர்த்தனவும் கைச்சாத்திட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக, இலங்கை அரசியலமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டமாக மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.*

*சாத்வீக வழி போராட்டத்தின் பின்னர் முப்பது ஆண்டுகள் தொடர்ந்த ஆயுத வழி போராட்டம் 2009இல் முடிவுற்றது. 'சமஷ்டி', 'தனிநாடு' எல்லாமே மௌனிக்க, தமிழ்த் தேசியம் என்ற கோஷத்துடன் தமிழர்களின் ஜனநாயக வழி பாராளுமன்ற அரசியல் இப்போது ஒரு தசாப்தத்துக்கு மேலாக தொடர்கிறது. யுத்தத்தில் கற்றுக்கொண்ட பாடமாக, இனப்பிரச்னைக்கு நியாயமான ஒரு தீர்வின்றி, யுத்தத்தில் வெற்றிகொண்ட இனமும் தோற்கடிக்கப்பட்ட இனமுமான நிலையில், இக் காலகட்ட அரசியல் இப்போது நிகழ்கிறது.*

*ஆனால், யுத்த வெற்றிக்கு அப்பால், 'காலத்தைக் கடத்தும்' இராஜதந்திரம் அளித்துள்ள வெற்றி இன்னமும் மேலானது. தனித்த தேசிய இனமாக தன்னுடைய அரசியல் உரிமையைக் கோரிய இனம், அதற்கு ஆதாரமான தன்னுடைய மக்கள் தொகையை, தன்னுடைய பாரம்பரிய பிரதேசத்தை, மொழி, மத அடையாளங்களை - தன்னுடைய ஆளுமையை - பாரிய அளவில் இழந்து, இவற்றின் விளைவாக, பாராளுமன்ற பிரதிநிதித்துவத்திலும் அடுத்துவரும் பொதுத் தேர்தல்களில், இத் தமிழர் பிரதேசங்கள், பெரும்பான்மை தேசிய கட்சிகளின் பெரும்பான்மைப் பிரதிநிதித்துவத்தை பெறும் நிலையை எய்தியிருக்கின்றன.*

*ஆக, இந்த யதார்த்த நிலையில்தான் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு இந்திய பிரதமர் விடுத்த அழைப்பும், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அதனை தட்டிக்கழித்த விதமும் இலங்கைத் தமிழ் மக்களின் அரசியலில் முக்கியத்துவத்தைப் பெறுகிறது.*

*வயது முதிர்ந்த நிலையில், சம்பந்தன் குழந்தைபோல ( childlike) செயல்படுகிறாரா அல்லது குழந்தைத்தனமாக (childish) செயல்படுகிறாரா? சம்பந்தனின் இச் செயல்பாட்டில் - இது, சம்பந்தன்தனா அல்லது இன்னொருவரா என்பது உள்பட, பலவித கேஷ்யங்கள் வெளிப்படுத்தப்பட்டாலும், புதிய அரசியலமைப்பு ஒன்றிலான சம்பந்தனின் எதிர்பார்ப்பு - நம்பிக்கை என்பதுவும் ஒரு காரணமாகலாம். நல்லாட்சிக் காலத்திலும் இப்படித்தான் அவர் இலவு காத்த கிளியாக அந்த அரசைக் காத்தார்.*

*ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொணரவிருப்பதாக கூறும் புதிய அரசியலமைப்புக்கு சில பிரேரணைகளை கையளித்து விட்டு காத்திருக்கிறார் சம்பந்தன். இந் நிலையில், 13ஆவது திருத்தச் சட்டத்தை நோக்கியதாக அமையவல்ல இந்திய பிரதமருடனான சந்திப்பு, அதைவிட அதிகமானதாக இருக்கக் கூடிய தனது கோரிக்கையில் தடங்கலை அல்லது பாதிப்பை ஏற்படுத்திவிடுமோ என்ற*

(18ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





# இந்தவார ராசிபலன்
## 12.12.2021 – 18.12.2021

டிசெம்பர். 12 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - கார்த்திகை 26

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 4.30 - 6.00 |
| திதி | : | நவமி |

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

எடுத்துக்கொண்ட வேலைகள் அனைத்தும் எளிதாக முடியும் வாரம். பொருளாதாரத் தேவைகள் பூர்த்தியாகும். ஆரோக்கிய பாதிப்புகள் இருந்தவர்களுக்கு இப்போது முற்றிலுமாக நோய் தீர்ந்து புத்துணர்வு ஏற்படும் எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும். நிதி முதலீடுகள் அதிகரிக்கும். கலகலப்பான சந்திப்புகள் நிகழும். ஆரோக்யம் சிறக்கும். லாபம் கூடும். புதிய பொருட்கள் அன்பளிப்பாகக் கிடைக்கும்.கடன் பிரச்னைகள் முற்றிலுமாக தீர்வதற்கான வாய்ப்புகள் உருவாகும். திருமணம் தொடர்பான விஷயங்களில் தேவையான உதவிகள் கிடைக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

அலுவலகத்தில் உங்களுக்கான மதிப்பு உயரும், குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். பாதியில் நின்ற சில பணிகள் தொடரும். குழந்தைகள் தொடர்பான முயற்சிகள் வெற்றியளிக்கும். கூடுதல் பொறுப்புகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. புதிதாக வீடு வாங்கும் முயற்சி சாதகமாக இருக்கும். பூர்வீக சொத்து தொடர்பான விஷயங்கள் சாதகமாக இருக்கும். தொழில் தொடர்பான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும். வியாபார வளர்ச்சி அமோகமாக இருக்கும். இதுவரை வேலை இல்லாமல் இருந்தவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

பெண்களால் குடும்ப ஒற்றுமை மேலோங்கும். முயற்சிகள் சாதகமான திசையை நோக்கிச் செல்லும். மாணவர்களுக்கு கல்வியில் நல்ல முன்னேற்றம் உண்டு. கலைஞர்களுக்கு சிறப்பான வாய்ப்புகள் கிடைக்கும்.எதிர்பாராதவரின் நட்பு கிடைக்கும். கடன் பிரச்னைகள் முடிவுக்கு வரும். வியாபார வளர்ச்சி சீராக இருக்கும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். குடும்பத் தேவைகளில் ஒன்று பூர்த்தியாகும். தொழில் / வியாபாரம் தொடர்பாக தேவையான உதவிகள் கிடைக்கும். வாழ்வில் முன்னேறப் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

உடல் நலம் பாதிக்காமல் விழிப்புடன் இருந்தால் இது மகிழ்ச்சியான வாரம். திட்டமிட்டதைவிட அதிகப்படியான செலவுகள் இருக்கும். சுபமான செலவால் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். உணர்ச்சிவசப்பட்டு எந்தத் தீர்மானமும் செய்ய வேண்டாம். சில முக்கிய முடிவுகள் எடுக்கும் போது அனுபவசாலிகளைக் கலந்தாலோசியுங்கள். அந்நியர்களிடம் கவனமாகப் பேசுவது நல்லது. எதிர்காலத் தேவைகளுக்காக சேமிக்கத் துவங்குங்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் செயலால் மகிழ்ச்சி ஏற்படும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

அலுவலகத்தில் உங்கள் பணியை மட்டும் கவனியுங்கள். பணம் கையாளும்போது கவனம் கூடுதலாக இருக்கட்டும். உங்கள் செயல்பாட்டால் குடும்பத்தினர் நன்மை காண்பர். மற்றவர்களைப் பற்றி அதிகம் பேச வேண்டாம். பணவரவு கூடுதலாக இருக்கும். எதிர்பாராமல் உதவி ஒன்று கிடைக்கும். தொழில், வியாபாரம் லாபகரமாக இருக்கும். அடுத்தவர் வேலையில் தலையிட வேண் டாம். கடந்த வாரம் இருந்த பிரச்னைகள் தீர்ந்து நிம்மதி வரும். அலுவலகத்தில் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பீர்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

நீங்கள் உண்டு, உங்கள் வேலை உண்டு என்றிருப்பது நல்லது. நண்பர்களால் நன்மைகள் கூடும். சிறிய பயணம் ஒன்று மேற்கொள்ள வேண்டி வரும். அக்கம்பக்கத்தினரிடம் அநாவசியப் பேச்சு வேண்டாம். கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். அவசரப்பட்டு வார்த்தைகளை விட வேண்டாம். அலுவலகத்தில் மேலதிகாரியிடம் பணிந்து போவீர்கள். உங்கள் நிம்மதி உங்கள் கையில்தான் உள்ளது. பேச்சாலும் செயலாலும், பிரச்னைகளைத் தவிர்ப்பீர்கள். செலவுகள் குறையும். வீட்டு பராமரிப்பு பற்றி ஆலோசிப்பீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

தேவையான உதவிகள் அனைத்தும் கிடைக்கும். குடும்ப உறவுகள் பலப்படும். தாய் தந்தையரின் உதவி கிடைக்கும். சகோதரர் உங்களுக்கு உதவி செய்வார். வேலை தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். மனதுக்குப் பிடித்த விஷயம் ஒன்று முடிவாகி சந்தோஷம் அளிக்கும். வசிக்கும் வீட்டை விரிவுபடுத்துவது பற்றி சிந்திப்பீர்கள். இதுவரை தாமதப்பட்ட பதவி உயர்வு பற்றிய தகவல் உறுதியாகும். சொந்தத் தொழில் அல்லது வியாபாரம் செய்து கொண்டிருப்பவர்களுக்கு லாபம் நன்றாக இருக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

வேறு நிறுவனங்களுக்கு மாற முயற்சி செய்வோருக்குச் சாதகமான பலன் உண்டு. தாமதப்பட்டு வந்த திருமண முயற்சி திருப்தி தரும் வகையில் நிறைவேறும். வீடு வாகனம் வாங்குவதற்குத் தேவையான பொருளாதார உதவி கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் அதிகமாகும். நெருங்கிய நண்பர்கள் மூலமாக நல்ல விஷயம் ஒன்று நடைபெறும். குடும்பத்தினரால் உதவியுண்டு. எதிர்பாராத பணவரவால் சந்தோஷம் காண்பீர்கள். தொழில்ஃ வியாபாரத்தில் படிப்படியான நன்மைகளை எதிர்பார்க்கலாம்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தேவையில்லாத வாக்குவாதம், மன வருத்தங்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. அமைதியாக இருப்பது நல்லது. இப்போதைய உழைப்பிற்கு உடனடி பலன் இல்லாவிட்டாலும் எதிர்காலத்தில் நன்மை உண்டு. அலுவலகப் பணியில் கூடுதல் சுமை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் இயல்பான நிலையே இருக்கும். எதிர்பார்த்த வருமானம் இருக்கும். வீண்பழி ஏற்படாதபடி செயல்படுவது அவசியம். எந்த ஒரு விஷயத்திலும் கவனமுடன் இருப்பது நல்லது. தீய நண்பர்களின் சேர்க்கையைக் கட்டாயம் தவிருங்கள்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

சொத்துகள் வாங்குவது விற்பது போன்ற விஷயங்கள் முன்னேற்றம் தருவதாக இருக்கும். உறவுகளால் ஆதாயம் கிடைக்கும். நண்பர்களை சந்தித்து குதூகலமாக இருப்பீர்கள். செலவுகளும் இருக்கும். அநாவசியச் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். எந்த விஷயத்திலும் அவசர முடிவு எடுக்க வேண்டாம். கொண்டாட்டங்கள் களை கட்டும். குடும்பத்தினர் மகிழ்ச்சியாக இருப்பார்கள். நண்பர்களால் மகிழ்ச்சி உண்டு. நிதானமாக சிந்தித்து செயல்படுங்கள். அவசியமற்ற செலவுகளால் வீண் விரயம் ஏற்பட வாய்ப்புண்டு.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

நீண்ட நாளாக எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணவரவு கூடும். பணியில் எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும் வாய்ப்புண்டு. தொழில் செய்பவர்களுக்கு புதிய திருப்பம் ஏற்படும். பேச்சால் கூடுதல் ஆதாயம் காண்பீர்கள். தனிப்பட்ட தேவைகளை நிறைவு செய்வீர்கள். புதிய வியாபாரம் தொடங்குவது பற்றிய திட்டத்தைச் சற்று ஒத்தி போடுங்கள். எதிர்கால வளர்ச்சி குறித்த ஆலோசனைகளில் ஈடுபடுவீர்கள். மகன்ஃமகள் பற்றிய சுபவிஷய பேச்சு வார்த்தையில் முன்னேற்றம் ஏற்படும். உறவினர்களால் ஆதாயம் கிடைக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

தொழிலில் புதிய ஒப்பந்தம் கிடைக்க வாய்ப்புண்டு. பெண்கள் பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு மகிழ்வர். உறவினர்களால் திடீர் செலவு ஏற்படும். தாயாரின் உடல் நிலை சீராகும். கடந்த கால முதலீட்டால் நன்மை காண்பீர்கள். இத்தனை காலம் கவலையளித்த உடல்நிலை சீராகும் தேவைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும் வாகனம் அல்லது வீடு வாங்கும் திட்டம் நிறைவேறும். எதிர்கால வாழ்க்கைக்கு நண்பர்கள் வழிகாட்டுவார்கள். தாமதப்பட்டுக் கொண்டிருந்த பணவரவு இப்போது உடனடியாக கிடைக்கும்.

# இருப்புப் பகிர்வு

**பகிர்வு -7**

ஒரு பகிர்வு ஒருவனை வலுப்படுத்துகிறது என்பது ஒரு அனுபவப் பகிர்வு.எனது அறுபதுகளை மீள எண்ணிப் பார்க்கையில் அந்த வரிகள் மேலும் வலுப்படுகிறது.நடந்து வந்த பாதையில் கடந்து வந்த தருணங்கள் பல வலிகள் நிறைந்தவை. அவை ஏற்படுத்திய வலிமையே இவ்வாறான வரிகளை எழுதத் தூண்டுவதாக உணர்கிறேன்.

ஒரு நாள் அதிகாலை வேளை. எனது தாயார் சமையலறைப் பணிகளிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்ட சமயம். அந்தச் சிறுமி கையில் சிரட்டை ஒன்றுடன் சமையலறை வாசலிலே நின்றிருந்தாள். எனது தாயார் அந்தச் சிரட்டையை வாங்கி அடுப்பில் இருந்த நெருப்புத் தணல் கட்டி ஒன்றினை எடுத்து அந்தச் சிரட்டையிலே இட்டு அவளிடம் நீண்டினாள். சிறிது நேரத்தின் பின்னர் அந்தச் சிறுமியின் வீட்டுச் சமையலைறைக் கூரையின் வழியே புகை கிளம்பியதைப் பார்த்தேன். அவர்களின் அடுப்பும் எரியத் தொடங்கியதை அறிந்து கொண்டேன்.

அன்றை நாட்களில் இது போன்று அக்கினியை மட்டுமல்ல அன்பையும் தாராளமாகப் பகிர்ந்து கொண்டோம். எல்லைகளற்ற நிலப்பரப்பில் வாழத் தொடங்கியவர்கள் நாங்கள். அன்று பகிர்வதே வாழ்க்கையாக இருந்தது. பின்பு எல்லைகளை வகுத்துக் கொண்டபோது கூட அவை எம்மை எல்லைப் படுத்தியதாக இல்லை. நிலப்பரப்பை எல்லைப் படுத்திய வேலிகளையும் உயர் வேலிகள் என்றே அழைத்து மகிழ்ந்திருந்தோம். அவ் வேலிகளுக்கும் எமது வாழ்வுக்கும் ஒரு தொடர்பு இருந்தது. வேலியின் வழியே வாழ்வாதாரம் பேணப்பட்டதாக வரலாறு உண்டு. அந்த வரலாறு உண்மை என்பதற்கு ஆதார எச்சங்களாக இன்றும் கிராமத்தில் உயிர் வேலிகளைச் சிலர் பேணி வருகிறார்கள்.

அன்று பகிர்வதே எமது நோக்கமாகக் கொண்டு வாழ்க்கை அமைந்தி ருந்தது. அதன் அடிப்படையிலேயே அனைத்தையும் திட்டமிட்டுக் கொண் டோம். வேலியின் வழியே பொட்டு அமைப்பது கூட அவ்வாறான அடிப் படைகளில் ஒன்றாக இருந்தது என்று தான் எண்ணுகிறேன்.

இன்று சமூகத்திலே காணப்படுகின்ற அனைத்துக்கும் மூலகாரணமாக நாம் பகிர்வதை நிறுத்திக் கொண்டதைச் சொல்லலாம்.அனைத்திலும் காணப்படும் பகிர்வற்ற காரணத்தினால் தோன்றியுள்ள தேக்க நிலையே அழிவுகளுக்குக் காரணமாயிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்து தமிழ் திசையில் “பகிர்வு எதற்காக?” என்ற ஒரு கட்டுரையைப் பார்த்தேன்.அதன் சாரத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ளுகிறேன்.

பகிர்வு. பொருளியலில் என்னை மிகவும் ஈர்த்த சொல் இது. எல்லோருக்கும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளவேண்டிய அளவுக்கு செல்வங்களை நாம் சரியாக பகிர்ந்தளித்திருக்கிறோமா? என்பது ஒரு முக்கிய பொருளியல் கேள்வி. மற்றவர்கள் தங்களது பொருட்களை, அறிவை நம்மிடம் பகிர்ந்துகொள்ளும்போது நமக்கு அது வரவு. ஆக, பகிர்வு என்ற சொல் நமக்கு ரொம்ப பிடித்தமான சொல்லாகத்தான் இருக்க வேண்டும்.

அறிவு மட்டும்தான் கொடுக்கும்போதும் பெறும்போதும் நமக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. அறிவைக் கொடுப்பதால் குறைவதில்லை. அது வளரவே செய்யும். பொருட்களை கொடுக்கும்போது வருத்தமும், பெறும்போது மகிழ்ச்சியும் வருவது நம் சுயநலத்தின் வெளிப்பாடு. அதிலும் மகிழ்ச்சியைக் காண்பதற்கு ஒரு தனி அறிவு வேண்டும்.

பொருள் ஈட்டிவைத்துக்கொள்வதில் உள்ள இன்பத்தை, தேவையை ‘பொருள் செயல்வகை’அதிகாரத்தில் உள்ள 10 குறள்களிலும் வள்ளுவர் தெளிவாகக் கூறியுள்ளார். ‘ஈகை’அதிகாரத்தில் உள்ள 10 குறள்களும் ‘பொருள் தேடலின் இறுதி ஈகையில் முடிவதுதான் சிறப்பு’ என்று கூறுவது தமிழனின் ‘பகிர்வு’பற்றிய சிந்தனை எவ்வளவு தொன்மையானது, செழுமையானது என்பதைக் காட்டுகிறது.

மிகப்பெரிய செல்வந்தர்கள் பெரிய கொடையாளிகளாகவும் இருந்திருக்கின்றனர். இதற்கு நல்ல உதாரணங்களாக றொக்ப்பெல்லர் (Rockfeller ) என்ற அமெரிக்கரும் அன்ரு கானேக் (Andrew Carnegie) என்ற ஸ்கொட்டிஷ் காரரும் சமகாலத்து தொழிலதிபர்கள். இவர்கள் இருவரும் ஒன்றுபோல செல்வம் தேடுவதையும் பகிர்வதையும் பற்றிக் கூறியுள்ளனர்.

“கலை, இசை, இலக்கியம் படைப்பதற்கான இயல்புணர்ச்சி போல, மருத்துவரது, செவிலியரது, உங்களது திறன் போல, செல்வம் தேடும் திறன் என்பது கடவுள் எனக்குக் கொடுத்த பரிசு. இந்த திறமைகளை வளர்த்து நம் முழு முயற்சியில் மனிதகுல நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும். இந்தப் பரிசை என்னிடம் வைத்துள்ளதால் பணம், மேலும் பணம் பண்ணுவதே என் கடமை என்று நினைக்கிறன், மேலும் என் மனசாட்சி சொல்லுகின்றபடி எனது சக மனிதனின் நன்மைக்காக இதைப் பயன்படுத்த வேண்டும்” என்று றொக்ப்பெல்லர் கூறியதும்... “பணக்காரனாகச் சாவது, இகழ்ச்சியோடு சாவது போல” என்று அன்ரு கானேக் கூறியதையும் கவனிக்கும்போது பணம் பண்ணுவதே பகிர்வுக்காகத்தான் என்பது தெளிவாகிறது. றொக்ப்பெல்லர் கூறியதை வைத்து மேலும் சிந்திக்கும்போது இசைக் கலைஞன் எவ்வாறு மற்றவர்களை மகிழ்விக்கப் பாடும்போது தானும் அந்தப் பாட்டை ரசிக்கிறானோ, அவ்வாறே, பணம் பண்ணுகிறவர்கள் தானும் அதை அனுபவித்து மற்றவர்களுக்கும் அதைக் கொடுக்கவேண்டும் என்று புரிகிறது.

தனி மனிதன் பகிர்ந்தளிக்கும் செல்வம் எல்லோரது அடிப்படைத் தேவையையும் பூர்த்தி செய்யாது. இதில் அரசின் பங்கு பெரியது, இன்றியமையாதது. அரசுக்கு செலுத்துகின்ற வரியும் மறைமுகமான ஒரு பகிர்வே.எனவே அரசு நிறுவனங்களின் செயல்பாடுகள் திறமையாகவும் உண்மையாகவும் இருந்தால் மட்டுமே அப் பகிர்வு சிறப்பாக அமையும்.

உலக வரலாற்றில் ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்கும் போதெல்லாம் வன்முறை தலைதூக்கியது பற்றி பல குறிப்புகள் உண்டு. பகிர்வில் ஏற்படுகின்ற பாராபட்சமே இவ்வாறான இடர்கள் தோன்றக் காரணமாகின்றது. இதை அறிந்து கொண்டால் பகிர்வின் முக்கியத்துவம் புரியலாம். எல்லைகளையும் எல்லையற்றுப் பகிர்வோமா?

**- கணபதி சர்வானந்தா**

# மைத்திரிபாலவுக்கு எதிராக நான் சி.ஐ.டியில் முன்னிலையாக தயார்!

## சவால் விடுக்கிறார் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, டிசெ. 12

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே முழுப் பொறுப்பு என தெரிவித்த கருத்தில் தான் உறுதியாக இருப்பதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த கருத்து தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலோ அல்லது நீதிமன்றத்திலோ தனது



வாதத்தை முன்வைக்கத் தயார் என்றும் அவர் கூறியுள்ளார்.

பிரசன்ன ரணதுங்க தெரிவித்தமை தொடர்பாக விசாரணை நடத்தப்படவேண்டும் என கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் ஜூட் கிரிசாந்த குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

இந்நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டால் தனக்குத் தெரிந்த அனைத்துத் தகவல்களையும் வெளியிடத் தயார் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.(அ)

# பண்டிகைக் காலத்தில் சுகாதார நடைமுறைகளை பொதுமக்கள் அனைவரும் பின்பற்றுதல் அவசியம்

## சுகாதார அமைச்சர் கெஹலிய வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ. 12

பண்டிகைக் காலங்களில் பொதுமக்கள் அனைவரும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றவேண்டும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கேட்டுக்கொண்டார்.

தடுப்பூசி நடவடிக்கை திருப்திகரமான வகையில் முன்னெடுக்கப்படுவதால் நாடு இதுவரை அடைந்துள்ள முன்னேற்றத்தை மக்கள் பாதுகாக்க வேண்டும் என்றும் கோரினார்.

சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றத் தவறினால் இந்த ஆண்டு புத்தாண்டுக் கொத்தணி உருவானதைப் போன்று புதிய கொத்தணி உருவாகக்கூடும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலப்பகுதியில் நடத்தப்படும் அனைத்து குடும்ப ஒன்றுகூடல்கள் மற்றும் விழாக்களுக்கு கட்டுப்பாடுகளை விதிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்றும் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார்.

கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்கான இலகுவான வழி ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதே என பலர் கூறினாலும், அத்தகைய நடவடிக்கையினால் உள்ளூர் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

(அ)

# தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் தெல்லிப்பழை செயலகம் முதலிடம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் தெல்லிப்பழை பிர தேச செயலகம் தேசிய ரீதியில் முதலாவது இடத்தைப் பெற்று அதி சிறந்த அரச அலுவலகமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளது.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் வழிகாட்டலுக்கிணங்க தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால், ஆண்டு தோறும் தேசிய உற்பத்தித்திறன் விருதுக்கான போட்டி நடத்தப்படுகிறது.

உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் பற்றி நிறுவனம் கொண்டுள்ள அறிவினை நடைமுறையில் யதார்த்தமானதாக மாற்றுகின்ற செயற்பாங்கு அதன்போது மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுகின்றது.

மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை உச்ச வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் பயன்பாட்டுக்கு எடுத்து நிறுவனம் சார் நோக்கங்களை அடைவதன் உன்னதமான தன்மையை தொழில்நுட்ப ரீதியாக மிகவும் ஒழுங்கமைந்த மதிப்பீட்டுச் செயற்பாங்கினூடாக அளவிட்டு தேசிய மட்டத்தில் மதிப்பீட்டுக்கு உள்ளாக்குவதே இந்த போட்டியின் முக்கியமான குறிக்கோளாகும்.

இந்தப் போட்டியிலையே , தெல்லிப்பழை பிரதேச செயலகம் முதலிடத்தையும் , யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளன.

(அ)



# பாரதியாரின் உருவச்சிலை வட்டுக்கோட்டையில் திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 12

வட்டுக்கோட்டை - குக் றோட் முதலாம் ஒழுங்கையில் பாரதியாரின் உருவச்சிலை திறந்துவைக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

மறவன்புலவு சச்சிதானந்தம் சம்பிரதாயபூர்வமாக சிலையை திரைநீக்கம் செய்து திறந்துவைத்தார். இதன்போது சிறுவர்களால் பாரதியாரின் பாடல்களும் பாடப்பட்டன.

கலாநிதி சிதம்பரமோகன் தலைமை தாங்கிய இந்த நிகழ்வில், மறவன்புலவு சச்சிதானந்தம், பாலகுமார சர்மா குருக்கள், யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, யாழ். நாக விஹாரையின் வண. மீஹ சந்துர விமல தேரர், பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சுமன் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாரதியாரின் நற் சிந்தனைகளை மக்களுக்கு எடுத்துக்காட்டும் வண்ணமாக குறித்த உருவச்சிலை திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-03)





# யாழ். சிவன் ஆலயங்களில் திருவெம்பாவை உற்சவம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

சிவபெருமானுக்கு உரிய மிக முக்கியமான விரதங்களில் ஒன்றான மார்கழி திருவெம்பாவை உற்சவம் யாழ்.மாவட்டத்தில் உள்ள சிவன் ஆலயங்களில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மிகவும் சிறப்பாக இடம்பெற்றன.

அந்த வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். சுன்னாகம் கதிரமலை சிவன் கோவிலில், மார்கழி திருவெம்பாவை உற்சவம் விசேட அபிசேக ஆராதனைகளுடன் இடம்பெற்று 10 திருவெம்பாவை உற்சவப் பாடல்களும் பாடப்பட்டன.

இந்நிகழ்வை ஆலயபிரதம குரு சிவஸ்ரீ சிவனேஸ்ர குருக்கள் கணேஸ் சர்மா தலைமையிலான சிவாச்சாரியர்கள் நடத்திவைத்தனர்.

இதில் நடராஜாப்பெருமான் பிள்ளைத்தண்டு பீடத்தில் வீற்றிருந்து உள்வீதியூடாக வலம்வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

(அ-03)

# யாழ்.பல்கலை மாணவர்களால் இம்முறையும் திருவெம்பாவை




யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்.பல்கலைக்கழகத்தில் இரண்டாவது வருடமாக இம்முறையும் திருவெம்பாவை பாராயணம் யாழ்.பல்கலைக் கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஸ்ரீசற்குணராஜாவின் வழிகாட்டலில் மூன்றாம் வருட கலைப்பீட மாணவர்களினால் திருவெம்பாவை பாராயணம் தொடர்ந்து இரண்டாவது வருடமாக இம்முறையும் மாணவர்களால் அனுஷ்டிக்கப்படுகின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தின் பரமேஸ்வரா முன்றலில் அதிகாலை வேளையில் ஆரம்பமாகும் பாராயணம் பாலசிங்கம் விடுதியை அடைந்து பின்னர் தபால் பெட்டிச் சந்தியூடாக பரமேஸ்வரா சந்தியை அடைந்து பல்கலைக்கழக பரமேஸ்வரா கோயில் முன்றலில் நிறைவடையும்.

இதன்போது குறிப்பிட்ட விதிகளில் காணப்படும் கோவில்களிலும் மாணவர்களினால் பாராயணம் முன்னெடுக்கப்படுகின்றது.

இக்காலகட்டத்தில் ஆன்மீக ரீதியாக மாணவர்களின் செயற்பாடுகள் குறைந்துள்ள நிலையில் இந்த முன்மாதிரிகையான செயற்பாட்டை பலரும் பாராட்டியுள்ளனர்.

ஏனைய பீட , வருட மாணவர்களையும் ஆன்மீக செயற்பாட்டில் கலந்துகொள்ளுமாறு மாணவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (அ-03)

# தகவல் அறியும் உரிமைக்குழுவுக்கு ஐந்து புதிய உறுப்பினர்கள் நியமனம்

கொழும்பு, டிசெ. 12

2016ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 12 (1) இன் விதிகளின் கீழ், தகவல் அறியும் உரிமை ஆணைக் குழுவுக்கு புதிய உறுப்பினர்களை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்ன - உறுப்பினர் மற்றும் தலைவர்.

லியன ஆராச்சிலாகே ஜகத் பண்டார லியன ஆராச்சி - உறுப்பினர்.

திருமதி கிஷாலி பின்டோ ஜயவர்தன - உறுப்பினர்.

ஓய்வுபெற்ற நீதிபதி பி. திருமதி ரோஹினி வல்கம - உறுப்பினர்.

கலாநிதி அதுலசிறி குமார சமரகோன் - உறுப்பினர். (அ)




# பாரதியாரின் 139ஆவது பிறந்தநாள் யாழில் நேற்று மலர்தூவி வணக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் 139ஆவது பிறந்த நாளான நேற்று யாழ்ப்பாணத்தில் மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

நல்லூரில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து, பூத்தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

நிகழ்வின் அதிதியாக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதுவர் நடராஜ் ஜெயபாஸ்கர் கலந்துகொண்டு மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்.

இந் நிகழ்வில் யாழ்.மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன், ஆணையாளர் ஜெ.ஜெயசீலன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு மலர் மாலை அணிவித்து, பூத்தூவி வணக்கம் செலுத்தினர்.

(அ-03

# சதொச பல்பொருள் அங்காடிகளின் பெயர்ப்பலகைகளில் தமிழ் எங்கே?

## செந்தில் தொண்டமான் கேள்வி

பழைய பெயர் பலகை



புதிய பெயர் பலகை



கொழும்பு, டிசெ. 12

**அரசாங்கத்தின் கீழ் இயங்கும் சதொச பல்பொருள் அங்காடிகளில் மாற்றப்படும் புதிய பெயர்ப்பலகைகளில் தமிழ்மொழி புறக்கணிக்கப்படுவது கண்டிக்கத்தக்க விடயமென இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மைக்காலமாக சதொச பல்பொருள் அங்காடிகளில் மாற்றியமைக்கப்படும் புதிய பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

இந்த நாட்டின் அரச கரும மொழிகளாக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் உள்ளன. சிங்களம் மற்றும் தமிழ் மக்கள் பயன்படுத்தும் அங்காடியாக சதொச உள்ளது. ஆகவே தமிழர் ள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் தமிழ் மொழி புறக்கணிக்கப்படுவதற்கான காரணம் என்ன?

இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதுடன் தேசிய மொழிகள் ஆணைக்குழுவின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளேன் . உடனடியாக இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டுமெனவும் வலிறுத்தியுள்ளேன். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகிறேன் - என்றார்.

# மன்னாரில் 10 நாட்களில் 144 பேருக்கு கொரோனா

மன்னார், டிசெ. 12

மன்னாரில் கடந்த 10 நாட்களில் 144 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் இவ்வருடம் 3060 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட கொரோனா நிலவரம் தொடர்பாக அவர் நேற்று சனிக்கிழமை விடுத்துள்ள கொரோனா நிலவர அறிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மன்னாரில் கடந்த 10 நாட்களில் 144 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் இவ்வருடம் 3060 கொரோனா தொற்றாளர்களும், தற்போது வரை 3077 கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்த வியாழக் கிழமை இரவு 2 கொரோனா மரணங்கள் பதிவாகி உள்ளன. மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த 59 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் மரணித்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனா தொற்று உள்ளமை தெரிய வந்துள்ளது.

இரண்டாவது நபர் மன்னார் உப்புக்குளம் பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய பெண் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவருக்கு ஏற்பட்ட நிமோனியா காய்ச்சல் காரணமாக உயிரிழந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மாவட்டத்தில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது - என்றுள்ளது.

(அ)

# அதிக விலைக்கு சிமெந்தை விற்றால் கடும் நடவடிக்கை

கொழும்பு, டி.செ.12

சிமெந்து நிறுவனங்கள் நிர்ணயித்த அதிகபட்ச சில்லறை விலையைவிட அதிக விலைக்கு சிமெந்தை விற்பனை செய்பவர்களைக் கண்டறிவதற்கான விசேட சோதனை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக அதிக விலைக்கு சிமெந்தை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தற்போதைய நிலையில் ஒரு மூடை சிமெந்துக்கு நிறுவனங்கள் நிர்ணயம் செய்யும் அதிகபட்ச சில்லறை விலை 1,275 ரூபாவாகும்.

எனினும், அந்த விலைக்கும் அதிகமாக சிமெந்து விற்பனை செய்யப்படுவதாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் நுகர்வோர்கள் தரப்பில் குற்றச் சாட்டுகள் எழுந்துள்ளன. (அ)

# பாராளுமன்றில் மின் தடை; சி.ஐ.டி விசாரணை ஆரம்பம்

கொழும்பு, டி.செ.12

பாராளுமன்ற வளாகத்தில், கடந்த 3ஆம் திகதி சுமார் ஒரு மணித்தியாலம் மின்சாரம் தடைப்பட்டமை, நாசகாரச் செயலா என்பதைக் கண்டறிவதற்காக, குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று பாராளுமன்ற தகவல்கள் தெரிவித்தன.

இது குறித்து, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள், பாராளுமன்றத்தில் பணியாற்றிவரும் ஊழியர்கள் 10 பேரிடம் வாக்கு மூலங்களைப் பெற்றுள்ளனர்.

நாடளாவிய ரீதியில், கடந்த 3ஆம் திகதி ஏற்பட்ட மின் தடையின் போது, பாராளுமன்றத்திலுள்ள மின்பிறப்பாக்கி போதியளவு நீர் கிடைக்காததன் காரணமாக திடீரென பழுதடைந்தமையால், பாராளுமன்ற வளாகத்துக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இது நாசகாரச் செயலா என்பதை கண்டறிவதற்காக தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்களில், பாராளுமன்றப் பொறியியல் பிரிவு, மின்சாரப் பிரிவு மற்றும் நீர்வளப் பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்களும் உள்ளடங்குகின்றனர்.

விசாரணைகள் முடிந்த பின்னர் விசேட விசாரணை அறிக்கை சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ளது.

வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போது, பாராளுமன்ற வளாகத்தில் ஏற்பட்ட மின் தடையானது, பாரதூரமான விடயம் என சபைத் தலைவர் தினேஸ் குணவர்தன, அரசாங்கத்தின் பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் அமைச்சர் சமல் ராஜபக்ஷ ஆகியோர் பாராளுமன்றத்தில் சுட்டிக் காட்டினர். (அ)

# கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் மரணம்

கொழும்பு, டி.செ.12

அனுராதபுரம் நொச்சியாகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வனமல்கம பிரதேசத்தில், கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் நேற்று முன்தினம் மரணமடைந்தார்.

வனமல்கம பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயது நபரே மரணமடைந்தார்.

குறித்த நபர், மற்றுமொருவருடன் இரவுவேளை தனது விவசாயக் காணிக்கு சென்றபோதே இந்த அனர்த்தத்தை எதிர்கொண்டார்.

காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காக வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்தில் படுகாயமடைந்த நபரை நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதித்தபோதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட திரவ உர கொள்கலன் வெடிப்பு



கொழும்பு, டிசெ. 12

பொலனறுவை மாவட்டத்தில் விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கரிம திரவ உரக் கொள்கலன்கள் வெடித்து கடும் துர்நாற்றம் வீசுவதாக விவசாய அமைப்புகள் குற்றம் சுமத்துகின்றன.

பொலனறுவை மாவட்டத்தில் நெற்செய்கைக்காக சில தினங்களுக்கு முன்னர் கரிம திரவ உரம் மற்றும் இரசாயனக் கூடை உரம் விவசாய அமைப்புகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

திரவ உரக் கொள்கலன்களை வீட்டில் வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அவ்வப்போது நிரம்பி வழிவதால் விவசாயிகளின் வாழ்வில் பெரும் சிக்கல் ஏற்படும் எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

சேமித்து வைக்கப்பட்டிருந்த சில திரவ உர கொள்கலன்கள் பலூன்கள் போல் வீங்கிப் போவதாகவும் விவசாயிகள் சுட்டிக்காட்டினர்.

இந்த திரவ உரம் உள்ளூர் நிறுவனம் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயத் திணைக்களம் மூலம் அரசுக்கு இலவசமாக வழங்கப்படுவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இந்த கரிம திரவ உரத்தை எடுத்து பயிர்ச்செய்கைக்கு இட்டு அனுபவம் உள்ளவரை எதையும் வெளிக்காட்ட முடியாது என விவசாயிகள் சிலர் தெரிவித்தனர்.

வெடிப்பு சம்பவம் தொடர்பில் திரவ உர பொதிகளில் உள்ள தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டும் எவரும் பதிலளிக்கவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.


(அ)




# இந்திய முப்படைத் தளபதியின் விபத்து மரணம்:

# ‘இது யாருடைய நாச வேலை?’





- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

நாம் அதிர்ச்சியிலும் துக்கத்திலும் மூழ்கியிருக்கிறோம். புதன்கிழமையன்று ஊட்டியில் நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் ஜெனரல் பிபின் ராவத் மரணமடைந்த செய்தி, நாட்டில் உள்ளோர் அனைவரையும் உலுக்கியிருக்கிறது. செயல்திறனுள்ள இந்த அதிகாரியின் இறப்பால் ஏற்பட்டிருக்கும் துக்கத்திலிருந்து மீண்டுவர இந்தியாவுக்கு நீண்ட காலம் ஆகும். ஜெனரல் பிபின் ராவத், 2020ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி, இந்தியாவின் முதல் முப்படை தளபதியாகப் பொறுப்பேற்று, பாதுகாப்புப் படையிலேயே உச்சமான ஒரு பதவியை வகித்தார்.

குன்னூரிலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒரு சிறு கிராமத்தில் இருக்கும் தேயிலைத் தோட்டங்களுக்கு அருகில் உள்ள காட்டுப்பகுதியில், மரங்களில் மோதி ராவத்தின் ஹெலிகாப்டர் சாம்பலானது. தனது மனைவி மதுலிகா ராவத் மற்றும் 12 இராணுவ அதிகாரிகளுடன் கோயம்புத்தூர் அருகில் உள்ள சூளூர் விமானத் தளத்திலிருந்து ஊட்டி மலைப்பகுதியில் உள்ள வெலிங்டனில் பாதுகாப்புப் படைகளின் ஊழியர்களுக்கான கல்லூரிக்கு அவர் சென்று கொண்டிருந்தபோது, இலக்கை எட்டுவதற்கு 10 நிமிடம் முன்பாக இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. இந்திய விமானப்படையின் க்ரூப் கேப்டன் வருண் சிங் மட்டுமே இந்த விபத்தில் தப்பிப் பிழைத்துள்ளார். படுகாயமடைந்த அவரை உடனடியாக மீட்புப் படையினர் வெலிங்டனில் உள்ள இராணுவ மருத்துவமனைக்குக் கொண்டுசென்றனர். அங்கு முதற்கட்ட சிகிச்சை கொடுக்கப்பட்டப்பின்பு அவர் பெங்களூருவில் உள்ள விமானப்படை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, இப்போது சிகிச்சை பெற்று வருகிறார். மருத்துவமனையின் அதிகாரக் குறிப்புகள், “அவரது உயிர்க்கூறுகள் சீராக இருப்பதாக” தெரிவிக்கின்றன. அதாவது, அவரது இதயம் மற்றும் முக்கிய உறுப்புகள் நன்றாக செயல்படுகின்றன. ஆனால், அவர் ஆபத்தான நிலையிலேயே இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அவருக்கு சுயநினைவு திரும்பினால் மட்டுமே அன்றைய தினம் என்ன நடந்தது, விமானம் புறப்படும்போது சூழல் எப்படி இருந்தது என்பன தெரியவரும். சூலூரிலிருந்து வெலிங்டன் செல்வதற்கு இரண்டு பாதுகாப்பான வழிகள் இருந்தும், இந்த வழியைத் தேர்ந்தெடுப்பதற்கு என்ன காரணம் என்பது பற்றி சந்தேகங்கள் எழுந்துள்ளன. அதுபற்றிப் பிறகு பேசலாம்.

நான்கு நட்சத்திரங்கள் கொண்ட ஜெனரல் ராவத்தின் முழு பணிக்காலமும் சாதனைகள் நிரம்பியது. இந்திய மிலிட்டரி அகாடமியிலிருந்து படிப்பு முடிந்து வெளியேறும்போது, சிறந்த மாணவருக்கான ‘மேன்மைக்கான போர்வாள்’ அவருக்கு வழங்கப்பட்டது. பல தலைமுறைகளாக இந்திய இராணுவப்படையில் சேவையாற்றிவரும் குடும்பத்தைச் சேர்ந்த ராவத், 20 வயதாக இருக்கும் போதே 1978ஆம் ஆண்டில் 11 கோர்க்கா துப்பாக்கிப் பிரிவில் சேர்க்கப்பட்டார். இது, ராவத்தின் தந்தை பணியாற்றிய பிரிவு என்பது கூடுதல் சிறப்பு.

இந்தியா ஓர் இக்கட்டான பாதுகாப்பு அச்சுறுத்தலில் இருக்கும் இந்த நேரத்தில், ஜெனரல் ராவத் விட்டுப் பிரிந்துள்ளார். வழக்கமான போர்க்களங்களான வடமேற்கு, வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளைத் தவிர, புதிய போர் அரங்கம் ஒன்று தென்னிந்தியாவில் தமிழ் நாட்டில் உருவாகி வருகிறது. இந்தியப் பெருங்கடலில், இராமேஸ்வரம் கடற்பகுதிக்கு அருகில் உள்ள இலங்கைத் தீவுகளில், சீனாவின் நிழல் ஓர் அச்சுறுத்தலாக மாறியிருக்கிறது. சிறந்த இராணுவ சாணக்கியரும், வடமேற்கில் பாகிஸ்தான், வடகிழக்கில் சீனா என, உயர்மட்டக் களங்களில் வரும் போர்களை வழிநடத்துவதில் திறமைசாலியுமான ராவத், சென்ற ஆண்டு ஜனவரி மாதம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள முப்படை தளபதி பதவியில் நியமிக்கப்பட்டார். அதற்கு முன்பு அவர் இராணுவ தளபதியாகப் பதவி வகித்திருந்தார். அப்பொழுது காஷ்மீரிலும் சீன எல்லையிலும் பல இராணுவ செயல்பாடுகளுக்குத் தலைமை வகித்த ராவத், பாகிஸ்தான் மற்றும் சீனா குறித்து வெளிப்படையாகவும் காட்டமாகவும் விமர்சனங்களை முன்வைத்தவர். இந்திய அரசு மற்றும் அதன் குடிமக்களிடம் இந்த இரு நாடுகளால் நெருங்கிக்கொண்டிருந்த ஆபத்துக்கள் பற்றியும் அவர் எச்சரித்தார். “இந்தியா தனது எல்லைப்பகுதிகளில் சிக்கலான, எப்போது வேண்டுமானாலும் தடம் மாறக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களை சந்திக்கிறது. இது இந்தியாவின் எல்லை சார் இறையாண்மையையும், உள்நாட்டு அமைதியையும் குறைக்கக்கூடும்” என்று, இந்த ஆண்டின் தொடக்கத்தில் புத்தாண்டு செய்தியில் ராவத் குறிப்பிட்டிருந்தார். தனது அறிக்கையில், தீவிரவாதத்தின் அச்சுறுத்தப் பற்றியும் ராவத் கூறினார்.

இவரைவிட அனுபவமிக்க இரண்டு ஜெனரல்கள் இருந்தபோதும், பிரதமர் நரேந்திர மோடி ராவத்தையே முப்படைகளின் தளபதியாக நியமித்தார். அது மட்டுமல்லாமல், 2023 ஜனவரிக்குள் இராணுவம், விமானப் படை, கப்பற்படை ஆகிய மூன்று பாதுகாப்புப் படைகளையும் ஒருங்கிணைத்து செயல்படவைக்கும் ஒரு முக்கியமான பொறுப்பையும் ஆறு மாதங்களுக்கு முன்பாக ராவத்திடம் பிரதமர் ஒப்படைத்தார். இந்த மூன்று படைகளின் தற்போதைய செயல்பாடுகளை இந்த முடிவு மாற்றியமைக்கும் என்றும், எதிர்காலத்தில் வரப்போகும் போர்களை வெல்வதற்கு இந்த மாற்றம் அவசியம் என்றும் நிபுணர்கள் கூறினர். இராணுவம், விமானப்படை, கப்பற்படை ஆகிய மூன்று பாதுகாப்புப் படைகளின் செயல்திறனையும் ஒருங்கிணைத்து, எல்லா வளங்களையும் சரியாகப் பயன்படுத்தி, எதிர்காலப் பிரச்னைகளை இந்தியா சரியாக எதிர்கொள்வதற்கு உதவும் திட்டம் இது. அமெரிக்கா, சீனா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற உலகின் முன்னணி பாதுகாப்புப் படைகள் ஏற்கனவே இந்த ஒருங்கிணைக்கப்பட்ட முறைப்படிதான் இயங்குகின்றன. ராவத் உருவாக்கத் தொடங்கிய இந்த பிரம்மாண்டமான ஒருங்கிணைந்த படை பற்றிய கூடுதல் விவரங்களில் நான் உங்கள் நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை.

## “விழுந்திடுச்சா”? “ஆமாம், விழுந்திடுச்சு!”

சீனா மற்றும் பாகிஸ்தானுடனான போர்க்காலங்கள் உட்பட, இதற்கு முன்பு இராணுவத்தில் முக்கிய பொறுப்பு வகித்த வேறு எந்த அதிகாரியையும் விட, ராவத் முக்கியமானவர் என்பதில் சந்தேகமில்லை. அதுவே அவரை எதிரிகளின் முக்கிய இலக்காக மாற்றியிருக்கிறது.

பிரபலங்கள் தொடர்பான இதுபோன்ற துக்க சம்பவங்கள் நிகழும்போது, வழக்கமாக நடப்பதைப் போலவே, இது யாருடைய நாசவேலை என்பது பற்றிய விவாதங்கள் தொடங்கிவிட்டன. சிலர் இது பாகிஸ்தானின் வேலை என்றார்கள், சிலர் இது சீனாவின் சதி என்றார்கள். சிலரோ, சீனாவும் பாகிஸ்தானும் இணைந்து, தீவிரவாத தமிழ் தேசியவாதிகளை வைத்து இந்த விபத்தை நடத்தியிருக்கலாம் என்றார்கள்! மூத்த இராணுவ, விமானப்படை மற்றும் கப்பற்படை அதிகாரிகள் அடங்கிய சிறப்பு விசாரணைக் குழுவை மத்திய அரசு நியமித்திருக்கிறது. விசாரணை முடிவு வரும் வரையில் ஊர்ஜிதமில்லாத சந்தேகங்களின் அடிப்படையில் எதையும் பேசவேண்டாம் என்று, பொதுமக்களும் ஊடகத்துறையினரும் வலியுறுத்தப்பட்டிருக்கிறார்கள். இதுபோன்ற விசாரணைகளில் முடிவு வர நீண்ட காலம் ஆகும் என்பதே கடந்த காலப் பாடம். முடிவுகள் வந்தபின்னரும் சில முடிவுகள் தெளிவற்றவையாக இருந்திருக்கின்றன. விபத்தில் முப்படை தளபதி இறந்திருக்கிறார் என்பதால், இந்த விசாரணையின் முடிவுகளும் அப்படிப்பட்டவையாக இருக்க வாய்ப்பு இருக்கிறது என்று சிலர் அஞ்சுகிறார்கள்.

ஊட்டி மலை ரயில் பாதையில் நடந்துபோய்க்கொண்டிருந்த ஒரு சுற்றுலாப் பயணி எடுத்த வீடியோ, இந்த விபத்தின் கடைசி சில நிமிடங்களைப் படம்பிடித்திருக்கிறது. இந்த வைரல் வீடியோவில், ஓர் அடர்த்தியான பனிக்குள் ஹெலிகாப்டர் நுழைகிறது, அடுத்த சில நொடிகளில் ஒரு பெரிய வெடிப்பு சத்தம் ஏற்படுகிறது. “விழுந்திடுச்சா” என்று ஒருவர் கேட்க, “ஆமாம், விழுந்திடுச்சு” என்று ஒருவர் பதில் அளிக்கிறார்.

மரங்களுக்கு மேல் அதிகமான காற்றும், எதிர்பாராத அளவுக்கு பனியும் பனிமூட்டமும் இருப்பதற்கான ஆபத்து இருந்தும்கூட, ஊட்டி தேசிய நெடுஞ்சாலை மற்றும் மலைரயில் பாதைக்கு மேலே பர்லியார் பள்ளத்தாக்கு வழியாகக் குன்னூருக்குப் போகும் வழியை பைலட் தேர்ந்தெடுத்திருக்கிறார். மற்ற இரு வழிகளிலும் 10 நிமிடம் கூடுதல் பயண நேரம் இருக்கும் என்றாலும், அவை பாதுகாப்பானவை என்பதால், பொதுவாக பைலட்டுகள் அந்த வழிகளையே தேர்ந்தெடுப்பது வழக்கம். ட்ரூக் மலை என்று அழைக்கப்படும் பகாசுர மலையின் மேலே பயணித்துக் குன்னூர் வழியாக வெலிங்டனை அடைவது, பவானிசாகர் அணை வழியாகக் கோத்தகிரி மூலம் வெலிங்டனை அடைவது ஆகியவை பொதுவான இரண்டு வழிகள். நான் ஒரு நிபுணரிடம் இதுபற்றிப் பேசியபோது, “இந்த வித்தியாசமான வழியை யார் தேர்ந்தெடுத்தார்கள்? மரங்களில் மோதும் அளவுக்கு ஏன் தாழ்வாகப் பறந்தார்கள்?” என்று அவர் கேள்வி எழுப்பினார்.

சூலூரில் 11:48 மணிக்கு ராவத், அவரது மனைவி மற்றும் அதிகாரிகள் ஆகியோரோடு ஒரு விமானப்படை விமானம் டெல்லியிலிருந்து வந்து இறங்கியிருக்கிறது. அங்கு உள்ள வழக்கமான வரவேற்பு சம்பிரதாயங்கள் முடிந்தபிறகு, ரஷ்யாவில் உருவாக்கப்பட்ட எம்.ஐ.17 வி 5 ஹெலிகாப்டரில் கிட்டத்தட்ட உடனேயே அனைவரும் கிளம்பியிருக்கிறார்கள். வெலிங்டன் கல்லூரியில் ராவத்தின் உரை 14:30 மணிக்கு ஏற்பாடாகியிருந்தது. அதற்கு முன்னதாக மூத்த அதிகாரிகளுடன் உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கலாம். அதிக ஈரப்பதம், காற்று, பனிமூட்டம் போன்ற மோசமான வானிலை பற்றிய எச்சரிக்கை இருந்தும், தயாராக இருந்த கார்களை விடுத்து, எச்சரிக்கைகளைக் கண்டுகொள்ளமல் ஹெலிகாப்டர் பயணத்தை ராவத் தேர்ந்தெடுத்தாரா? தேயிலைத் தோட்டங்கள் மற்றும் வனப்பகுதியின்மீது பறப்பது அழகான அனுபவமாக இருக்கும் என்று அவர் ஒருவேளை நினைத்தாரா? அதனால்தான் ஹெலிகாப்டர் தாழ்ந்து பறந்து பனியில் மாட்டி மரங்களில் மோதியதா? சிக்கிக்கொண்ட ஹெலிகாப்டரை மேலே எழுப்ப பைலட் முயற்சி செய்ததில் மேலே உள்ள விசிறிகள் வேகமாக சுழன்று மூன்று மரங்களை வெட்டியிருக்கிறது. அதன்பிறகு தீப்பற்றியிருக்கிறது. பலத்த தீக்காயங்களுடன் இருந்த ராவத், வெலிங்டன் மருத்துவமனையில் இறந்திருக்கிறார்.

மோசமான வானிலை மற்றும் இதுபோன்ற ஆபத்துகள் இருந்தும், ஹெலிகாப்டர் பயணத்துக்காக பைலட்கள் முக்கியஸ்தர்களால் வற்புறுத்தப்படுவது பற்றியும், அதன் ஆபத்து பற்றியும் பேசிய நிபுணர் கேப்டன் மோகன் ரங்கநாதன், இரண்டு நாட்களுக்கு முன்பு ஓர் ஊடகப் பேட்டியில், “முக்கியஸ்தர்களுக்கான ஒரு பாதுகாப்புக் கையேடு ஒன்றை நான் எழுதினால், வருபவர் எவ்வளவு முக்கியமான அதிகாரியாக இருந்தாலும், பைலட்டின் முடிவே இறுதியானது என்பதைத்தான் முதலில் எழுதுவேன்” என்றார். இதுபோன்ற பிற விபத்துக்களையும் அவர் பட்டியலிட்டார். மீண்டும் சொல்கிறேன், ஜெனரல் இதுபோல் குறுக்கிட்டிருப்பார் என்று நான் கூறவில்லை. இதுபோல ஒரு கருத்து ஓடிக்கொண்டு இருப்பதையே சுட்டிக் காட்டுகிறேன்.

உங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்புத் தலைவர்கள் பாரதப் பிரதமர் மோடியை சந்திப்பதற்கு டிசம்பர் 7-8ஆம் திகதி டெல்லிப் பயணம் மேற்கொள்கிறார்கள் என்றும், பிறகு மாவையாரின் மகனது திருமணம் 9ஆம் திகதி நடக்க இருந்ததால் அதைத் தள்ளிப் போட்டார்கள் என்றும் செய்திகள் வந்தன. இந்த சந்திப்பு தவிர்க்கப்பட்டதன் பின்னணியைப் பற்றியும் சில கருத்துக்கள் இங்கு கூறப்பட்டன. இப்போது அவை பற்றி விரிவாகப் பேசி உங்களின் காலை உணவைத் தாமதப்படுத்த விரும்பவில்லை. ஆசிரியர் ஆமோதித்தால் நாளை காலை சந்திப்போம். நன்றி.



# பசில் ராஜபக்ஷவின் இந்திய விஜயமும் இலங்கை - இந்திய உறவும்

பேராசிரியர்
கே. ரீ. கணேசலிங்கம்

இலங்கை - இந்திய நட்புறவு புவிசார் அரசியல் ரீதியில் முதன்மையானதாகவே காணப்படுகிறது. ஆனால் அத்தகைய உறவு ஒரே சீரானதாக இல்லாது அவ்வப்போது நெருக்கமாகவும் சில சந்தர்ப்பங்களில் முறிவடைந்தும் நகர்கிறதை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக இலங்கையின் வெளிவிவகாரம் இந்தியாவுக்கு எதிரானதாக அமைகிறது என்ற குற்றச்சாட்டு நிலவினாலும் அத்தகைய முரண்பட்ட வெளியுறவுக் கொள்கையை கொண்டு இந்தியாவை கையாள நன்கு பயிற்றப்பட்டவர்களாக இலங்கை ஆட்சியாளர்கள் காணப்பட்டனர். அதே நேரம் இந்திய ஆட்சித் துறையினரும் தமக்கான நலன்களுடன் அவ்வப்போது இலங்கையை தமது பிடிக்குள் நகர்த்துவதில் கவனம் செலுத்தியுள்ளமையையும் காணமுடிகிறது. இலங்கை ஆட்சியாளர்கள் எப்போதும் புவிசார் அரசியல் நெருக்கடியை பூகோள ரீதியான சக்திகளை முன்னிறுத்தியே நகர்ந்துவருகின்றனர். இக்கட்டுரையும் சமகாலத்தில் இலங்கை - இந்திய உறவின் போக்கில் எழுந்துள்ள சூழலைத் தேடுவதாக அமைந்துள்ளது.

இலங்கையின் நிதியமைச்சர் வரவுசெலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது இந்திய விஜயத்தை டிசம்பர் 1-2 (2021) திகதிகளில் மேற்கொண்டிருந்தார். அவரது விஜயத்தின் முக்கிய நோக்கங்கள் நான்கு பிரதான கோணத்தில் அமைந்திருந்தது.

ஒன்று உணவு மற்றும் சுகாதார பாதுகாப்பு பற்றிய நிகழ்ச்சித் திட்டத்துடன் நிதியமைச்சரது இந்தியா நோக்கிய விண்ணப்பம் அமைந்திருந்தது. இலங்கை அதிகமான உணவு மற்றும் மருத்துவ பொருட்களுக்கான பிரதான இறக்குமதி நாடாக இந்தியாவே காணப்படுகிறது. இது மிக நீண்ட காலமாக நிலவிவரும் நெருக்கமான ஒத்துழைப்பாக அமைந்துள்ளது. இது இந்திய - இலங்கையின் வர்த்தக பங்களிப்பில் ஏறக்குறைய 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் ஒவ்வொரு ஆண்டும் நிகழ்ந்துவருகிறது. இதற்கான நீடித்த கொடுப்பனவை நிகழ்த்த முடியாத அன்னியச் செலாவணி நெருக்கடி நிலையிலேயே இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இரண்டு எரிசக்தி பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் இந்தியாவிடமிருந்து கச்சாய் எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கான விண்ணப்பமாக அமைந்திருந்தது.

அதாவது நிதிச் சந்தையின் நெருக்கடி காரணமாக இதற்கான கடன்வரி பெறுவதற்கான நகர்வாகவே காணப்பட்டது. ஏற்கனவே திருகோணமலையில் இந்திய அமைத்துள்ள எண்ணெய் குதங்களை பராமரிப்பதுவும் அதில் அடங்கியிருந்த விடயமாக அமைந்திருந்தது. ஒவ்வொரு ஆண்டும் இலங்கையின் மசகு எண்ணெய் இறக்குமதிக்காக ஏறக்குறைய 3800-4000 மில்லியன் அமெரிக்க டொலர் வரையானதாக அமைந்துள்ளது. நாட்டில் அதிக நெருக்கடியான விடயமாக எரிசக்தி அளவு காணப்படுகிறது. அது மட்டுமன்றி எரிசக்தியின் தேவைப்பாடு இலங்கையின் உற்பத்தித் துறையுடனும் இதர பொருளாதார நோக்கங்களுடனும் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. அதனால் எரிசக்தி விடயத் தில் இந்தியாவுக்கு அதிகமான தொடர்பு இருப்பதனால் இந்தியாவின் உதவியை அதிகம் முதன்மைப்படுத்துவது தவிர்க்க முடியாததாகியது.

மூன்றாவது இலங்கை அரசாங்கத்தின் நாணய நெருக்கடியை எதிர்கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டமாக அமைந்திருந்தது. இலங்கையின் நிலுவை தொடர்பில் அதிக நெருக்கடியை எதிர்கொண்டுவருகிறது. ஏற்கனவே நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம் இந்தியா உதவியுள்ளது. அதனால் இந்தியாவின் நிதியியல் உதவிக்கான எதிர்பார்ப்பினை நிதிய மைச்சர் பசில் ராஜபக்ஷ இந்திய நிதிய மைச்சருக்கு முன்வைத்துள்ளார். இலங்கை ஒரு எதிர்பார்ப்புடன் காணப்படுகிறதை அவதானிக்க முடிகிறது.

நான்கு இந்திய முதலீடுகளை எளிதாக்கும் நிகழ்ச்சித் திட்டம் அமைந்திருந்தது. இலங்கையில் பல்வேறு துறைகளின் விரிவாக்கம் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. இது அண்மைக்காலத்தின் போக்குகளை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப்பட்டது. தொழில் துறை சார்ந்தும் விவசாயம் மற்றும் தொழில் நுட்பத் துறை சார்ந்தும் மாற்றங்களை இந்திய அதிகம் கொண்டுள்ளது என்ற அடிப்படையில் உரையாடப்பட்டது.

ஆனால் இத்தகைய திட்டங்களுக்கு இந்தியா வழங்கிய ஒத்துழைப்பென்பது மிக குறைவானது மட்டுமன்றி ஏறக்குறைய நிதியமைச்சரின் இந்திய விஜயம் தோல்வியாகவே எதிர் கட்சிகளும் அது சார்ந்த எண்ணங்களும் உறுதிப்படுத்துகின்றன. அதிலும் குறிப்பாக இந்தியப் பிரதமருடனான சந்திப்பு சாத்தியமற்றமை அதிக நெருக்கடியை இலங்கைத் தரப்புக்கு ஏற்படுத்தியுள்ளது. இலங்கை ஆட்சியாளரது சீன சார்பு போக்கினை மையப்படுத்திய அரசியல் நகர்வுகள் இந்தியத் தரப்பால் எப்படி கையாளப் படுகின்றது என்பதே இதில் கவனம் கொள்ள வேண்டிய விடயமாக தெரிகிறது. அதனை விரிவாகப் பார்த்தல் அவசியமானது.

முதலாவது புவிசார் அரசியலிலும் பூகோள அரசியலிலும் சீனாவுக்கு எதிரான அணியில் ஆசியாவுக்குள்ளும் இந்துசமுத்திரத்துக்குள்ளும் தலைமை தாங்கும் நாடு இந்தியா என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால் இலங்கை சீனாவுடன் நெருக்கமான அரசியல் பொருளாதார இராணுவ உறவை கட்டமைத்துள்ள போதும் தவிர்க்க முடியாது இந்தியாவை அமெரிக்கா உட்பட்ட மேற்கைக் கையாள முனைகிறது என்ற புரிதல் இந்தியாவுக்குள் எழுந்துள்ளது. அதே நேரம் பொருளாதார ரீதியில் அதிக நெருக்கடியை இலங்கை எதிர்கொண்டுள்ளது என்பதையும் இந்தியா விளங்கிக் கொள்ளாதது அல்ல. ஆனால் இதுவே இந்தியாவுக்கான சூழலாகவும் கருத வாய்ப்புள்ளது. குறிப்பாக போர்காலப் பொருளாதாரம் இலங்கையில் எவ்வாறு உலக நாடுகளால் கையாளப்பட்டதோ அதே பாணிக்குள் தற்போதைய இலங்கை நெருக்கடியை உலக நாடுகள் கையாள முனைகின்றன. அதில் இந்தியா முதன்மையானதாக அமைந்துள்ளது. இதன் மூலம் இந்தியா இலங்கைத் தீவில் சீனாவின் பிரசன்னத்தை முடிபுக்கு கொண்டுவராது விட்டாலும் நெருக்கடி நிலையை உருவாக்க முடியும் எனக்கருதுகிறது. அதன் ஒரு கட்டமே தீவுகளில் எரிசக்தி பற்றிய சீனா-மின்சார சபை உடன்படிக்கை முடிவுறுத்துவதாக சீனத் தூதரகம் அறிவித்ததற்கான காரணமாகும். அதாவது இலங்கை - இந்திய சமூக உறவை உருவாக்க சீனா - இலங்கை இராஜதந்திர மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நகர்வாகும்.

இரண்டாவது இந்தியாவின் அணுகுமுறையில் ஏற்பட்டுள்ள மாற்றம் உடனடி விளைவுகள் இலங்கையை பாதித்தாலும் எதிர்கால நோக்கில் இந்தியாவை அதிகம் பாதிக்கச் செய்யக் கூடியதாகவே அமைய வாய்ப்புள்ளது. காரணம் விமான நிலையம் திறப்புக்குக்கு இந்திய இலங்கைப் பிரதமரை அழைத்த போது இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சை அனுப்பி அதன் தனித்துவத்தை அவமானப் படுத்தியதாகவே இந்தியா நகர்வுகள் தெரிகிறது.

அதனை அடிப்படையாகக் கொண்டு நிதியமைச்சின் சந்திப்பினை பிரதமர் தவிர்த்தாரா என்ற விவாதம் ஒன்றும் முக்கியமானதல்ல. மாறாக இலங்கை மீது இத்தகைய அணுகுமுறையை இந்தியா கையாளும் இலங்கை மீளவும் சீனாவிடமே உதவி பெறவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்படும். ஏற்கனவே ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தியும் அத்தகைய சூழலாவேயே சீனாவின் கைகளுக்குள் அகப்பட்டது. அத்தகைய நிலையே மீண்டும் ஏற்படும் அபாயம் உள்ளது. அதற்கான அனுபவங்களை முன்னிறுத்தி முடிபுகளை மேற்கொள்வது இலங்கைக்கு மட்டுமல்ல இந்தியாவுக்கும் அவசியமானது.

எனவே இலங்கையின் நிதியமைச்சரின் இந்திய விஜயம் அதிக நெருக்கடியையும் பிராந்திய மட்டத்தில் குழப்பத்தையும் ஏற்படுத்தக் கூடியதாகவே தெரிகிறது. இதனால் முழுமையாக சீனா - இலங்கை உறவு புதிய திசையை நோக்கி நகர சூழல் இருப்பதாகத் தோன்றுகிறது. அதனை நோக்கி இலங்கையையும் தற்போதைய ஆட்சியாளர்களையும் நகர்த்தும் என்பது கடந்த கால அனுபவமாகும். இதே நேரம் இந்தியாவுக்கும் இலங்கைக்குமான உறவு நெருக்கடியுடன் அமைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்திய அழைப்பினை நிராகரித்துள்ளமையும் அதன் விளைவுகளும் இலங்கை -இந்திய உறவில் அதிக முக்கியத்துவம் பெறும் விடயமாக அமையும் சாத்தியமுள்ளது.

**இலங்கையின் நிதியமைச்சரின் இந்திய விஜயம் அதிக நெருக்கடியையும் பிராந்திய மட்டத்தில் குழப்பத்தையும் ஏற்படுத்தக் கூடியதாகவே தெரிகிறது. இதனால் முழுமையாக சீனா - இலங்கை உறவு புதிய திசையை நோக்கி நகர சூழல் இருப்பதாகத் தோன்றுகிறது. அதனை நோக்கி இலங்கையையும் தற்போதைய ஆட்சியாளர்களையும் நகர்த்தும் என்பது கடந்த கால அனுபவமாகும்.**

நன்றி : அருவி



# இந்த வால்நட்சத்திரத்தை உங்கள் வாழ்நாளில் ஒருமுறைதான் பார்க்கலாம்

குரு அரவிந்தன்

இன்று ஞாயிற்றுக்கிழமை வானத்தில் காட்சி தர இருக்கும் வால்நட்சத்திரத்தை, மீண்டும் ஒரு முறை பார்க்கச் சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைக்காது. காரணம் பல ஆண்டுகளின் பின் தான் இது மீண்டும் தோன்றலாம். இந்த வால் நட்சத்திரம் சூரியனை நீண்ட பாதையில் சுற்றி வருவதால் சுமார் 3,500 வருடங்கள் எடுக்கலாம் என்று நம்புகிறார்கள்.

10-50 தூரப்பார்க்கும் கருவி (Binocular) உங்களிடம் இருந்தால் இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ளுங்கள். இந்த வால்நட்சத்திரத்திற்கு கொமெட் சி 2021 ஏ1 - லியோநாட் என்ற பெயர் சூட்டியிருக்கிறார்கள். வடபகுதியில் இருப்பவர்களால் இப்போது இதைப் பார்க்க முடியும். தென்பகுதியில் இருப்பவர்களுக்கு டிசெம்பர், ஜனவரியில் தெரியும்.

இன்று 12 ஆம் திகதி பூமிக்கு அருகே 21 மில்லியன் மைல்களுக்கு அப்பால் கடந்து செல்கின்றது. 6 நாட்களின் பின் அதாவது டிசெம்பர் 18 ஆம் திகதி வீனஸ் கிரகத்திற்கு அருகே 2.6 மில்லியன் மைல்களுக்கு அருகே செல்கின்றது. ஜனவரி 3 ஆம் திகதி 2022 சூரியனுன்கு அருகே 56 மில்லியன் மைல்களுக்கு அப்பால் கடக்க இருக்கின்றது. Comet Leonard: Once in a lifetime இதைக் கணனியிலும் ஒன்லைன் மூலம் பார்க்க வசதிகள் செய்திருக்கிறார்கள்.

சூரியனும் ஒரு நட்சத்திரம்தான். சிலர் ஏற்கனவே வால்நட்சத்திரத்தை ஒரு தடவையாவது பார்த்திருப்பீர்கள். 1976 ஆம் ஆண்டாக இருக்கலாம் என நினைக்கின்றேன், அதிகாலை 5 மணியளவில் பெரியதொரு வால்நட்சத்திதை மிக அருகே பார்க்க எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. மிகத் தெளிவான நீண்ட வால்நட்சத்திரம் கிழக்குவானத்தில் தெரிந்தது. கொழும்பு செல்வதற்காக உத்தரதேவி கடுகதி வண்டி எடுப்பதற்காக காங்கேசந்துறை தொடர் வண்டி நிலையத்திற்கு அதிகாலை எழுந்து சென்ற போது கிழக்கு வானத்தில் தெரிந்த அந்த வால்வெள்ளி என்னை ஆச்சரியப் படுத்தியது இன்றும் நினைவில் நிற்கின்றது. அந்த வால்நட்சத்திரம் தெற்கு ஐரோப்பிய அவதான நிலையத்தைச் சேர்ந்த றிச்சாட் வெஸ்ற் என்பவரால் 1975 ஆம் ஆண்டு முதன் முதலாக் கண்டு பிடிக்கப்பட்டதால் ‘கொமெற் வெஸ்ற்’ என்று அவரது பெயர் சூட்டப்பட்டது. சூரியனில் இருந்து சுமார் 30 மில்லியன் கிலோ மீட்டருக்கு அப்பால் இது நகர்ந்து சென்றது.

> **“இன்று 12 ஆம் திகதி பூமிக்கு அருகே 21 மில்லியன் மைல்களுக்கு அப்பால் கடந்து செல்கின்றது. 6 நாட்களின் பின் அதாவது டிசெம்பர் 18 ஆம் திகதி வீனஸ் கிரகத்திற்கு அருகே 2.6 மில்லியன் மைல்களுக்கு அருகே செல்கின்றது.**

வால்நட்சத்திரம் என்றால் என்னவென்று பார்ப்போம். இதை வானத்தில் பார்த்தால் ஒரு பிரகாசமான வெள்ளியும் அதற்குப் பின்னால் விளக்குமாறு போன்ற ஒரு வாலும் தெரியும். இந்த வால் சிறிதாகவும், பெரிதாகவும் இருக்கலாம். பிரகாசம் இல்லாத மங்கிய பல வால் வெள்ளிகள் சாதாரண கண்ணுக்குத் தெரிவதில்லை. இந்த வால்நட்சத்திரங்களின் வால்கள் சிறிய பாறைத் துகள்கள், தூசிகள், கார்பன்டை ஆக்சைடு, கார்பன் மோனோக்சைடு, நீர்ப்பனி, மீத்தேன், அம்மோனியா போன்ற கரிமச் சேர்மங்கள் கலந்து உருவானவையாக இருக்கலாம். நாசா நிறுவனத்தின் விண்கலம் ஒன்று 2009 ஆம் ஆண்டு சேகரித்துக் கொண்டு வந்த வால்நட்சத்திரத் தூசியில் இருந்து கிளைசைன் என்னும் அமினோ அமிலம் இருந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. சூரிய மண்டலத்தில் இருக்கும் இந்த பனிப் பந்துகள் போன்ற வால் நட்சத்திரங்கள் தமக்கென ஒரு சுற்றுபாதையை அமைத்துக் கொண்டு சூரிய மண்டலத்தை சுற்றி வருகின்றன. வால்வெள்ளி சூரியனுக்கு அருகே செல்லும் போது வால்வெள்ளியிலுள்ள உருகக்கூடிய பொருள்கள் ஆவியாகின்றன. சூரியனிலிருந்து வீசுகிற சூரியக் காற்று அந்த ஆவிகளைச் சூரியனுக்கு எதிர்ப்புறமாகத் தள்ளுகின்றது. ஆதனால்தான் வால்வெள்ளிகளின் வால் எப்போதும் சூரியனுக்கு எதிர்த் திசையிலேயே காணப்படுகின்றன.

இதை தூசுப் பனிப்பந்துகள் என்றும் அழைப்பர். இவை சூரியனுக்கு அருகே செல்லும் போது, வெப்பமடைந்து வாயுக்களை வெளியிடத் தொடங்குகின்றன. எஞ்சியிருக்கும் பாறைத் துண்டுகள்தான் விண் கற்களாக மாறுகின்றன. இவைதான் பூமியிலும் வந்து விழுகின்றன. வால்நட்சத்திரம் அதிக பிரகாசமாக இருந்தால், தொலைநோக்கியின் உதவி இன்றி இங்கிருந்தே பார்க்க முடியும். வால் நட்சத்திரங்கள் பொதுவாக நீள்வட்ட சுற்றுப்பாதையில் சூரியனைச் சுற்றிக் கொண்டிருக்கின்றன. குறுகிய கால வால் நட்சத்திரங்கள் கைபர் பெல்ட் பகுதியில் உருவாகுகின்றன, அவை விண்வெளியில் நெப்டியூன் சுற்றுப்பாதைக்கு அப்பால் இருக்கின்றன. நீண்ட கால வால் நட்சத்திரங்கள் க்யூபர் பெல்ட்டுக்கு வெளியே இருக்கின்றன. இவை எல்லாமே ஈர்ப்பு விசைகளால் இயக்கப்படுகின்றன. சூரியனைப் பல தடவைகள் சுற்றி வரும் போது, பனிப்பந்துகள் ஆவியாகிப் போவதால், வால் நட்சத்திரங்கள் காலப் போக்கில் குறுகிப்போய் அழிந்து விடுகின்றன.

ஹேல் பொப் (Comet u;ale-Bopp) என்ற வால்நட்சத்திரமும் மிகவும் பிரகாசமாக இருந்ததால், பிரபலமானது. எமது காலமான 1995 ஆம் ஆண்டு யூலை மாதம் இது கண்டு பிடிக்கப்பட்டது. சுமார் 18 மாதங்கள் வெறும் கண்களால் பார்க்கக் கூடியதாக இருந்தது. 1997 ஆம் ஆண்டு சூரியனுக்கு அருகே வந்தபோது, ‘பெரு வெள்ளி’ என்று பலராலும் புகழப்பட்டது.

நீண்ட வட்டத்தில் சுற்றி வருவதால் மீண்டும் சூரியனை நோக்கி 4380 ஆம் ஆண்டுதான் வரும் என எதிர்பார்க்கிறார்கள். அலன் ஹேல் மற்றும் தோமஸ் பொப் என்ற இருவரால் இது முதலில் கண்டு பிடிக்கப்பட்டது. ஹெலி வால் நட்சத்திரத்தைவிட ஆறு மடங்கு பெரிதாக இருந்தது.

ஹெலி (ualley's Comet) என்ற பெயர் கொண்ட வால்நட்சத்திரம் 76 ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றுவதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். வரலாற்றில் 1456, 1531, 1607, 1682 ஆகிய வருடங்களில் ஹெலி வால்நட்சத்திரம் தெரிந்ததாக குறிப்புகள் உண்டு. இதன் அடிப்படையில் ஆங்கிலேயரான சேர் எட்மன்ட் ஹெலி என்பவர் 76 வருடங்களுக்கு ஒரு முறை தோன்றும் என்பதைக் கணக்கிட்டார். மார்க் ருவெயின் பிறந்தபோது 1835 ஆம் ஆண்டு பதிவுகள் இருக்கின்றன. 1910 ஆம் ஆண்டு அவர் மறைந்த போதும் இதைப் பார்த்தாகப் பதிவுகள் இருக்கின்றன. அதனால் இதன் ஞாபகமாக அமெரிக்காவில் 36 சதம் பெறுமதியான விமானத்தபால் வெளியிட்டார்கள். எமது காலத்தில் இது 1986 ஆம் ஆண்டு தோன்றியது. மீண்டும் இது 2062 ஆம் ஆண்டு தோன்றும் என கணக்கிட்டிருக்கிறார்கள். இதனுடைய வால் சுமார் 22 மில்லியன் கிலோ மீட்டர் நீளமானது. ஹவாய் நாட்டு முதலாவது மன்னன் கமே ஹமேகா பிறந்தபோது இந்த வால் நட்சத்திரம் தோன்றியதாகப் பதிவுகள் இருக்கின்றன. சங்க இலக்கியங்களிலும் இதற்கான பதிவுகள் இருக்கின்றன. 2014 ஆண்டு நவெம்பர் மாதம் எடுக்கப்பட்ட கணக்கின்படி, 5,253 வால்நட்சத்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் மிகத் தெளிவாகப் பார்க்கக்கூடியதாக, பிரகாசமாக இருந்த வால் நட்சத்திரங்கள் சிலவற்றின் பெயர்களையும் இங்கே தருகின்றேன். Great Comet of 1680, Great Comet of 1744, Great Comet of 1843, Great September Comet of 1882, Great January Comet of 1910, Comet Skjellerup-Maristanny, 1927, Comet Ikeya-Seki, 1965, Comet West,1976. Comet McNaught, 2007, 2021’s best comet- Leonard.

இவை மீண்டும் எப்போது தோன்றும் என்பது தெரியவில்லை. ■

**உல்லாசப் பயணம் மேற்கொள்ள இந்த விமானத்தில் ஏறிய இளைஞனும் யுவதியும் பதறுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் இருவரும் ஈரானின் எதிரி நாடான இஸ்ரேல் நாட்டுப் பிரஜைகள். மலிவான விமானப் பயணச்சீட்டு வாங்கி இக்கட்டான சூழ் நிலையில் மாட்டி கொண்ட அந்த இருவருக்கும் என்ன நடக்கிறது....?**

# ஈரானில் இறங்கிய விமானத்தில் ஆள்மாறாட்டம் செய்த 'மொசாட்'

## விறுவுறுப்பான அப்பிள் ரி.வி. தொடர் டெஹறான்








ஜோர்தான் நாட்டில் இருந்து புது டில்லி நோக்கி பறக்கத் தயாராகிறது ஒரு விமானம். அதில் கனவுகளுடன் இந்தியாவில் உல்லாசப் பயணம் செய்ய ஆவலுடன் ஒரு இளைஞனும் யுவதியும் ஏறுகிறார்கள். அந்த விமானத்தில் இன்னொரு ஜோர்தானிய தம்பதியும் இருக்கிறது. விமானம் பறக்கும் போது நடு வழியில் இயந்திரக் கோளாறு ஏற்பட அந்த விமானம் ஈரான் நாட்டுத் தலை நகர் டெஹரானில் தரை இறங்கப் போவதாக விமானி அறிவிக்கிறார்.

உல்லாசப் பயணம் மேற்கொள்ள இந்த விமானத்தில் ஏறிய இளைஞனும் யுவதியும் பதறுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் இருவரும் ஈரானின் எதிரி நாடான இஸ்ரேல் நாட்டுப் பிரஜைகள். மலிவான விமானப் பயணச்சீட்டு வாங்கி இக்கட்டான சூழ் நிலையில் மாட்டி கொண்ட அந்த இருவரும் கெஞ்சிக் கூத்தாடுகிறார்கள். ஆனால் பயனில்லை.

விமானம் தரை இறங்கியதும் அவர்கள் கைது




**ரமணி - அவுஸ்திரேலியா**

செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்கள். இவர்களின் துரதிஷ்ட நேரம், அதே விமானத்தில் இஸ்ரேலிய உளவுத்துறையான "மொசாட்" ஆள் மாறாட்ட சதி ஒன்றை செய்கிறது.

இந்த இருவரும் டெஹரா னிலிருந்து தப்பிக்கிறார்களா? மொசாட் ஈரானில் ஏன் ஆள்மாறாட்டம் செய்கிறது? என்ற கேள்விகளுக்கு விறுவிறுப்பாக பதில் சொல்லும் அப்பிள் ரி.வி யில் வெளிவந்த தொடரே "டெஹறான்".

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் வெளியுறவு கொள்கைகள் கடந்த சில தசாப்தங்களாக சரியில்லை. இரு நாடுகளும் போட்டி ரீதியாக உயரிய தொழில்னுட்ப ஆயுதங்களை தயாரிக்கின்றன. ஒரு நாட்டின் மீது இன்னொரு நாடு வேவு பார்கிறது. இதில் மொசாட் இற்கும் ஈரானில் புரட்சிக்குப் பின்னதாக உருவாகி உள்ள அரசியல் முறைமையை பாதுகாக்கும் புரட்சிகர காவலளர்களுக்கும் (Revolutionary Guards) இடையிலான நிழல் யுத்தம் ஒன்று நடைபெறுகிறது. இந்த வரலாற்றுப் பின்ணணியை மையமாக கொண்டு "டெஹறான்" தொடர் செல்கிறது.

ஈரானிற்குள் நுழையும் இளம் பெண் மோசாட் உளவாளியின் கண்ணோட்டத்தை மையமாக இந்தத் தொடர் படமாக ஆக்கப்பட்டு உள்ளது சிறப்பு. புதிதாக உளவுத்துறை வேலையில் சேர்ந்த பெண் பழக்கப்படாத சூழ் நிலையில் ஏற்படும் சவால்களையும், நடைமுறை சிக்கல்களை எவ்வாறு சமாளிக்கிறாள் என்பதை நடிகை நிவி சுல்தான் ஆங்காங்கே உணர்வு பூர்வாக நடித்துக் காட்டியுள்ளார்.

ஈரானில் புரட்சிக்கு முன்னர் ஒரு சிறுபான்மை யூத சமுதாயம் ஒன்று இருந்தது, புரட்சிக்குப் பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்னிலையால் அந்தச் சமுதாயம் இஸ்ரேலிற்கும், மேற்கத்தைய நாடுகளுக்கும் குடிபெயர்ந்தது. ஆயினும் இன்று வரை தங்கள் அடையாளங்களை மறைத்துக் கொண்டு இன்றும் சில யூதர்கள் ஈரானியச் சமூகத்துடன் இரண்ட றக் கலந்து வாழ்வதனையும், புலம் பெயர்வால் சிதறுண்ட குடும்பங்களின் வலியையும் இந்தத் தொடர் தொட்டுச் செல்கிறது.

ஏறத்தாழ நான்கு தசாப்பதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட இஸ்லாமியப் புரட்சியின் காரணமாக ஏற்பட்ட நாளாந்த வாழ்க்கையில் தாக்கங்களை, தொடர் கதாப்பாத்திரங்களூடாக காட்டியுள்ளது. குறிப்பாக "அரசாங்கம் புதுசு புதுசா அணுகுண்டு செய்தால் என்ன? வாழ்க்கை செலவு குறைந்த பாடில்லை" என வாகன ஓட்டுனர் அங்கலாய்க்கும் போது எங்கள் வாழ்க்கையுடன் தொடர்பு படுத்தி பார்க்கலாம்.


மத விழுமியங்களையும், தற்கால அரசையும் ஏற்று நடக்கும் ஒரு சாராருக்கும், அரசை எதிர்த்து புரட்சி பண்ணும் இன்னொரு சாராருக்கும் இடையில் ஏற்படும் மோதல்கள், தொழில்னுட்ப யுகத்தில் இளையோர் மத்தியில் உள்ள அரசியல் அபிலாஷைகள், பொருளாதாரச் சிக்கல்கள் என ஈரானிய சமூகத்தின் பல்வேறு அரசியல் சிக்கல்களையும் சொல்லுகிறது டெஹறான்.

இஸ்ரேலிய தயாரிப்பான இந்தத் தொடரில் இஸ்ரேலிய மற்றும் ஈரானிய நடிகர்கள் ஒன்றாக சேர்ந்து நடித்துள்ளார்கள். இதில் நடித்த ஷோன் டோப், நவீட் நெகா போன்ற நடிகர்களின் நடிப்பு இரசிக்கும்படியாக இருந்தது. ஹீப்ரு, ஆங்கிலம் மற்றும் பாரசீகம் போன்ற மொழிகளில் உருவாக்கப்பட்ட இந்த தொடர், ஆங்கிலம் அல்லாத மொழித் தொடருக்குரிய ஏமி விருது ஒன்றை எடுத்துள்ளது.

நடைமுறை சிக்கல்கள் காரணமாக இந்தத் தொடரின் ஈரான் என்று காட்டப்படும் பாகங்கள் கிரேக்கத்தில் படமாக்கப்பட்டுள்ளது. இது ஈரானிய பார்வையாளர்கள் மத்தியில் பெரிதாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இஸ்ரேலிய தயாரிப்பு என்பதால் இஸ்ரேலியக் கண்ணோட்டதினை மட்டுமே பிரதிபலிப்பதாக சில விமர்சகர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஈரானிய சமூக கலாச்சாரம் மற்றும் மத்திய கிழக்கு அரசியலில் ஆர்வமுள்ளவர்கள், விறுவிறுப்பான உளவுத்துறை சம்பந்தமான தொடர்கள் பார்ப்பவர்கள் பார்க்க வேண்டிய தொடர் டெஹறான்.

கட்டுரையாளர்: ramaniwrites@gmail.com



# மாற்றுத் திறனாளிகளை கைதூக்கிவிட ஒருங்கிணைந்த ஒரு திட்டம் அவசியம்

## வன்னி விழிப்புலன் இழந்தோர் சங்க தலைவர் ஞானக்குமார் நேர்காணல்

'தாயகத்தில் மாற்றுத் திறனாளிகள் மிகவும் துன்பத்தில் இருக்கின்றார்கள். இப்போதைய தலைமுறையால்தான் இவர்களுக்கான செயற்திட்டங்களை முன்னெடுக்க முடியும். அனைத்து உறவுகளும் ஒருங்கிணைந்த ஒரு திட்டத்தின் மூலமாகத்தான் இந்த மாற்றுத் திறனாளிகளைக் கைதூக்கிவிட முடியும்" என்று கூறுகின்றார் வன்னிவிழிப்புலன் இழந்தோர் சங்கத்தின் தலைவர் **பி.ஞானக்குமார்.**

நேர்காணல் ஒன்றில் இதனை அவர் தெரிவித்தார்.

அவரது நேர்காணலின் விபரம் வருமாறு:

**கேள்வி:** மாற்றுத் திறனாளிகள் தினம் வருடாவருடம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இது குறித்த உங்களுடைய பார்வை என்ன?

**பதில்:** மாற்றுத் திறனாளிகள் தினத்தில் அவர்களை அழைத்து அவர்களுக்கு கௌரவப்படுத்துவதுடன் தமது கடமை முடிவடைந்துவிட்டதாக சமூகம் கருதுகின்றது. உண்மையில் அது மட்டும் எமது பிரச்னையல்ல. பொருண்மிய, பண்பாட்டு தடைகளைத் தாண்டிச் செல்வதற்கு இவர்களுக்கு இந்த சமூகம் ஒத்துழைக்க வேண்டும். இதுதான் மாற்றுத்திறனாளிகள் தினத்தின் குறிக்கோளாக இருக்க வேண்டும். சமூகத்திலே நாங்கள் பல இடர்களைச் சந்திக்கின்றோம். அவற்றைத் தாண்டிச் செல்வதற்கான வழிகள் காணப்பட வேண்டும்.

மாற்றுத் திறனாளிகளைப் பொறுத்தவரை அவர்கள் மிகவும் துன்பப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இப்போதைய தலைமுறையால்தான் இவர்களுக்கான செயற்திட்டங்களை முன்னெடுக்க முடியும். அனைத்து உறவுகளும் ஒருங்கிணைந்த ஒரு திட்டத்தின் மூலமாகத்தான் இந்த மாற்றுத் திறனாளிகளைக் கைதூக்கிவிட முடியும். இவ்வாறான ஒரு பொறிமுறையை அமைக்காவிட்டால், இவர்கள் வெவ்வேறு திசைகளில் பயணிக்க வேண்டிய நிலை ஏற்படும்போது மிகவும் கவலையாக இருக்கும்.

**கேள்வி:** வன்னி விழிப்புலன் இழந்தோர் சங்கம் என்ற அமைப்பு ஒன்றை உருவாக்கி நீங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றீர்கள். இந்த அமைப்பை எதற்காக உருவாகினீர்கள்? அதன் செயற்பாடுகள் என்ன என்பதை கூறமுடியுமா?

**பதில்:** வன்னி விழிப்புலன் இழந்தோர் சங்கம் 2013 ஜூலை மாதம் 22 ஆம் திகதி இதனை நாம் ஆரம்பித்தோம். 2009 க்கு பின்னர் பார்வையற்றோரை தாங்குவதற்கு அவர்களுடைய நலன்களைக் கவனிப்பதற்கு யாருமற்ற ஒரு நிலை இருந்தது. அந்த வேளையில் இந்த சங்கத்தை ஆரம்பிப்பதற்கு எமக்கு இரண்டு மூன்று காரணங்கள் இருந்தன. முதலாவதாக, போரின்போது பார்வை இழந்த எமது உறவுகளுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக சில நிறுவனங்களை நாம் அணுகிய போது, அந்த நிறுவனங்கள் அவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. அதேவேளையில், மருத்துவரீதியாக பராமரிக்க முடியாத சூழலில் எமது நான்கு உறவுகளை நாங்கள் இழந்திருக்கின்றோம்.

இது போன்ற காரணங்கள் ஒருங்கிணைந்த ஒரு அமைப்புக்கான தேவையை எமக்கு உணர்த்தியது. இதனால்தான் நாம் வடக்கு கிழக்கில் உள்ள உறவுகளை இணைத்து வன்னி வழிப்புலன் இழந்தோர் சங்கம் என்ற பெயரிலான இந்த அமைப்பை உருவாக்கினோம். கிளிநொச்சியிலிருந்து அது இயங்கிவருகின்றது. வன்னி என்பது ஒரு பிரதேசத்தை மட்டும் குறிப்பிடவில்லை. வடக்கு, கிழக்கில் இப்போது 278 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இதில் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். இதில் நேரடியாக பார்வை இழந்தவர்களும் இருக்கின்றார்கள். பிறக்கும் போதே பார்வை இல்லாமல் பிறந்தவர்களும் இருக்கின்றார்கள்.

இந்த நிறுவனத்துக்கு ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட ஒரு இயக்குனர் சபை இருக்கின்றது. இதில் பொருளாளர் மட்டும்தான் பார்வை உள்ளவர். மற்ற அனைவரும் பார்வையற்றவர்கள். இதனைவிட பொதுச் சபை உள்ளது. காப்பாளர் சபை ஒன்றும் உள்ளது. எமது நிதி விவகாரங்களையும் ஏனைய முக்கிய விடயங்களையும் இவர்கள் கவனித்துக் கொள்வார்கள். இவற்றைவிட, எதிர்ச் சபை ஒன்றையும் அமைத்துள்ளோம். 3 பேரைக் கொண்ட இந்த சபை, இயக்குனர் சபையின் நடவடிக்கைகளைக் கண்காணித்துக்கொண்டிருக்கும். இவ்வாறு நேர்த்தியான ஒரு யாப்பின் அடிப்படையில்தான் எமது சங்கம் செயற்படுகின்றது.

நாங்கள் பார்வையற்றவர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கான கல்வி, மருத்துவம், வாழ்வாதாரம், போக்குவரத்து மற்றும் உரிமைகள் போன்ற விடயங்களை முன்னெடுத்துவருகின்றோம்.

**கேள்வி:** போரினால் விழிப்புலன் இழந்தவர்களின் நலன்களுக்காக அரசாங்கத் தரப்பிலிருந்து எவ்வாறான உதவிகள் கிடைத்துள்ளது?

**பதில்:** எமது அமைப்பை உருவாக்கி எட்டு ஆண்டுகளைக் கடந்திருக்கின்றோம். இந்த எட்டு ஆண்டுகளுக்குள் போரால் பாதிக்கப்பட்டு விழிப்புலன் இழந்தவர்களைப் பொறுத்தவரையில், சமூகசேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் 5,000 ரூபா கொடுப்பனவுதான் கிடைக்கிறது. அதுவும் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. இதனைவிட, அரச தரப்பிலிருந்து எந்தவிதமான உதவிகளும் கிடைப்பதில்லை.

எமக்கு அலுவலகத்தை அமைப்பதற்காக இப்போதுதான் ஒரு காணி கிடைத்துள்ளது. புலம்பெயர்ந்த எமது உறவுகளின் உதவியால்தான் அது சாத்தியமானது.

**கேள்வி:** விழிப்புலன் இழந்தவர்களைப் பொறுத்தவரையில், அவர்களில் பெரும்பாலானவர்கள் இளம் வயதிலேயே தமது பார்வையை இழந்தவர்கள். அவர்களின் கல்வி வேலைவாய்ப்புக்கான திட்டங்கள் உள்ளனவா?

**பதில்:** 2009 க்கு முன்னர் பார்வை இழந்தவர்களும் இருக்கின்றார்கள். அதற்குப் பின்னர் பார்வை இழந்தவர்களும் இருக்கின்றார்கள். 2009 க்கு முன்னர் எமக்கு நல்ல ஒரு சூழல் இருந்தது. கிளிநொச்சியில் நவம் அறிவுக்கூடம் என்பது பார்வையற்றவர்களுக்கு உதவும் வகையில் செயற்படுத்தப்பட்டது. அங்கு அனைத்து வகையான கல்விச் செயற்பாடுகளையும் முன்னெடுக்கக்கூடியதாக இருந்தது.

உண்மையில், இன்று இல்லாத வசதிகளையும், வாய்ப்புக்களையும் நாம் அப்போது பெற்றிருந்தோம். இப்போது வருகின்ற புதிய நவீன கருவிகள் அனைத்தும் அப்போதே எம்மிடம் காணப்பட்டது. அதன்மூலமாக கல்விச் செயற்திட்டங்களை முன்னெடுக்கக்கூடியதாக இருந்தது. முக்கியமாகச் சொல்லவேண்டியது என்னவென்றால், 2000 ஆம் ஆண்டிலிருந்தே எமக்கு கணினி கற்பிக்கப்பட்டது. 2002 இல் அதற்கான முறையான கணினிக் கல்வியை நாம் பெற்றுக்கொண்டோம். அவுஸ்திரேலியாவிலிருந்து வரவளைக்கப்பட்ட ஒருவர் மூலமாக பார்வையற்றவர்களுக்கான கணினிப் பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அதன்மூலமாகப் பெற்றுக்கொண்ட அறிவு, அனுபவத்தின் மூலமாக இப்போது இன்றுள்ளவர்களுக்கு பல நிறுவனங்களின் உதவியுடன் பயிற்சிகளைக் கொடுக்கின்றோம்.

3 பிரிவுகளாக இந்த கணினிப் பயிற்சிகளை நாம் வழங்குகின்றோம். பல்கலைக் கழகத்தில் படித்து பட்டதாரியாக வெளியேறியவர்களுக்கு ஒரு பிரிவாக பயிற்சியளிக்கிறோம். இரண்டாவதாக, உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுகளுக்காக காத்திருப்பவவர்களுக்காக மற்றொரு பிரிவு. இதன்மூலம் இவர்கள் தமது அடுத்த கட்டத்துக்கான தேடல்களை இணையத்தின் மூலமாக முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும். மூன்றாவதாக, போரால் பாதிக்கப்பட்ட வயதானவர்களுக்கான கணினிப் பயிற்சி. இதன் மூலமாக சுயதொழில் முயற்சிகளில் அவர்களை ஈடுபடுத்த முடியும்.

இறுவட்டுக்களைப் பதிவு செய்து விற்களை செய்தல் போன்வற்றை இவர்களால் செய்யக்கூடியதாக இருக்கும். தற்போது கொரோனா இடர் காரணமாக இவற்றை இடைநிறுத்தியிருக்கின்றோம். ஆனால், இதனை தொடர்ந்து முன்னெடுப்போம்.

போரின் போது முழுமையாக பார்வையை இழந்த பலர் வேறுவிதமான பாதிப்புக்களுக்கும் உள்ளாகியிருக்கின்றார்கள். இவர்களுக்கு வாழ்வாதாரத்தைப் பெறக்கூடிய வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பது சிரமமானதாக இருக்கின்றது. இவ்வாறானவர்களுக்கு ஒரு தொகைப் பணத்தை அவர்களுடைய பெயரில் நிலையான வைப்பிலிட்டு மாதாந்தம் அதன்மூலமாக அவர்கள் ஒரு வருமானததைப் பெற்றுக்கொள்ளத்தக்கவகையிலான திட்டம் ஒன்றைச் செயற்படுத்துகின்றோம். 32 பேருக்கு இவ்வாறான திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றோம். புலம்பெயர்ந்த எமது உறவுகள் தாயக மேம்பாட்டு அமைப்பின் மூலமாக இதனைச் செயற்படுத்தியுள்ளார்கள்.

**கேள்வி:** இவ்வாறான திட்டங்களின் மூலமாக பார்வையிழந்தவர்கள் தமது வாழ்வாதாரத்தை தாமே தேடிக்கொள்ள முடியும் என்ற நிலைமையை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு உள்ளதா?

**பதில்:** ஆம்! தாயக மற்றும் புலம்பெயர்ந்த மக்களோடு ஆலோசனை நடத்தப்பட்டு ஒரு குழுவின் ஊடாக சிறந்த பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டு இதனைச் செயற்படுத்திக்கொண்டு வருகின்றோம். இந்தத் திட்டத்தின் அடிப்படையில்தான் வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடியவர்களாக 104 பேரை இனங்கண்டுள்ளோம். அதன் தொடர்பாக வரக்கூடிய வெற்றிகள், தோல்விகளைக் கண்காணித்து அவர்களை முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய பொறிமுறை ஒன்றை அமைத்திருக்கின்றோம். இந்த பொறிமுறையின் மூலமாக அவர்களுக்கு வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும் என நம்புகிறோம்.

**கேள்வி:** இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எவ்வாறான உதவிகள், பயிற்சிகள் உங்களுக்குத் தேவை?

**பதில்:** அனுபவம் உள்ளவர்களுடைய பயிற்சிகள் போன்றன எமக்குத் தேவையாக இருக்கீன்றது. இவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதிலும் தாயக மேம்பாட்டு அமைப்பும் ஏனைய அமைப்புக்களும் முயற்சிகளை முன்னெடுக்கின்றன. பயிற்சிகள் எமக்கு நிச்சயமாகத் தேவை. அதற்காக அனுபவம் உள்ளவர்களை நாம் அணுகிக்கொண்டிருக்கின்றோம். அவ்வாறானவர்கள் இருந்தால், அவர்களுடைய அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

பார்வையற்ற பலர் படித்து பட்டதாரிகளாகியிருக்கின்றார்கள். கணினித் துறையிலும் படித்துள்ளார்கள். அவ்வாறானவர்களின் அனுபவத்தை நாம் மற்றவர்களுக்கும் பெற்றுக்கொடுக்க முடியும். அதற்குப் பெருமளவு நிதி தேவையாக இருக்கின்றது. ஏற்கனவே ஆறு மாத கால கணினிப் பயிற்சி நெறி ஒன்றை நடத்தியிருந்தோம். அது போன்ற பயிற்சிகளை நடத்துவதற்கான திட்டங்கள் உள்ளது.

அதற்கு நிதிதான் தேவையாக இருக்கின்றது. ■



## நயன்தாராவின் கோல்ட்

நேரம், பிரேமம் படங்களை இயக்கிய பிரபல மலை யாள இயக்குனர் அல்போன்ஸ் புத்ரன். இவர் தற்போது இயக்கி வரும் படம் கோல்ட். இதில் நயன்தாராவும், பிருத்விராஜும் நடிக்கிறார்கள். இதன் படப்பிடிப்பு தற்போது நிறைவுக்கு வந்துள்ளது.

கோல்ட் படத்தின் படப்பிடிப்பு முடிந்து தற்போது எடிட்டிங் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் படம் நேரம், பிரேமம் போன்றது அல்ல. இது வேறு மாதிரியான படம். சில நல்ல கதாபாத்திரங்கள், நல்ல நடிகர்கள், இரண்டு அல்லது மூன்று பாடல்கள் மற்றும் சிறிது நகைச்சுவையுடன் தயாராகி வருகிறது என்று இயக்குநர் கூறியுள்ளார்.



## நான் தைரியமானவள்

காதல் திருமணம் செய்த நடிகை சமந்தாவும், நாக சைதன்யாவும் பிரிவதாக அறிவித்தனர். இவர்களின் பிரிவு குறித்து பல்வேறு ஊகங்கள் வலம் வந்தன. ஆனால், இருவரும் வெளிப்படையாக பிரிவதற்கான காரணத்தை தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் சமீபத்தில் ஒரு பேட்டியில் தனது விவாகரத்து குறித்து சமந்தா மனம் திறந்துள்ளார். அதில், நான் மிகவும் பலவீனமான பெண் என்று நினைத்தேன். எங்கள் பிரிவுக்கு பிறகு நான் உடைந்து, இறந்துவிடுவேன் என்று நினைத்தேன். ஆனால், இப்போது நான் தைரியமான பெண்ணாக இருப்பதற்கு நான் பெருமைப்படுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.



## மம்முட்டியுடன் ரம்யா

ஜோக்கர் படம் மூலம் அறிமுகமானவர் ரம்யா பாண்டியன். அடுத்து சில படங்களில் நடித்திருந்தாலும், அவரால் பெரிதாக சாதிக்க முடியவில்லை. இந்த நிலையில், புகழ்பெற்ற நடிகர் மம்முட்டியுடன் மலை யாளத்தில் நண்பகல் நேரத்து மயக்கம் என்ற படத்தில் நடித்து வருகிறார். இது பலரையும் ஆச்சரியப்படுத்தி யுள்ளது.

ஜோக்கர் படத்தை பார்த்த மம்முட்டிக்கு தனது நடிப்பு பிடித்ததால் அவரின் சொந்தப் படம் ஒன்றில் நடிக்க வைக்க ஒப்பந்தம் செய்தார். ஆனால், அது இடையிலேயே நின்றுவிட இந்தப் படத்தில் நடிப்ப தற்கு பரிந்துரைத்தார். அதனால்தான் இந்த சந்தர்ப்பம் கிடைத்ததாக ரம்யா பாண்டியன் கூறியுள்ளார்.



## ஐஸ்வர்யா ராயின் நிபந்தனை

பொன்னியின் செல்வன் நாவல் அதேபெயரில் திரைப்படமாகிறது. இயக்குநர் மணிரத்னம் இரு பாகங்களாக இந்தப் படத்தை உருவாக்கி வருகின்றார். விக்ரம், கார்த்தி, ஜெயம்ரவி, ஐஸ்வர்யா ராய், த்ரிஷா, சரத்குமார் என்று பல முக்கிய நடிகர்கள் இதில் நடிக்கின்றனர். அடுத்த ஆண்டு கோடை விடுமுறைக்கு இந்தப்படம் வெளியாகவுள்ளது.

ஐஸ்வர்யா ராய் இந்தப் படத்தில் முக்கிய பாத்திரத் தில் நடிக்கிறார். இவரின் காட்சிகள் இன்னமும் படமாக் கப்பட வேண்டியுள்ளதாம். தாமதத்துக்கு காரணம் அவர் சம்பந்தமான காட்சியை படம்பிடிக்க இரு நாட்கள் நீரில் மூழ்கியிருக்க வேண்டியுள்ளது. இதனால், அவர் ஒரு நிபந்தனை விதித்தாராம்.


அது இரு நாட்கள் தண்ணீருக்குள் இருக்க வேண்டும் என்பதால் தண்ணீரை ஒரே வெப்பநிலையில் - மிதமான சூட்டில் பேண வேண்டும் என்பதே அது. இதை நிறை வேற்றுவதற்காக படப்பிடிப்பு சில நாட்கள் தள்ளிப் போடப்பட்டுள்ளதாம்.

## திருமண காணொலி ரூ.80 கோடி

பிரபல இந்தி நடிகை கத்ரினா கைப் - விக்கி கவுசல் திருமணம் ராஜஸ்தான் மாநிலம் சவாய் மாதோபூரில் கோலாகலமாக நடந்து முடிந்துள்ளது .

நீண்ட நாட்களாக காதலித்து வந்த இந்த இணை வியாழக்கிழமை தங்கள் திருமண வாழ்வை தொடங்கி யுள்ளனர் . ராஜஸ்தானில் உள்ள 700 வருட பழமையான சிக்ஸ்சென்ஸ் கோட்டையில் இவர்களின் திருமணம் நடைபெற்றது.

இவர்களின் திருமணத்திற் காக பல கோடி ரூபாய் செலவிடப்பட்டதாகத் தெரிய வருகின்றது. இதனிடையே, இந்தத் திருமண நிகழ்வின் காணொலியை அமேசன் நிறுவனத்துக்கு 80 கோடி இந்திய ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.



## திரை விமர்சனம்




திரைப்படம் : ஜெயில்
இயக்கம் : வசந்தபாலன்
இசை : ஜீ. வி. பிரகாஷ்குமார்
நடிப்பு : ஜீ. வி. பிரகாஷ்குமார், அபர்ணதி

சென்னையின் பல்வேறு குடிசைப் பகுதிகளில் வாழ்ந்த மக்களை சென்னையிலிருந்து 30 கி. மீ. தள்ளி காவேரி நகர் என்ற இடத்தில் மீள் குடியமர்வு செய்கிறார்கள். அங்கு திருடனாக இருப்பவர் ஜீ. வி. பிரகாஷ், அவரின் நண்பனாக கஞ்சா கடத்துபவராக நந்தன்ராம், சிறு வயதிலேயே சிறைக்குச் சென்று திரும்பிய பாண்டி மூவரும் நெருங்கிய நண்பர்கள். அந்தப் பகுதியில் கஞ்சா கடத்தும் மற்றொரு குழுவுக்கும் நந்தன்ராமுக்கும் எப்போதும் பகை. ஒரு சண்டையில் நந்தன்ராமை எதிர் குழு கொலை செய்துவிட பதிலுக்கு பாண்டி எதிர்க்குழுவை சேர்ந்த ஒருவனைக் கொன்று விடுகிறார். கைதாகி சிறைக்குச் செல்லும் பாண்டியை மீட்டு வர ஜீ. வி. பிரகாஷ் போராடுகிறார். அதன்பின் நடக்கும் எதிர்பாராத திருப்பங்கள்தான் படத்தின் கதை.

படத்தின் கதை என்று சொல்லும் போது இதைத்தான் சொல்ல முடிகிறது. குடிசைப் பகுதி மக்களின் மீள்குடியமர்வு பிரச்னை என்று ஆரம்பத்தில் இயக்குநர் சொன்னாலும், இந்தக் கதையில் எங்கு குடிசைப்பகுதி மக்களின் மறு குடியமர்வு, அவர்களுக்கான பிரச்னை ஆகியவற்றைச் சொல்ல முடியும் என்ற கேள்வியே எழுகிறது. படத்தில் அவர்களது பிரச்னைகளைப் பேசும் விதமாக ஓரிரு காட்சிகளை வைத்திருக்கிறார்கள், அவ்வளவுதான்.

படம் முழுவதும் அரைக்காற்சட்டை, ரீசேர்ட், கலர் அடித்த தலைஅலங்காரம், கொஞ்சம் தாடி என அந்தப் பகுதி இளைஞனாகவே தன்னை மாற்றிக் கொண்டிருக்கிறார் ஜீ. வி. பிரகாஷ். சென்னைத் தமிழ் அவருக்கு சரளமாக வருகிறது. நட்பு, காதல், பாசம், கோபம், வெறுப்பு என பல பாவங்களைக் காட்டக் கூடிய கதாபாத்திரம். சிறிதும் குறை வைக்காமல் சிறப்பாகவே நடித்திருக்கிறார் ஜீ. வி.

அவரின், காதலியாக அபர்ணதி. பேசும் காட்சிகளில் சத்தமாகப் பேசி, கொஞ்சம் அதிக நடிப்பையே வெளிப்படுத்துகிறார். காதல் காட்சிகளில் ஜீ.வியுடன் மிக நெருக்கம் காட்டியிருக்கிறார்.

ஜீ. வியின் நண்பர்களாக நந்தன் ராம், பாண்டி. இருவருமே அவரவர் கதாபாத்திரங்களில் கொடுத்த வேலையை செவ்வனே செய்திருக்கிறார்கள். படத்தின் ஆரம்பத்திலேயே ஜீ. வி., நந்தன் ராம் ஆகியோர் நெருங்கிய நண்பர்கள் எனக் காட்டும்போது, கண்டிப்பாக நந்தன் படத்தில் இறந்துவிடுவார் என ஊகிக்க முடிகிறது. சில காட்சிகளில் ‘மெட்ராஸ்’ கார்த்தி, கலையரசனை ஞாபகப்படுத்துகிறது இந்த நட்பு.

படத்தில் வில்லனாக ரவி மரியா, காவேரி நகர் காவல் ஆய்வாளராக நடித்திருக்கிறார். தண்டனை இடமாற்றத்தில்வந்தவர். கஞ்சா கடத்த, போதைப்பொருள் கடத்த துணையாக இருக்கிறார். அவரே இரண்டு குழுக்களையும் வளர்க்கவிட்டு, மோதிக் கொள்ளவும் வைத்து அரசியல் செய்கிறார். இறுதிக்கட்டத்தில் இவர் மீண்டு வந்தது அதிர்ச்சியோ அதிர்ச்சி.

ஜீ. வி. பிரகாஷ்தான் படத்திற்கு இசை. படத்தின் இடைவேளை வரை இரண்டு, மூன்று பாடல்கள் தேவையில்லாமல் வந்து போகின்றன. ‘காத்தோடு காத்தானேன்’ பாடல் ரசிக்க வைத்தாலும் திரைக்கதையில் தவறான இடத்தில் வருகிறது. கண்ணகி நகர் காட்சிகளை நேரிலேயே பார்க்கும் உணர்வை ஏற்படுத்தியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் கணேஷ் சந்திரா.

எல்லாம் கிடைத்தும் சரியான, அழுத்தமான, உணர்வுபூர்வமான கதை, காட்சிகள் இல்லாமல் ஏமாற்றியுள்ளார் இயக்குநர்.



## கோல்களின் மன்னன்

உதைபந்தாட்ட அரங்கில் 800 கோல்களை அடித்த முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார் கிறிஸ்டி யானோ ரொனால்டோ.

பிறீமியர் லீக் தொடரில் கடந்த வியாழக்கிழமை நடந்த ஆர்சனல் அணிக்கு எதிரான போட்டியை மன் செஸ்டர் அணி 3 -2 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. இந்தப் போட்டியில் 52ஆவது நிமிடத்தில் அவர் அடித்த கோல் 800ஆவது கோலாக அமைந்தது. இந்தப் போட்டியில் 70ஆவது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தியும் அவர் கோல் ஒன்றை அடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

36 வயதான ரொனால்டோ உதைபந்தாட்ட உலகில் தனது இறுதிக் காலப்பகுதியில் உள்ளார். போர்த்துக்கல் நாட்டவரான அவர், சர்வதேச உதைபந்தாட்ட அரங்கில் அதிக கோல்கள் அடித்தவர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

கழக அரங்கில் தற்போது மன்செஸ்டர் யுனைற்றெட் அணிக்காக விளையாடி வரும் ரொனால்டோ தனது 17ஆவது வயதில் ஸ்போர்ட்டிங் கழகத்துக்காக அறிமுகமானார். அந்தக் கழகத்துக்காக விளையாடியபோது 5 கோல்களை அவர் அடித்திருந்தார். இதன்பின்னர் மன்செஸ்டர் யுனைற்றெட் கழகத்துக்காக ஆட ஆரம்பித்தார். இதுவரை 130 கோல்களை அந்தக் கழகத்துக்காக போட்டுள்ளார்.

இதனிடையே அவர் மற்றக் கழகங்களுக்காக விளையாடியபோது, ரியல் மட்ரிட் கழகத்துக்காக 450 கோல்களையும், ஜுவென்டஸ் கழகத்துக்காக 101 கோல்களையும் அடித்துள்ளார். சர்வதேச அரங்கில் போர்த்துக்கல் அணிக்காக ஆடி வரும் அவர் 115 கோல்களை அடித்துள்ளார். சர்வதேச அரங்கில் அதிக கோல்கள் சாதனையும் தற்போது இவர் வசமே உள்ளது.

சர்வதேசம், கழகங்களுக்காக 1095 போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 801 கோல்களை அடித்ததன் மூலம் 1.36 என்ற கோல் சராசரியை கொண்டுள்ளார்.

அதிகாரபூர்வ போட்டிகளில் அதிக கோல் அடித்த வீரர்களில் முதலிடத்தில் இருப்பவர் ரொனால்டோவே. சமகாலத்தில் இவரின் போட்டியாளராக மதிக்கப்படும் லயனல் மெஸ்ஸி இந்தப் பட்டியலில் மூன்றாவது இடத்தில் நீடிக்கிறார். கழங்களுக்காக 676 கோல்களும், சர்வதேச போட்டிகளில் 80 கோல்களும் அடித்துள்ள அவர் இதுவரை 756 கோல்களை அடித்துள்ளார். இரண்டாவது இடத்தில் பிரேஸில் அணியின் முன்னாள் வீரரான ஜாம்பவான் பீலே கழகங்களுக்காக 682 கோல்களையும், 77 சர்வதேச கோல்களையும் 769 கோல்களுடன் உள்ளார்.

# சரிந்தது கோலி இராச்சியம் நிமிர்ந்தது ரோஹித் இராச்சியம்

விராட் கோலியின் தலைமை இராச்சியம் முடிந்தது என்று சொல்வதைவிட, தென்னாபிரிக்கத் தொடரிலி ருந்து ரோஹித் சர்மா சகாப்தம் தொடங்குகிறது என்று இந்திய கிரிக்கெட்டில் நடந்த மாற்றங்களைப் பார்க்கலாம்.

இருபது - 20 உலகக் கிண்ணப் படுதோல்விக்குப் பின் உடனடியாகவே கோலியின் தலைமை பதவி பறிப்பு நடக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர் முன்னரே அவர் விலகினார். இந்த நிலையில் ஒருநாள் அணியின் தலைமை பதவியிலிருந்து இந்திய கிரிக்கெட் சபை இந்த முடிவு எடுக்கும் முன்பாக 48 மணி நேரம் அவகாசத்தை கோலிக்குக் கொடுத்த பின்பும் அவர் பதவி விலக மறுத்துவிட்டார்.

கோலியின் பதவி நீக்கம் குறித்து இதுவரை இந்திய கிரிக்கெட் சபை முறைப்படி அறிவிக்கவில்லை. கோலிக்குரிய காலம் முடிந்துவிட்டது. அதனால் தலைமைப் பதவி பறிக்கப்பட்டது. அடுத்ததாக ரோஹித் சர்மாவின் காலம் என்று மிகவும் இயல்பாகக் கூறுவது போல் தெரிவுக் குழுவினரின் அறிக்கை இருந்தது. இதன் மூலம் கோலியின் தலைமை பறிப்பை, நீக்கத்தை இந்தியன் கிரிக்கெட் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை என்பதே நிதர்சனம்.

2023ஆம் ஆண்டு ஒரு நாள் உலகக்கிண்ணத் தொடர் வரை தலைவராக தொடர்வேன் என்ற கனவில்தான் விராட் கோலி இருந்திருக்க வேண்டும். ஒருவேளை இருபது - 20 போட்டியில் இந்திய அணியை அரையிறுதி அல்லது இறுதிப்போட்டி வரை கொண்டு சென்றிருந்தால்கூட கோலியின் பதவிக்கு கத்தி வந்திருக்காது. ஆனால், இருபது - 20 உலகக் கிண்ணத்தில் இந்திய அணிக்கு ஏற்பட்ட மோசமான அடி, அவரின் பதவி நீக்கத்தை உறுதி செய்தது.

மகேந்திர சிங் டோனியின் பள்ளியில் படித்து வந்ததால் கோலிக்கு எளிதாக டெஸ்ட் தலைமை பதவி கிடைத்தது. டோனியால் தொடர்ந்து தலைமை பதவியில் நீடிக்க முடியாத சூழல் இருந்தபோது ஒட்டுமொத்த அணிக்கும் தலைவர் என்ற மகுடம் சூடப்பட்டது.

விராட் கோலி சக்திவாய்ந்த தலைவராகத்தான் வலம் வந்தார். கோலியால் அணிக்குள் எதையும் செய்ய முடியும் என்ற நிலை இருந்தது. பயிற்றுவிப்பாளர் நேர்முகத் துக்குக்கூட வராத ரவி சாஸ்திரிதான் பயிற்றுவிப்பாளராக வர வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட நிர்வாகிகளிடம் கோலி கேட்டுப் பெற்றார். பல நியாயமான கோரிக்கைகள், நியாயமற்ற கோரிக்கைகளும் கோலிக்கு நிறைவேறின.

இந்திய அணிக்குள் வெளிப்புறத்தில் வெற்றிகரமான தலைவராக, வீரர்களை ஊக்குவிக்கும் தலைவராக வலம் வந்தாலும், ஒய்வறையில் அவர் வீரர்களிடம் பெருந்தன்மையுடன் நடக்கவில்லை, நெருக்கமாக இருந்ததில்லை என்ற அதிருப்தி நிலவியது.

ஓய்வறையில் விராட் கோலியின் நடவடிக்கைகள் குறித்து 2 ஆண்டுகளுக்கு முன் இந்திய வீரர் ஒருவர் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், விராட் கோலியிடம் இருக்கும் பிரச்சினையே நம்பிக்கை சார்ந்த விசயம்தான். தெளிவாகப் பேசுவார், ஆனால், ஒரு தலைவராக எதையும் தெளிவாகப் பேசமாட்டார். அதனால்தான் அவர் மரியாதையை இழந்துவிட்டார்” என்றார்.

கோலி தலைவராக இருந்தபோது அணியில் உள்ள



எந்த வீரருக்கும் எந்த இடமும் உத்தரவாதம் இல்லை. இரு போட்டிகளில் ஒரு வீரர் சொதப்பிவிட்டால், தொடர்ந்து போட்டியில் இடம் கிடைக்குமா என்பது கூடத் தெரியாது. இதுபோன்று வீரர்கள் அனைவரையும் தனது பதவிக் காலத்தில் பதற்றத்தோடு கோலி வைத்திருந்தார் என்று குற்றம் சாட்டப்படுகிறது.

குல்தீப் யாதவை அவ்வாறே திறமையை பார்க்காமலே அவரின் வாழ்வு அழியக் காரணமானார். இவர் போன்ற பல வீரர்களை கோலிக்கு எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற சூட்சுமம் தெரிந்திருக்கவில்லை.

ஆனால், டோனியிடம் தலைமை பாடம் படித்த கோலி இவ்வளவு மோசமாக தலைமைத்துவம் செய்திருக்கிறார் என்பதே வியப்பானது. டோனியின் ஓய்வறை எப்போதும் சக வீரர்களுக்காகத் திறந்தே இருக்கும். எந்த வீரரும் எந்த நேரத்திலும் வரலாம். வீரர்களிடையே டோனி இடைவெளி இல்லாமல் பழகினார். டோனிமீது சக வீரர்களுக்கு நம்பிக்கை இருந்தது. அந்த பந்தம்தான் டோனியைச் சிறந்த தலைவராக உயர்த்தியது.

ஆனால், கோலியிடம் தலைமைப் பொறுப்பு வழங்கப்பட்டதிலிருந்து தன்னைப் பெரிய ஆளுமையாக நினைத்து நடக்கத் தொடங்கினார். வீரர்களிடம் இடைவெளியுடன் பழகியது நம்பிக்கையின்மையை வீரர்களிடம் அதிகப்படுத்தியது. ஆனால், சக வீரர்களிடம் எப்போதுமே அரவணைப்புடன் தோளில் கைபோட்டு அவர்களுக்கு ஏற்றாற்போல் ரோஹித் சர்மா பேசக்கூடியவர்.

ஒரு வீரர் 5 ஓட்டங்கள் அடித்தாலும், அதேவீரர் 50 ஓட்டங்கள் அடித்தாலும் தான் பழகுவதில், அந்த வீரரை நடத்துவதில் ரோஹித் சர்மா வேறுபாடு காட்டாதவர். மனதளவில் வீரர்கள் நம்பிக்கையிழந்தாலும், கவலைப்படாதே நான் இருக்கிறேன் என்று ஆறுதல் கூறி அரவணைக்கும் தன்மை ரோஹித்திடம் உண்டு. இது கோலியிடம் இல்லை என்று கூறப்படுகிறது.

இப்போது கோலியிடம் இருந்து தலைமைப் பதவி பறிக்கப்பட்ட நிலையில் இந்த மாற்றத்தை அவர் எவ்வாறு ஏற்பார், தன்னை எவ்வாறு தகவமைத்துக்கொள்ளப் போகிறார் என்பது எதிர்பார்ப்புக்குரியது. டெஸ்ட் போட்டிகளுக்கு தலைவராக கோலி தொடர்ந்து இருந்தாலும், இதிலும் கோலிக்கு நிச்சயமற்ற தன்மை நிலவுமா என்பது அவர் எதிர்வரும் போட்டிகளில் செயல்படும் விதத்தைப் பொறுத்துதான் அமையும்.

# எழுச்சியும் போட்டியும்

உலக டெஸ்ட் அரங்கில் இன்று ஆதிக்கம் செலுத்தும் அணியாக எழுந்திருப்பது இந்திய அணிதான். தொடர்ச்சியாக 14 வெற்றிகளையும் பதிவு செய்துள்ளது. இந்தியாவின் டெஸ்ட் மீதானா ஆதிக்கத்துக்கு விராட் கோலி தலைமையில் வேகப்பந்துவீச்சாளர்களின் அபார வளர்ச்சி, சிறந்த துடுப்பாட்ட வீரர்கள், புத்திசாலித்தனமான சுழல் பந்துவீச்சாளர்கள் என அமைந்த கூட்டணிதான் காரணம்.

இந்திய அணியின் அபார எழுச்சிக்கு வித்திட்டவர்களில் ரஹானேயும், புஜாராவும் மிகமுக்கியமானவர்கள். இளம் வீரர்களின் இந்த அபார எழுச்சி தற்போது அணியிலுள்ள மூத்த வீரர்களுக்கு தற்போது சவாலாக ஆரம்பித்துள்ளது. இதில் அதிகம் பாதிக்கப்படுவது ரஹானே, புஜாரா ஆகியோர்தான். அண்மைக்காலமாக சரியாக விளையாடமுடியாமல் தவிக்கும் இருவரின் இடமும் தற்போது கேள்விக்குறியாகி வருகின்றது என்பதே உண்மை.

ரஹானேயின் தொடர் சொதப்பல் ஆட்டம் டெஸ்ட் அணியின் உப தலைவர் பதவியை தற்போது ரோஹித் சர்மாவிடம் இழக்கவைத்துள்ளது. அணியில் இடம்பெறுவாரா இல்லையா என்ற நிலையில், தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அவருடன், அண்மைக்காலமாக படுமோசமான



ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் புஜாராவுக்கும் அணியில் இடம்கிடைத்துள்ளது. ஆனால், டெஸ்ட் அணியின் தலைவர் என்ற முறையிலேயே விராட் கோலிக்கு இந்தத் தொடரில் இடம்கிடைத்துள்ளது. அண்மைக்காலமாக ஓட்டங்களை சேர்ப்பதில் அவரும் தடுமாறியே வருகின்றார்.

ரஹானேக்கும், புஜாராவுக்கும் இதை இறுதி வாய்ப்பாகவே பார்க்கலாம். இந்த சந்தர்ப்பமும்கூட கடந்தகாலத்தில் நெருக்கடியான நிலைமையில் அவர்கள் கைகொடுத்த தருணங்களுக்காகவே வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தொடரிலும் அவர்கள் சொதப்புவார்களேயானால் அவர்களால் மீண்டும் இந்திய அணிக்குள் வருவதற்கான வாய்ப்பு முற்றாகவே இல்லாமல் போய்விடவும் சந்தர்ப்பம் உண்டு. ஏனெனில், நியூசிலாந்து அணிக்கு எதிரான போட்டிகளில் சதம் அடித்த மயங்க் அகர்வால், ஸ்ரேயாஸ் ஐயர் ஆகியோர் அணியில் தமது இருப்பை நிலையாக தக்கவைத்தமையே.

இதேநேரத்தில் இப்போது இந்திய அணியில் எழுந்துள்ள இன்னொரு பிரச்சனை எழுந்துள்ளது. அது நடுவரிசைக்கான போட்டி. ரஹானே, புஜாரா ஆகியோரின் சொதப்பலால் ஷுப்மன் கில்லை நடுவரிசையில் களமிறக்க முயற்சித்தது. ஆனால், கே. எல். ராகுலின் காயம் காரணமாக அது சாத்தியமாகவில்லை. ஸ்ரேயாஷ் தனது ஆட்டம் மூலம் அந்த இடத்தை பிடித்துள்ளமையால், நடுவரிசைக்கான போட்டி இன்னமும் அதிகரித்துள்ளது. இந்தப் போட்டியில் நிரந்தர இடம் பிடிக்கப் போவது யார்….? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# மெல்பேர்ன் டொமினிக் ஜீவா நினைவரங்கில் முருகபூபதியின் மூன்று நூல்கள் வெளியீடு



இலங்கையின் மூத்த எழுத்தாளரும் மல்லிகை ஆசிரியருமான டொமினிக் ஜீவாவினால் இலக்கிய உலகிற்கு 1970 களில் அறிமுகப்படுத்தப்பட்ட எழுத்தாளரும் சமூகப் பணியாளருமான முருகபூபதியின் 70 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கதைத் தொகுப்பின் கதை ( சிறுகதை ) நடந்தாய் வாழி களனி கங்கை ( கட்டுரை ) பாட்டி சொன்ன கதைகள் ( சிறுவர் இலக்கியம் ) நூல்களின் வெளியீட்டு அரங்கு எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4-00 மணிக்கு அவுஸ்திரேலியா மெல்பேர்னில் Berwick senior citizens hall (112 High Street, Berwick VIC 3806) மண்டபத்தில் நடைபெறும்.

மெல்பேர்ன் வாசகர் வட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி சாந்தி சிவக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வு, திருமதி மேகானந்தா சிவராசாவின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும். திருமதி சரண்யா மனோசங்கர் தமிழ்வாழ்த்து பாடுவார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் பெருந்தொற்றினால் மறைந்த ஈழத்தின் மூத்த எழுத்தாளரும், மல்லிகை இதழின் ஆசிரியருமான டொமினிக்ஜீவாவின் உருவப்படத்திற்கு விளக்கேற்றி, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு, அவரைப்பற்றிய நினைவுரை நிகழ்த்தப்படும்.



எழுத்தாளர் டொக்டர் நடேசன் நினைவுரையாற்றுவார். சட்டத்தரணி செல்வத்துரை ரவீந்திரன் முருகபூபதியின் நூல்களை வெளியிட்டு வைத்து உரையாற்றுவார். கொழும்பு இலக்கியன் வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்ட பாட்டி சொன்ன கதைகள் (சிறுவர் இலக்கியம்) நூல் குறித்து செல்வன் ஹரீஜன் பசுபதி தாசனும், யாழ். ஜீவநதி வெளியீடாக வந்துள்ள கதைத் தொகுப்பின் கதை நூல் குறித்து திருமதி கலாதேவி பால சண்முகன், அசோக்குமார் ஜனார்த் தனன், க. ராஜா ஆகியோரும், கொழும்பு குமரன் பதிப்பகத்தின் வெளியீடாக வந்துள்ள நடந் தாய் வாழி களனி கங்கை நூல் குறித்து திரு. கிறிஸ்டி நல்லரெத்தின மும் உரையாற்றுவர்.

**நடந்தாய் வாழி களனி கங்கை**

இலங்கையின் வற்றாத ஜீவ நதியான களனி கங்கையின் தீரத்தில் நிகழ்ந்த வரலாற்றுச் செய்திகள், மற்றும் ஐதீகக் கதைகளின் பின்னணி, அங்கு ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் பற்றிய விவரணச்சித் திரமாக படைக்கப்பட்ட களனி நதியின் கரையோரம் எங்கும் நடந்த சுவாரசிய மான கதைகளைக்கூறும் நூல்.

நடந்தாய் வாழி களனி கங்கை இலங்கையில் அரங்கம் பத்திரிகையில் தொடராக வெளிவந்தமை குறிப்பிடத்தகுந்தது.

**கதைத் தொகுப்பின் கதை**

புகலிட வாழ்வுக்கோலங்களை சித்திரிக்கும் 15 சிறுகதைக்களைக் கொண்டிருக்கும் முருகபூபதியின் ஏழாவது சிறுகதைத் தொகுதியான கதைத் தொகுப்பின் கதை நூலில் ஒவ்வொரு கதை பற்றியும் 15 பேர் தமது வாசிப்பு அனுபவங்களையும் பதிவு செய்துள்ளனர்.

**பாட்டி சொன்ன கதைகள்**

சின்னஞ்சிறிய வயதில் முருகபூபதியின் பாட்டி அவரை உறங்கவைக்கும்பொழுது சொன்ன (Bed time stories) கதைகளை உருவகக் கதைகளாக மாற்றி, இன்றைய நவீன காலத்திற்கு ஏற்ப எழுதப்பட்ட சிறுவர்களுக்கு மாத்திரமின்றி பெரியவர்களுக்குமான படைப்புகள். இந்த நூல் தமிழ் நாட்டில் வெளிவந்தமையால், அங்கு நூலகசேவைகள் திணைக்களம், சிறுவர் இலக்கிய வரிசையில் இதனைச் சேர்த்தது. பாட்டி சொன்ன கதைகள். தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட சில கதைகள், சிறுவர்களுக்கு ஆர்வமூட்டும் வகையில் சிறுவர் கதைகள் என்ற பெயரில் வண்ணப் படங்களுடன் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.

இதனை இலங்கை கல்வி அமைச்சு சிறுவர் இலக்கிய வரிசையில் இணைத்துள்ளது.

இந்த அரங்கில் எழுத்தாளரும் நாடகக் கலைஞரும் நீண்ட காலமாக அவுஸ்திரேலியாவிலிருந்து அக்கினிக் குஞ்சு இதழை முதலில் அச்சு வடிவிலும் வெளியிட்டு, பின்னர் இணைய இதழாகவும் வடிவமைத்து வெளியிட்டு வரும் யாழ். பாஸ்கர் மல்லிகை ஜீவா நினைவு விருது பெறுகிறார். ■

# நூருல் அயின் நஜ்முல் ஹுசைனின் ‘திதுலன தாரக்கா’

**இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றி கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் தரும் ‘திதுலன தாரக்கா’ (மின்னும் தாரகைகள் ) சிங்கள ஆய்வு நூல்**

அரசாங்க தகவல் திணைக்கள ஓய்வு நிலை தகவல் அதிகாரியும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுஸைன் எழுதிய இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய ஆய்வு நூலான “திதுலன தாரக்கா” என்ற சிங்கள நூல் கடந்த 4/12/2021 கொழும்பில் வெளியிடப்பட்டது.

இலங்கையில் எழுதி வரும் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களை இனங் கண்டு அவர்களைப் பற்றிய தகவல்களைப் பெற்று 2018 ஆம் ஆண்டு அவரால் வெளியிடப்பட்ட “மின்னும் தாரகைகள்” எனும் தமிழ் நூலின் சிங்கள மொழி பெயர்ப்பாக இதனைக் கொண்டாலும் தமிழ் நூல் வெளி வந்த பிறகு நூல்களை வெளியிட்ட நூலாசிரியர்களும் இதில் இணைக்கப்பட்டிருப்பது விசேட அம்சமாகும். தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போன ஒரு சில நூலாசிரியர்களைத் தவிர எல்லா நூலாசிரியர்களும் இதில் இணைக்கப் பட்டிருக்கிறார்கள்.

இலங்கை பெரும்பான்மை சமூகத்தினரிடையே, இலக்கியவாதிகளிடையே இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தும் அரிய பெரிய நோக்கத்தோடு எழுதப்பட்ட நூலே “திதுலன தாரக்கா”.

இதன் முதலாவது அத்தியாயம் “நூல்களைத் தந்த நூலாசிரியர்கள்” பற்றி பேசுகிறது. தமிழ் நூலில் நூல்களை வெளியிட்ட நூலாசிரியர்கள் 87 பேரின் தகவல்களே இடம் பெற்றுள்ளன.

ஆனால் இந்த சிங்கள நூலில் 124 நூலாசிரியர்கள் பற்றிய விபரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் வெளிவந்த முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றியும், அவர்களது நூல்கள் பற்றியும் இந்த நூலில் விரிவாக ஆராயப் பட்டுள்ளன.



88 வயதுடைய நிந்தவூரைச் சேர்ந்த மூத்த பெண் ஆளுமையான மைமூனா செய்னுலாப்தீன் பற்றிய தகவல்களுடன் ஆரம்பமாகும் இந்த சிங்கள ஆய்வு நூல், ஆங்கில கவிதை நூலை வெளியிட்ட எட்டு வயது சிறுமியான தெஹிவளையைச் சேர்ந்த சஹானா சாஸ்லியுடைய தகவலுடன் முடிவடைகின்றமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

நூல்களை வெளியிட்ட இளம் எழுத்தாளர்கள் பற்றிய தகவல்கள் இரண்டாவது அத்தியாயமாக இடம்பெற்றுள்ளது.

நூல்களை வெளியிடாவிட்டாலும் எழுத்துலகுக்கு பங்களிப்பு செய்த முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் பெயர் பட்டியல், வானொலிக்கு மட்டும் பங்களிப்பு செய்த முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய பெயர் பட்டியல் என்பனவும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

அவ்வாறே இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்களை ஆசிரியர்களாக கொண்டு வெளிவந்த சஞ்சிகைகள், பத்திரிகைகள் பற்றிய விபரங்கள், இலங்கையில் இலக் கியத்திற்கு பங்களிப்பு செய்த இலக்கியத் தம்பதிகள் போன்ற பல்வேறு தகவல்க ளுடன் சிறந்த அட்டைப் படத்தையும் தாங்கி மிகவும் சிறப்பாகவே வெளிவந் துள்ளது இந்த சிங்கள ஆய்வு நூல்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் தெசத்திய சிங்கள சஞ்சிகையின் விசேட கட்டுரையாளராகவும், கொழும்பு மாவட்ட செயலகத்தின் “கொழும்ப புவத்” சிங்கள சஞ்சிகையின் பிரதம ஆசி ரியராகவும் பணியாற்றிய நூருல் அயின் நஜ்முல் ஹுசைனினாலேயே இந்த ஆய்வு நூலின் சிங்கள மொழி பெயர்ப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தொடர்புகளுக்கு - 0718-423459**

# மணல் வீடு



என். நிலவிந்தன்

நுரை கடலலை கரை மணல் மோதி ஆனந்தக்கிறக்கத்தில் ஓடியாடிக் கொண்டிருந்தது. மேலெழுந்த கடலலைகளின் ஆரவாரம் விரவியிருந்தன. உப்புக்காற்று வெளியெல்லாம் ததும்பி·வியாபித்திருந்தது.

கா... கா... கா... என்ற கறுப்பு நிறக்காக்கையின் கரைச்சல் இறைச்சலும் ‘ஏலே லோ அய்லாசா ஏலேலோ அய்லசா...’ என்று கரைவலை பாடலும், தென்னங்கீற்றுக்களில் ஓலைகளில் உரசல்களும் கடல்ச்சூழலை சொந்தமாகிக் கொண்டிருந்தன. எரிக்கலை பூக்களில் தேனைப்பருகும் வண்டும் தன் ஒலி கடலொலியோடு மோதுவதை உணருகின்றது.

கடலை வானநிறம் தொட்டதா? வானநிறம் கடலை தொட்டதா? எல்லாமே நிலத்தின் ஜாலம். ஆங்காங்கே ஓரிரண்டு கட்டுமரங்கள் கடற்கரை மணல் மேடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. கட்டுமரம் அருகி வரும் காலமாகப் போய்விட்டது. இயந்திரப்படகு கடல் வெளிகளில் நிறைந்திருந்தன. முள்ளிவாய்க்கால் கடலில் நின்ற பல கட்டுமரங்கள் பேரவலத்தோடு அடிபட்டுப் போய்விட்டது.

ஆழ்கடல் அன்னை அள்ளி தரும் பெண்மை அவளுக்கு அதிக இரக்கம் இருக்கு ரெத்த வெள்ளமாய் கிடக்கேக்க பார்த்தாள் தானே! இரக்கம் இல்லாமலா போகும். பாவம் சாபப்பட்ட மக்களை சாபத்திலிருந்து காக்கும் கடலை இவை என்று நம்பும் மக்கள் அவர்கள்.

கடற்தொழில் தான் இந்த மக்களுக்கு உயிர் நாடி. இன்று படிச்சும் பிள்ளைகள் கம்பஸ் எண்டு போய் சிலதுகள் நல்ல வேலைகளுக்கு போகுதுகள். படிச்ச சமூகங்கள் ஊடுறுவிச் செல்கிறது.

இங்கு வாழ்பவர்கள் அன்பானவர்கள். படித்த மேதைகளும் படிக்காத மேதைகளும் அரசியலை எதிர்பார்த்து தேர்தல் காலங்களில் பாடுபட்டும் பக்குவபட்டவர்களாகவும் காலங்களை கடந்து செல்கிறார்கள்.

இன்னும் இந்தக் காற்று கடக்கவே இல்லை. இரத்தக்கரை போகவே இல்லை. ஆழியின் குரலில் நெடிய சத்தம் வலியின் நீட்சியால் ஆங்காங்காங்கே ஒலித்துக் கொண்டு கிடக்கு. முறிந்த தென்னை மரங்களை ஒட்ட வைக்க முடியாது.

இது ஒரு சபிக்கப்பட்ட தேசம்.

முள்ளிவாய்க்கால் இன்று ஒரு சுற்றுலாத்தளம். இங்கு இறந்த ஆவிகளை பார்க்க சுற்றுலாவிற்கு வருபவர்கள் அதிகமாகிற்று. இங்கிருந்து உயிரை மட்டும் எடுத்துக்கொண்டு உடைமைகளையும் உறவுகளையும் விட்டுப் போன சிலரும் அவர்களின் நினைவலைகளை தொட்டுணர்ந்து கொள்ள கடற்கரை மணல் வந்தடைகிறார்கள்.

அப்படித்தான் அவனும் அங்கு வந்து கரை ஒதுங்கும் வேடந்தாங்கல். அவன் கண்ணீரின் சுவை கடல் மணல்கள் அருந்தியவை. கொத்துக் குண்டுகள் அவனை மீதமாய் இருக்க விட்டிருக்கின்றது. அவனோடு அவன் தங்கையும் சபிக்கப்பட்டவள். அதனால் தான் இருவரும் யுத்தத்தில் இருந்து தப்பித்துக் கொண்டனர். அவன் தங்கைக்காக வாழும் அண்ணன். தங்கையின் எதிர்காலம் அவன் சுமந்து செல்லும் கனவும் போல ஆகிற்று.

பிரவேற் லிமிட்டட் ஒன்றில் பணிபுரியும் ஈழவன் அவ்வப்போது தன்னை ஒரு எழுத்தாளனாகவும் அடையாளப்படுத்தியவாறு பிம்பமிட்டான். அவன் துன்ப அனுபவமே அவனின் எழுத்தாற்றல் முதிர்ச்சியை வளர்த்து விட்டது. அதை நன்கு உணர்ந்தும் கொள்வான். ‘ஈழவன் சிறுகதைகள்’ ‘ஈழவன் கவிதைகள்’ ‘ஈழவன் புதினக் கதை’ பத்திரிகை, சஞ்சிகை என்று பிரபல்யம் மிகுந்தவை. உலக வாசகர் மத்தியில் ஈழப்பிரச்னையினை கொண்டு சென்ற ஒரு எழுத்தாளனாகவும் காணப்பட்டான். ஈழவனின் சுமையில் ஈழக்கதையில் ‘கடலும் சுமையும்’ பெரும் பங்கு வாய்ந்ததாய் போயிற்று. வாசகர் வட்டம் தூண்டில் புழுவை எதிர்பார்த்து நிற்கும் மீனைப்போல காத்திருந்தனர். தான் பார்த்தவைகளையும், உணர்ந்தவைகளையும் மனதில் பூட்டி வைக்க முடியாமல் எழுத்தால் உயிர் கொடுத்தான்.

வேலை தங்கை புத்தகங்கள் எழுத்துக்கள் என்று அவன் பயணப்பாதை வரையறுக்கப்பட்டன. அவன் வரைந்த எழுத்துக்களில் பெரும்பாலானவை அந்த இடர் நடந்த நிலத்தில் வைத்தே எழுதியவை. அந்த இடம் முள்ளிவாய்க்கால் மணல் குன்றுகள்.

இது ஒருபுறமிருக்க மட்டற்ற அன்பால் தங்கையை தன் உலகாகவும் கொண்டவன். யுத்தம் கொடுத்த மீதி அவள் தான். அவள் மட்டும் தான் என்னையும் காத்தருளுகிறாள். என்பதனையும் காத்திரமாக புரிந்துகொண்டான்.

வற்றாப்பளை கோயில் தெருவில் தென்னை மரங்களின் நடுவில் இடிந்த சுவர்களை கல் வைத்து மூடி தகரங்களால் கூரை மேய்ந்தது அவன் வீடாகும். இருவரும் வாழ அனைத்து வசதிகளாக்கப்பட்ட மாளிகை தான்.

ஓய்வு நேரங்களை எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் பயன்படுத்துவது வழக்கம். சிலவேளைகளில் கடற்கரைக்குச்சென்று கடற்கரை மணல்களில் உள்ளங்கைகளைப்பரப்பி மனங்களை அண்டவெளியில் பறக்கவிட்டு தன் எழுத்தாற்றலுக்கு வலுச்சேர்ப்பான்.

ஒரு நாள் அவன் ஆச்சரியப்பட்டான். கால்களை நீட்டி விரித்து சுவாரசியமாக எழுத நினைத்த ஈழவன் வழமைபோல முள்ளிவாய்க்கால் கடல் மணலை தஞ்சம் புகுந்தான்.

அலைகள் புரண்டோடுகிறது கரைகளை மோதிய பேரலை மணல் மேடுகளை எட்டித்தொட அகங்காரம் கொள்கிறது. கரைகளில் சாத்திய படகுகள் ஓய்வு நிலையை காண்பிக்கிறது. நண்டுகள் மோதும் அலைகளை கடந்து கரைகளில் நகர்ந்து போகிறது. கவிஞனின் காதல் பல உவமைகளை தேடுவது போல கண்கள் இவற்றினை அவதானிக்கின்றன.

கையிலே ஒரு நீல நிறப்போனாவும் கம்பிச் சுருளால் கட்டிய கொப்பி இரண்டும் போதும் அந்த பெரும் கவிஞனுக்கு.

ஒரு மணல் மேடு ஏனைய மணல் மேடுகளை பார்க்கிலும் சற்று உயரம் தான். அதுவொரு கட்டுமரம். பல நாளாய் பயன்படுத்தாத மீன்பிடிப்படகு. அதன் பின்னே ஏதோ சத்தம். யாருமே இல்லாத கடற்பரப்பில் கடலலைக்கு நிகரான முனகல் சத்தம்.

அது மழலையின் முனகலை போல இருந்தது. என்ன அந்த சத்தம் என்று மனதினுள் நினைத்த ஈழவன் கிட்டச் சென்று பார்த்தான். அவனுக்கு அங்கு ஒரு அதிசயம் காத்திருந்தது.

அது ஒரு குழந்தை.... குழந்தை தன்னந்தனியாக விளையாடிக்கொண்டிருக்கின்றது. ஆஹா என்ன அழகான குழந்தை. பட்டுச்சட்டையும் கைகள் நிறைய வளையல்களும் கால்களில் கொலுசும் அவள் அழகிற்கு மேலும் வலுச்சேர்த்தன. மெல்லிய இதழ்களினால் முனங்கும் குழந்தை மணல் வீடு கட்டி விளையாடிக்கொண்டிருந்தது.

குறும்புக் குழந்தையின் தலை ஆடி ஆடி மணலை இரு பிஞ்சுக் கைகளாலும் பிடித்து வீடு கட்டுவது ஈழவன் மனங்களில் மழை பொழிந்தாட்போல இருந்தது. குழந்தை மீது கண்ணை வைத்து விட்டான். அம்மாட்டையும் அப்பாட்டையும் தொடைச்சு போடச் சொல்லுங்கோ’ என்று சொல்ல வேண்டும் என்று மனதினுள் எண்ணினான்.

தங்கச்சி..... தங்கச்சி.. என்று

அருகில் சென்றான்.

நிமிர்ந்து பார்த்த குழந்தை

ம்ம்ம்... ம்ம்ம் ... என்று செவி சாய்த்தது.

‘என்ன செய்றிங்கள்’

‘நான் வீடு கட்டுறன்’

‘வீடு சின்னதாக கிடக்கு உங்களுக்கு காணுமே’

என்று நகைத்தபடி கேட்டான்.

குழந்தை பதில் கூறுவதாக இல்லை

காற்று சற்று பலமாக வீசியது குழந்தையில் பிஞ்சுக் கூந்தல் காற்றில் அசைந்தாடியது.

தனியவோ வந்தனீங்கள்”

“அப்பா அம்மா அவயள் எங்க”

“அம்மா அப்பா அங்க இருக்கினம்” என்று கடலை பிஞ்சு சுட்டுவிரலால் சுட்டிக்காட்டினாள்.

ஈழவனுக்கு ஒன்றும் புரியவில்லை. முள்ளிவாய்க்கால் கடல் அலைகள் வாரி வாரி வீசி கரைகளை பலமாக அடித்தது. தலையை சொறிந்தபடி குழந்தையை பார்த்தான். அழகின் உருவாய் தெய்வீக மகளாய் மணல் வீட்டை கும்பியாக குவித்து கட்டி முடித்திருந்தான்.

“நான் போய்ற்று வாரன் அண்ணா” பிஞ்சு கைகளை உரசி கையில் ஒட்டியிருந்த மணல்களை தட்டிக்கொண்டு கடலை நோக்கியவாறு ஓடியது குழந்தை.

“எங்கே போறிங்கள்................

அங்க கடலிருக்கு போக வேண்டாம்”

என்று கூறி பின் தொடர்ந்தான் ஈழவன். குழந்தை கடல் இறங்கி சடார் என்று காணாமல் போனது. ஆச்சரியத்தின் உச்சத்தை தொட்ட ஈழவன் திகைத்துப் போனான். நடந்ததை உணர மறுத்தான். நடந்தது உண்மையா என்று தன்னைத்தானே கேள்விகள் கேட்டான். குழந்தையின் முகம் மனதில் இருந்து அழியவே இல்லை.

“அது அவனின் மனப்பிம்மை!”

“இம் மண்ணில் இப்படி பல குழந்தைகளைக் காணவில்லை!”

பொழுதும் சாய்ந்து சூரியன் மறைந்தது. கடலின் ஆரவாரம் குறைந்து கடலும் கரையும் சமாதானப்பட்டது. குழந்தையிருந்த இடத்தில் கட்டுமரத்தைப் பார்த்தான். கட்டுமரம் தனித்து நின்றது. கட்டுமரத்தின் அருகில் மணல் வீடு எழுந்தருளியிருந்தது.

தங்கை தனியா இருப்பாள் என்பதால் வீடு நோக்கிப் புறப்பட்டான். அந்த சம்பவத்தை குறியீடாகக் கொண்டு தன் புதிய நாவலையும் ‘மணல் வீடு’ எனப் பெயர் வைத்து ஆரம்பித்தான்.

# மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள்

# பி. மாணிக்கவாசகத்தின் நூல்பற்றி...

**கணபதி சர்வானந்தா**






பிரபல ஊடகவியலாளரான பி. மாணிக்கவாசகம் எழுதிய "மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள்" என்ற நூல் கடந்த டிசம்பர் 3 ஆம் திகதியன்று மன்னார் நகரசபை மண்டபத்திலே வெளியிடப்பட்டது. எமது சமூகத்தில் மேலெழத் துடிக்கும் ஒரு சாரார் பற்றி எழுதப்பட்ட நூல் மட்டுன்றி அவர்கள் தொடர்பில் சமூகம் அறிந்திருக்க வேண்டிய அரிய பல தகவல்களையும் உள்ளடக்கியிருக்கிறது. "சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம்" அன்று இந்நூல் வெளியிடப்பட்டிருப்பதை ஒரு பொருத்தமான நிகழ்வு என்று குறிப்பிடலாம். வீ கான் (WeCan) மாந்தை மேற்கு மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வெற்றிச்செல்வி சந்திரகலா தலைமையில் அவ் வெளியீடு நடைபெற்றிருக்கிறது.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வியலையும் அவர்களின் உள்ளக் கிடக்கைகளையும் வெளிப்படுத்துகின்ற இந்த நூலை எழுதிய நூலாசிரியர் பி.மாணிக்கவாசகம் குறித்தும், அவரது ஊடகப் பணி பற்றியும் தமிழ் உலகம் நன்கு அறியும். அவர் பயணித்த ஊடகப் பாதையிலே அவர் கண்டு அனுபவித்த பல நிகழ்வுகளும் சம்பவங்களுமே இந்த நூலை எழுதவேண்டும் என்ற பேராவலை அவருக்குள் தூண்டியிருக்க வேண்டும். அதனை உறுதிப்படுத்துவதாக அந்நூலுக்கு அணிந்துரை எழுதியிருக்கும் சென்னைப் பல்கலைக் கழக அரசியல் பொது நிர்வாகத்துறையைச் சேர்ந்த பேராசிரியர் இராமு மணிவண்ணன் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

இப் புத்தகத்தின் தலைப்பே மாற்றத்தை நாடும் மாற்றுத் திறனாளிகளின் அனுபவ ரீதியான சிந்தனைகளைத் தெரிவிப்பதோடு, ஈழத் தமிழர்களின் அசாதாரண வாழ்க்கைச் சூழலையும் எடுத்துரைக்கின்றது. எழுபதாண்டுகால உரிமைப் போராட்டங்களும், முப்பதாண்டுகால ஆயுதப் போராட்டமும் எவ்வளவு ஆழமான மாற்றங்களை உருவாக்கக் கூடும் என்பதையும் உயிர்ச் சேதங்கள், உடற் சிதைவுகள், மனவலிகள், காயங்கள், இடம் பெயர்தல் என எத்தனையோ சோதனைகளைக் காலம் கற்பித்துக் கொண்டிருக்கிறது. போரும் வாழ்க்கையும் என்று சொன்னால் கூட இப்புத்தகத்திற்குப் பொருந்தும். ஆனால் மாணிக்கவாசகம் அவர்களின் புத்தகம் வாழ்க்கையே ஒரு போர் எனச் சித்திரிக்கின்றது. மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்றத்தை மட்டுமே வேண்டுவது இப் புத்தகத்தின் நோக்கமல்ல. நீதி தேடும் ஒரு சமூகத்தின் வாழ்வியல் சூழலையும் சமூக நிலைப்பாடுகளையும் உளவியல் ரீதியாக சமூக அறிவியல் ஆராய்ச்சி நோக்குடன் எழுதப்பட்ட புத்தகமாகும். வடக்கில் மட்டுமே 45000 மாற்றுத் திறனாளிகள். அத்தோடு 40000 க்கும் அதிகமான விதவைப் பெண்கள் இருக்கிறார்கள் என்றதை அறிய வரும்பொழுது இப் புத்தகத்தின் முக்கியத்துவத்தை நாம் உணர்கிறோம் - என அவர் அந்த அணிந்துரையிலே சுட்டிக் காட்டியிருக்கிறார்.

**இயலாமைக்குள்ளேயும் அவர்களில் மறைந்து கிடக்கின்ற இயலுமைகளையும், ஆற்றல் வலிமைகளையும் வெளிக் கொணர்ந்து அவர்களை சமூகத்தின் வளம்மிகுந்த ஒரு பிரிவினராக மாற்றுவதற்குப் போதிய அளவிலான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை. இது ஒரு தேசிய குறைபாடாகும்.**

மாற்றுத்திறனாளிகள் வாழ்க்கைப் போராட்டத்தைச் சித்திரிக்கும் வகையில் சிரேஷ்ட ஊடகவியலாளர் பி. மாணிக்கவாசகம் எழுதியுள்ள இந்த நூல் வாசிக்கும் அனைவருடைய மனச்சாட்சிகளையும் தொடுகின்றது. இவர்களுக்காக நாம் என்ன செய்தோம்? என்ற குற்ற உணர்ச்சியையும் வாசகர்களுக்குத் தூண்டிவிடுகிறது. மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கை நிலைமேம்பட எம்மால் என்ன செய்ய முடியும்? என அவர்களைச் சிந்திக்க வைக்கிறது. இதுதான் மாணிக்கவாசகம் அவர்களுக்குக் கிடைத்த வெற்றி - என ஈழநாட்டின் பிரதம ஆசிரியர் பாரதி இராஜநாயகம் அந்நூலுக்கு "ஊடகப் பணிக்கு மேலாக ஒரு சமூகப் பணி" என்ற தலைப்பில் வழங்கிய ஆசிச் செய்தியிலே குறிப்பிட்டிருக்கிறார்.

எமது செய்தியாளர் பி.மாணிக்கவாசகம் வீரகேசரி இதழில் எழுதிய மாற்றத்தை நாடும் மாற்றுத் திறனா ளிகள் என்ற கட்டுரைத்தொடர் நூலுருப் பெறுவது மகிழ்ச்சிக்குரியது. இரண்டு மாதங்களுக்கு மேலாக "வாழ்க்கைக்கும் வாழ்வதற்கும் போராடுபவர்கள் பற்றிய தொடர்" என்ற மகுட வாசகத்துடன் நாளாந்தம் வெளிவந்த இக் கட்டுரைத் தொடர் பல தரப்பட்ட வாசகர்களையும் கவர்ந்திருந்தது. அவருடைய எழுத்து நடையும் விடயங்களை ஆழ்ந்து கூர்ந்து நோக்குகின்ற பார்வையுமே இதற்கு முக்கிய காரணம் - என வீரகேசரியின் பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன் "சமூகத்தின் நலிவுற்ற மக்களின் குரலாகச் செயற்படுபவர்" என்ற தலைப்பிலே எழுதிய வாழ்த்துச் செய்திலேயே குறிப்பிட்டிருக்கிறார்.

நாடறிந்த எழுத்தாளரும், கவிஞரும், மாற்றுத் திறனாளிகளுக்கான சமூகச் செயற் பாட்டாளருமாகிய வெற்றிச் செல்வியின் ஊடாகவே மாற்றுத் திறனாளிகள் பக்கம் எனது கவனம் திரும்பியது. மாற்றுத் திறனாளிகள் பலரைத் தொடர்பு கொள்ள உதவிய அவருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாற்றுத் திறனாளிகளுக்கான ஓர் ஒன்றுகூடலில் அவர்களில் பலரைச் சந்தித்து உரையாடிய போது, அவர்களின் அங்க இழப்புகளை மட்டுமல்லாமல் அகப்புற நிலைமைகளிலான அவர்களது வலிகளையும் பல் வேறு இழப்புகளையும் என்னால் அறிய முடிந்தது. அவர்களின் தீராத வலிகள், எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள், ஏமாற்றங்கள் என்பன என்னில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அந்தவகையில் என்னுள் முகிழ்த்த மாற்றுத் திறனாளிகள் பற்றிய விழிப்புணர்வின் விளைவே "மாற்றத்தை நாடும் மாற்றுத் திறனாளிகள்" என்ற இந்த நூலின் உருவாக்கம்.

முப்பது வருடங்கள் தொடர்ந்த உள்நாட்டு ஆயுத முரண்பாடு நாட்டின் இயலாமை மிக்கவர்களின் எண்ணிக்கையைச் சடுதியாக அதிகரிக்கச் செய்து விட்டது. ஆனால் இயலாமைக்குள்ளேயும் அவர்களில் மறைந்து கிடக்கின்ற இயலுமைகளையும், ஆற்றல் வலிமைகளையும் வெளிக்கொணர்ந்து அவர்களை சமூகத்தின் வளம்மிகுந்த ஒரு பிரிவினராக மாற்றுவதற்குப் போதிய அளவிலான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்வில்லை. இது ஒரு தேசிய குறைபாடாகும். ஒரு தேசிய பலவீனம் என்று கூட குறிப்பிடலாம். இந்த நூலில் போரினால் பாதிக்கப்பட்ட பல தரப்பினரைத் தரிசிக்க முடியும். அவர்கள் வெளிப்படுத்தியுள்ள உண்மைகளும், உள்ளக்கிடக்கைகளும் முக்கியமானவை. இந்த நூலில் முன்னாள் போராளிகள், அப்பாவிகளான சிறுவர்கள், சாமான்யர்கள் எனப் பலதரப்பட்டவர்களைச் சந்திக்கலாம் என அந்நூலுக்கான என்னுரை என்ற தலைப்பிடப்பட்ட தன்னுரையிலே நூலாசிரியர் பி.மாணிக்கவாசகம் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

உடல் நலக்குறைவு காரணமாக நிகழ்வில் நூலாசிரியர் நேரில் கலந்து கொள்ளவில்லை. அதனையடுத்து, இணைய நிகழ் வழியாக ஏற்புரையுடன் நன்றியுரையாற்றிய நூலாசிரியர், மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள் நூலின் கட்டுரைகளை எழுத நேர்ந்த அவசியம், நூலாக்க முயற்சிகள் என்பன பற்றி விபரித்தார். அந்த நிகழ்வின் நிகழ்ச்சிகள் முழுவதும் முகநூல் வழியாகவும், இணைய நிகழ் நிலையாகவும் பொது வெளியில் பகிரப்பட்டதைக் காணக் கூடியதாக இருந்தது.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தான்

நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

13. தரப்பட்ட கூற்றை அடிப்படையாகக் கொண்டு தவறான விடையைத் தெரிவு செய்க.

**சுமதியின் வகுப்பில் உள்ள அனைவரும் பாட்டுப் பாடுவார்கள். அவர்களுள் பரதன் நன்றாகப் பாடும் திறமையைக் கொண்டிருந்தான்.**

(1) சுமதியை விட பரதன் நன்றாகப் பாட்டுப் பாடுவான்.
(2) பரதன் சுமதியின் வகுப்பில் கல்வி கற்கின்றான்.
(3) பரதனின் வகுப்பில் உள்ள அனைவரும் ஆண்கள் ஆவர்.

14. வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய விடையைத் தெரிக.

| | | | |
|---|---|---|---|
| H | G | F | E |
| P | | | M |
| I | | | L |
| A | B | C | D |

(1)


| | |
|---|---|
| N | O |
| K | J |

(2)

| | |
|---|---|
| O | N |
| J | K |

(3)

| | |
|---|---|
| N | O |
| J | K |

15. 


கடிகாரம் X முற்பகல் நேரத்தையும் கடிகாரம் Y பிற்பகல் நேரத்தையும் காட்டுகின்றது. எனின் இரு கடிகாரமும் காட்டும் நேரத்தின் வித்தியாசம் யாது?

(1) 3 மணித்தியாலம் 40 நிமிடங்கள்
(2) 15 மணித்தியாலம் 40 நிமிடங்கள்
(3) 12 மணித்தியாலம் 10 நிமிடங்கள்

- **கமல், ராமு, வசி, அஜித் ஆகிய நான்கு நண்பர்கள் நாற்சந்தியில் நின்று விட்டு பிரிந்து சென்ற விபரம் தரப்பட்டுள்ளது.**

- கமல் என்பவர் வடக்குத் திசையில் சென்றார்.
- ராமு என்பவர் கமல் சென்ற திசைக்கு எதிர்த்திசையில் சென்றார்.
- வசி என்பவர் கிழக்குத் திசையில் சென்றார்.
- அஜித் என்பவர் கமல், வசி சென்ற திசையின் மத்தியிலுள்ள திசைக்கு எதிர்த்திசையில் சென்றார்.

16. அஜித் சென்ற திசை யாது?

(1) வடமேற்கு (2) தென்கிழக்கு (3) தென்மேற்கு

17. 100 தொடக்கம் 110 வரை உள்ள எண்ணும் எண்களை இலக்கத்தில் எழுதும் போது பூச்சியம் எழுதப்படும் எண்களின் எண்ணிக்கை யாது?

(1) 12 (2) 11 (3) 10


18. பின்வரும் படங்களின் உதவியுடன் மாணவன் ஒருவன் கூறிய தகவல்களில் தவறெனக் கொள்ள முடியாத கூற்றைத் தெரிவு செய்க.



| பேசின் | கேத்தல் | குடம் | கோப்பை | கூசா |
|---|---|---|---|---|
| 5*l* | 2*l* 50*ml* | 10*l* 750*ml* | 350*ml* | 1*l* 750*ml* |

(1) கேத்தலில் உள்ள நீரையும் கோப்பையில் உள்ள நீரையும் சேர்த்தால் 2*l* 850*ml* வரும்.
(2) பேசின், குடத்தில் உள்ள நீரின் மொத்த அளவு 15*l* 750*ml* ஆகும்.
(3) கூசா, கோப்பையில் உள்ள நீரின் மொத்த அளவு 2050*ml* ஆகும்.

19. அருகே தரப்பட்டுள்ள கனவுருவில் புள்ளிக் கோடிடப்பட்ட பகுதி வெட்டி நீக்கப்பட்ட பின் காணப்படும் பக்கங்கள், உச்சிகளின் எண்ணிக்கைகள் எத்தனை?



(1) பக்கங்கள் - 7 உச்சிகள் - 7
(2) பக்கங்கள் - 7 உச்சிகள் - 6
(3) பக்கங்கள் - 6 உச்சிகள் - 8

## விடைகள்

| | | |
|---|---|---|
| 13. | (3) | பரதனின் வகுப்பில் உள்ள அனைவரும் ஆண்கள் ஆவர். |
| 14. | (2) | O N / J K |
| 15. | (2) | 15 மணித்தியாலம் 40 நிமிடங்கள் |
| 16. | (3) | தென்மேற்கு |
| 17. | (2) | 11 |
| 18. | (2) | பேசின், குடத்தில் உள்ள நீரின் மொத்த அளவு 15*l* 750*ml* ஆகும். |
| 19. | (1) | பக்கங்கள் - 7 உச்சிகள் - 7 |




# 250 கிலோ ஹெரோயினுடன் வெளிநாட்டு கப்பல் சிக்கியது

## அறுவரைக் கைதுசெய்தது இலங்கைக் கடற்படை

கொழும்பு, டிசெ. 12

**சர்வதேசக் கடற்பரப்பில் போதைப்பொருளுடன் வெளிநாட்டுப் பிரஜைகளை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.**

**ஆறு வெளிநாட்டுப் பிரஜைகளை 250 கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப்பொருளுடன் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.**

இலங்கைக் கடற்படையினருக்குக் கிடைக்கப் பெற்ற புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்தச் சந்தேகநபர்களை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

சர்வதேச கடற்பரப்பில் வைத்து மீன்பிடிப் படகு ஒன்று சோதனையிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு 900 கடல் மைல் தொலைவில் வைத்து மீன்பிடிப் படகு ஒன்றில் போதைப்பொருள் கடத்திய சந்தேகநபர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

வெளிநாட்டு சந்தேகநபர்களையும் மீட்கப்பட்ட போதைப்பொருட்களையும் கடற்படையினர் நேற்று இலங்கைக்கு அழைத்துவந்தனர். (இ)

# மூவின மக்கள் அமைப்புகள் ஒன்றிணைந்து சர்வோதய வளாகத்தில் ஒன்றுகூடல் நிகழ்வு

திருகோணமலை, டிச. 12

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மூவின மக்கள் அமைப்புகள் ஒன்றிணைந்து, திருகோணமலை சர்வோதய வளாகத்தில் ஒன்றுகூடல் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்ததுடன் திருக்கோணமலை சர்வோதய வளாகத்திலிருந்து கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் வரை பேரணியும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மக்கள் எதிர்நோக்கும், காணி, விவசாயிகளின் பிரச்சினைகள், அத்தியாவசிய பொருட்களுக்கான விலைவாசி அதிகரிப்பு, மாற்றுத்திறனாளிகள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள், கல்வி, சிறுவர், பெண்கள் உரிமைகள் போன்ற விடயங்கள் தொடர்பிலான கருத்துப் பகிர்வுகள் இடம் பெற்றன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் லீனஸ் வசந்தராஜா, திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் கோ. தனேஸ்வரன், தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, திருக்கோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீதரன், சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், சட்டத்தரணிகள், பொதுமக்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

பேரணியின் முடிவில் ஆளுநரின் செயலாளரிடம் கோரிக்கை அடங்கிய மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. (இ)





# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 - 02 - 1963 | 08 - 12 - 2021 |



## திருமதி தர்மலிங்கம் யோகராணி

பூநகரியைப் பிறப்பிடமாகவும், கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் யோகராணி கடந்த 08.12.2021 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார், தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், கௌசி, இதயகாந், தினேஸ்காந், துளசிகா, யர்சிகா, விமலகாந், தர்சிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், பாஸ்கரன், சஜிவன், டினேஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், கபிசனா, சஜயனா, கஸ்விகா, அபினேஸ் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், காலஞ்சென்றவர்களான ராசதுரை, மகேஸ்வரி மற்றும் சின்னழகு, பழனி, சந்திரன், ரவி, கடவுள், ராயேஸ்வரி, பிரதீப் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திலகவதி, செல்லம்மா, பரம்சோதி, மங்கையர்க்கரசி, தவமலர், சின்னதம்பி, புவனேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு அண்ணியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு :
**டினேஸ் (மருமகன்) - 0033698185455**
**இதயகாந் (மகன்) - 0033749113647**
**டினா (மகன்) - 0777706796**
**கௌசி (மகள்) - 0772104283**
**ரவி (மைத்துனர்) - 0033768667371**


# பல்லவராயன்கட்டில் விடுவிக்கப்பட்டுள்ள காணிகளைப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை

கிளிநொச்சி, டிச. 12

கிளிநொச்சி, பல்லவராயன் கட்டுப் பகுதியில் வனவளத் திணைக்களத்தின் பிடியிலிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முயற்சியால் விடுவிக்கப்பட்ட காணிகளைப் பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகளை அவரது இணைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான வைத்தியநாதன் தவநாதன் முன்னெடுத்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தா முயற்சியால் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்பவற்றின் பிடியிலிருக்கும் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளை மக்கள் பாவனைக்கு விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காணி அமைச்சரைப் பணித்திருந்தார்.

இதில், பூநகரி பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள பல்லவராயன்கட்டுப் பகுதியிலுள்ள சுமார் 100 ஏக்கர் காணியை அந்தப் பகுதியில் தகுதிவாய்ந்த மக்களுக்கு பிரித்தளிப்பதற்கான பதிவுகள் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான வைத்தியநாதன் தவநாதன் முன்னிலையில் பூநகரி பிரதேச செயலாளர் கிருஷ்ணேந்திரன் தலைமையிலான அலுவலர்கள் பயனாளிகள் பதிவை மேற்கொண்டனர்.

இந்தப் பதிவுகளின் அடிப்படையில் பொருத்தமான பயனாளிகள் உரிய முறையில் தெரிவுசெய்யப்பட்டு, விரைவில் கடற்றொழில் அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவால் காணிகள் பொதுமக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

முன்னதாக, பூநகரி பிரதேச செயலக பிரிவில் ஜெயபுரம் பகுதியில் 130 ஏக்கர் காணியும், கௌதாரிமுனை பகுதியில் 100 ஏக்கர் காணியும், கரைச்சிப் பிரதேச செயலக பிரிவில் ஸ்கந்தபுரம் பகுதியில் சில தனியாரின் அத்துமீறிய ஆக்கிரமிப்பின் கீழிருந்த 196 ஏக்கர் கரும்புத் தோட்டக் காணியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் விடுவிக்கப்பட்டு நெற்செய்கைக்காகக் காணிகளற்ற பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

மேலும், கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் ஆனைவிழுந்தான் பகுதியில் 300 ஏக்கர் காணியை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் அதுவும் அந்தப் பகுதி காணிகளற்ற மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இவை தவிரவும், கண்டாவளை, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுகளிலும் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணி களை விடுவிக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முயற்சியால் ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(இ)

# மோடியின் அழைப்பும்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணமும் - அது நியாயப்படுத்த இயலாததெனினும் - சம்பந்தனுக்கு இருந்திருக்கக் கூடும். புதிய அரசியலமைப் பொன்று வரையப்படுவதாக கூறப்படுகையில், அதில் இடம் பெறவைக்கவேண்டிய தமிழ் மக்களின் முக்கியமான அரசியல் அபிலாஷைகளை ஜனாதிபதியுடன் நேரடியாக சந்தித்து வெளிப்படுத்தவியலாமல், எல்லா அரசியல் கட்சிகளையும் போலவே, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் இப் பிரதான கட்சியும் இப் பிரேரணைகளைக் கையளித்திருக்கிறது.

ஆக, கோட்டாபய அரசின் புதிய அரசியலமைப்பு சம்பந்தனின் கோரிக்கைகளை உள்ளடக்குகிறதோ இல்லையோ, 'சம்பந்தன் பிரேரணை' என்று கூறுமளவிலாவது அது இலங்கை அரசியலின் வரலாற்று பட்டியலில் இடம் பெறவேண்டும் என்பது சம்பந்தனின் மேலான அவா. இது, அரசியல் வட்டாரங்களில் நம்பப்படும் ஒரு யூகம். யுத்த கெடுபிடிவேளையில் உருவான 13ஆவது திருத்தச் சட்டத்தில் அமிர்தலிங்கமும் இணைந்திருந்தார்.

இதுவோ அல்லது எது இந்திய பிரதமரின் அழைப்பு தொடர்பிலான சம்பந்தனின் செயல்பாட்டுக்கு காரணமாக விருந்தாலும், காலம் கடத்தும் சிங்கள இராஜதந்திரத்தின் வெற்றி, இனி இன்னும் நன்றாகவே வானில் மின்னித் தெரியும்.

'நல்லவர் செய்யாததை நாள்கள் செய்யுமா.....?'

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்

மலர்வு 14 - 07 - 1932



உதிர்வு 01 - 12 - 2021

### திருமதி ஆறுமுகம் இராசமலர்

யாழ். சுதுமலையைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய், கனடா Brampton ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இராசமலர் அவர்கள் 01.12.2021 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகலிங்கம் - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா அன்னப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சின்னகுட்டி செல்லையா அவர்களின் வளர்ப்பு மகளும்,காலஞ்சென்ற சுப்பையா ஆறுமுகம் அவர்களின் பாசமிகு மனைவியும், செல்வராசா, கந்தசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசமணி, சிவக்கொழுந்து, வேலாயுதம் மற்றும் அன்னலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், கமலாதேவி (இலங்கை), சண்முகநாதன்(இலங்கை), கமலநாதன் (ஜேர்மனி), விமலநாதன்(கண்ணன் - கனடா), விமலா தேவி (மல்லிகா- கனடா), கலா(உமா- கனடா), ரகுநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறீஸ்காந்தன் (இலங்கை), சிவசாந்தி (இலங்கை), ஜெயலக்ஸ்மி (ஜேர் மனி), அகிலா (கனடா), செந்தில்குமார் (கனடா), சத்திய நாதன் (கனடா), சுமணலதா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், செல்வமயூரன்- றீகன்யா, ராஜா - ஜெறின், பிரியா - பெஞ்ஜமின், சுகன்யா, பிரசன்னா- கார்த்திகா, வர்சி, அருண், அஷோக், அகிம்சன்- சாரா, யோன், ஏனோக், டானியேல், யோசுவா, நர்த்தனன்- ருஜாந்தி, கஜன், நிரோச், கபில், கிஷோக், துளசி, மதுஷா, கிபிஷா, லக்சிகா ஆகியோரின் பாசமிகு பேத்தியும், ஆஷாப், சலோமி, யோசுவா, எலைஜா, சோபியா, அஷ்வின், ஆதனா, அக்ரம், ஹசான், யூசப், யோனஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

*பார்வைக்கு*
Saturday, 11 Dec 2021 6:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*கிரியை*
Sunday, 12 Dec 2021 8:00 AM - 10:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*தகனம்*
Sunday, 12 Dec 2021 10:00 AM - 11:00 AM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**கண்ணன்(விமல்) - மகன்**
Mobile : +15142145757

*தகவல்:*
**குடும்பத்தினர்.**




## மரண அறிவித்தல்

மலர்வு 05 - 03 - 1940



உதிர்வு 09 - 12 - 2021

### செல்வநாதன் அந்தோனிபிள்ளை
(பீற்றர்)

யாழ்ப்பாணம் முத்திரை சந்தியைப் பிறப்பிடமாகவும், டென்மார்க் Vejle ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாதன் அந்தோனிபிள்ளை அவர்கள் 09.12.2021 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிபிள்ளை - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராஜா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவி அவர்களின் பாசமிகு கணவரும்,ரஞ்சன், கேசவன், சுஜீவன், பத்மினி (ஜேர்மனி), சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும்,காலஞ்சென்றவர்களான சவுந்திரவதி, லீலாவதி, பெனடிற் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நிர்மலா, கருணாகரன்(ஜேர்மனி), ரஞ்சித்குமார், வக்சலா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான செல்வராஜா, திருச்செல்வம், தயாளம், சண்முகலிங்கம், சிவலிங்கம், கிரிஜாதேவி, பாலச்சந்திரன், விஜயன் மற்றும் மலர்தேவி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரம்மியா, றபானா, ரவீனா, சொன்யா, சோபிகா, காலஞ் சென்ற சாம், விக்ரோறியா, ஜெனிபர், ஆகாஷ், அஜித், அஜய், அஜித்தா, பிரியன், சைலா, மாயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

*திருப்பலி*
Wednesday, 15 Dec 2021 10:00 AM - 12:00 PM
Sct. Norberts Kirke Fjellegade 2, 7100 Vejle, Denmark

*நல்லடக்கம்*
Wednesday, 15 Dec 2021 12:00 PM - 1:00 PM
Vejle Churches and Cemeteries Havelodden 4, 7100 Vejle, Denmark

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**ரஞ்சன் - மகன்**
Mobile : +4526139286

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

மலர்வு 06 - 03 - 1935



உதிர்வு 07 - 12 - 2021

### இராஜேந்திரன் சுப்ரமணியம்

Ret. PWD inspector- Sri Lanka

யாழ். சங்கானையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, கட்டுவன், ஜேர்மனி Munich, கனடா Toronto, Peterborough ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேந்திரன் சுப்ரமணியம் அவர்கள் கடந்த (07.12.2021) செவ்வாய்க்கிழமை அன்று கனடா Peterborough இல் காலமானார்.

அன்னார் சங்கானையைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்ரமணியம் - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், கட்டுவனைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவநேசமணி (சிவனி- கனடா) அவர்களின் பாசமிகு கணவரும், Dr. பகீரதன் (பகீ- கனடா), பார்த்தீபன் (தீபன்ராஜ்- கனடா), பராசுரன் (பரா- கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, குலேந்திரன் மற்றும் வரதராஜா (ஜேர்மனி), சந்திரா (ஓய்வுநிலை ஆசிரியை- இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலகௌரி (கனடா), ரோசானி (கனடா), ஆரனியா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், நல்லம்மா மற்றும் சர்வானேந்தேஷ்வரி, மகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சிறிரஞ்சன், சிறீரஞ்சினி (இலங்கை), ஜெயந்தினி (டென்மார்க்), சாந்தினி (இலங்கை), ரஜனி(நோர்வே), வதனி (ஐக்கிய அமெரிக்கா), மோகன் (நோர்வே) ஆகியோரின் தாய் மாமனாரும், சகிலா (பிரித்தானியா), சதீசன் (பிரான்ஸ்), தர்மியா (ஜேர்மனி) ஆகியோரின் பெரியப்பாவும், காலஞ்சென்ற துரைராஜா, சற்குணநாதன், குணரட்ணம், தேவராஜா, செகராஜா, தியாகராஜா, செல்வராஜா(பிரித்தானியா), சிவராஜா (பிரித்தானியா), சிவஞானமணி (கனடா), செல்வராணி (கனடா), ரஜனி (பிரான்ஸ்), சாந்தினி (பிரித்தானியா), அமுதினி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற புவனேஸ்வரி, இரத்தினபூபதி, புஷ்பமலர் மற்றும் இந்திராதேவி (இலங்கை), மல்லிகாதேவி (இலங்கை), கலாசிறி (பிரித்தானியா), தனலக்சுமி (பிரித்தானியா) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், யோகலிங்கம் (கனடா), பிரேமானந்தன் (கனடா), விநாயகமூர்த்தி (பிரான்ஸ்), குணரட்ணம் (பிரித்தானியா), சூரியகுமார்(கனடா) ஆகியோரின் சகலனும், இஷான், அஷ் வின், றயன், றியான, ரோனிக்கா, மகிழன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

*பார்வைக்கு*
Saturday, 11 Dec 2021 4:00 PM - 8:00 PM
Sunday, 12 Dec 2021 4:00 PM - 8:00 PM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada

*கிரியை*
Monday, 13 Dec 2021 8:00 AM - 12:00 PM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada

*தகனம்*
Monday, 13 Dec 2021 12:00 PM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**பராசுரன்(பரா) - மகன்**
Mobile : +16479983132

*தகவல்:*
**குடும்பத்தினர்.**







*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
பகல்
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-ப்ரண்ட்ஸ்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்




7.00 மணி : SPOTLIGHT – ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்-பாட்டளி சம்பிக்க ரணவக்க



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : செல்லாடுகளம் -எங்கள் சமூகத்தில் ஆங்கில திறன் விருத்தி



10.00 மணி: -நேர்கொண்ட பார்வை

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள்
(மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம்
(திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு